வெளியீடு 9-4-2007

Issued 9-4-2007

810
05/4/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜனவரி 23, 2007—தொகுதி 19—எண் 2

Tuesday the 23rd January, 2007 — Volume 19—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V2,1,3;1 P07
P07.19.2
227482

[Price Rs. 3.00

## 23-1-2007

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| 1. | **வினாக்கள்-விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 149-182 |
| 2. | **அறிக்கைகள் அளித்தல்—** | |
| | (அ) பொதுக் கணக்குக் குழு | 182 |
| | (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 182-183 |
| 3. | **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| | தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 183 |
| 4. | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 184-252 |
| | திரு. சை. சையது கௌஸ் பாஷா | 184-190 |
| | திரு. சி. ஞானசேகரன் | 190-203 |
| | திரு. அ. தமிழரசு | 203-210 |
| | திரு. வே. மாரிமுத்து | 210-216 |
| | திரு. கு. சின்னதுரை | 216-220 |
| | *திரு. சு. குணசேகரன் | 220-226 |
| | திரு. மா. ராஜசேகரன் | 226-232 |
| | *திரு. து. ரவிக்குமார் | 233-241 |
| | *திரு. கே. திருநாவுக்கரசு | 241-246 |
| | டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் | 246-252 |

பக்கங்கள்

5. **அரசினர் தீர்மானம்—**

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல் — 252-253

6. **அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 253-255

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 253,254

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 255-256


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 9, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஜனவரி 23, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு"*

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11. (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்துநின்று கோஷமிட்டனர்.)

கேள்வி நேரத்தில் இதுவெல்லாம் எதுவுமே இருக்கக்கூடாது. அதுதான் மரபு. (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்திலே இதெல்லாம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) இது மரபு மீறிய செயல். Rules–க்கு against ஆக உள்ளது. (குறுக்கீடுகள்) நீங்கள் அவை நடவடிக்கைக்கு நிரம்ப குறுக்கீடு பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்) இடையூறு பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்) Not allowed. சபையை நடக்கவிடாமல் இடைஞ்சல் பண்ணுகிறீர்கள்.

([illegible]திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் [illegible] அவையிலிருந்து வெளியேறினர்.)

[2007 ஜனவரி 23

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(வெளியேறிய உறுப்பினர்கள் லாபியிலிருந்துகொண்டு கோஷமிட்டனர்.)*

லாபியிலிருந்து யாரும் கத்தக் கூடாது. அவைக் காவலர்கள், முதலில் அவர்களை வெளியே போகச் சொல்லுங்கள்.

வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### காற்றாலை மின்சாரம்

***1177—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் காற்றாலைகள் அமைத்து மின்சாரம் தயாரிக்கும் தனியார் நிறுவனத்தினர், தொழில் வரி, உற்பத்தி வரி, கட்டட அனுமதி வரி, கட்டட வரி போன்ற வரிகளைத் தொடர்புடைய ஊராட்சி மன்றங்களுக்கு முறையாகச் செலுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காற்றாலை உரிமையாளர்களிடமிருந்து தொழில் வரி, உற்பத்தி வரி, கட்டட அனுமதி வரி, கட்டட வரி போன்ற வரிகளை வசூல் செய்வதற்கு, அந்தந்த ஊராட்சி மன்றங்களே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுபோன்ற வரிகளைக் காற்றாலை உரிமையாளர்களிடமிருந்து பிடித்தம்செய்து, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குச் செலுத்துவதற்குச் சட்டத்தில் இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே, இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், அதிகமாகக் காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்யப்படுகின்ற இடம் கன்னியாகுமரி

227482
சென்னை 600 008



2007 ஜனவரி 23]

மாவட்டத்தில் ஆரல்வாய்மொழிப் பகுதி. அதற்கு அடுத்ததாக, நெல்லை மாவட்டத்தில் ராதாபுரம் பகுதியில், மிக அதிகமாகக் காற்றாலைகள் உள்ளன. இந்தக் காற்றாலைகள், ஆறு மாதத்திற்கு ஒரு முறை, ரூபாய் 1,250 வரியாகவும், அதுபோல அங்கே வேலை செய்கின்றவர்கள் தொழில் வரியும், அதேபோல உரிமைக் கட்டணம், புதிதாகக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்றால் ஊராட்சியினுடைய அனுமதி இவற்றைப் பெற வேண்டுமென்று விதி இருந்தாலும்கூட, இந்த நடைமுறையை எந்தக் காற்றாலை நிறுவனர்களோ, அதை நிர்வகிக்கின்றவர்களோ பின்பற்றுவது கிடையாது. என்னுடைய தொகுதியில் மட்டும், இருபதுக்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில், இவ்வாறு நிலுவையில் இருக்கின்ற பணம், கிட்டத்தட்ட ஒரு பஞ்சாயத்திற்கு, ஆண்டிற்கு இரண்டு முதல் ஐந்து இலட்சம் ரூபாய் வரை—கிட்டத்தட்ட ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் 20 இலட்சம் ரூபாய் வரை—கட்டண பாக்கி இருக்கிறது. இந்தக் கட்டண பாக்கிகளைப் பஞ்சாயத்துத் தலைவர்கள், மிகப் பெரிய கம்பெனி ஆலை அதிபர்களிடம் சென்று பெற்றுவர முடியாது. அந்தக் காற்றாலை நிறுவனர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு ரூ.2.90 வீதம் அரசு அவர்களுக்கு நிதி வழங்குகின்றது. அந்த நிதியைக் கொடுக்கும்போது, அந்தந்தப் பஞ்சாயத்துகளில் வரி பாக்கி இல்லை என்ற ஒரு N.O.C.-யைப் பெற்ற பின்பு, நீங்கள் மின்சார வாரியத்திலிருந்து அந்தப் பணத்தை விடுவித்தால், நிச்சயமாக எல்லோரும் இந்தக் கட்டணத்தைக் கட்டிவிடுவார்கள். கட்டணமும் மிகக் குறைந்த கட்டணம். ஒரு காற்றாலை நிறுவனத்திற்கு 10 காற்றாலைகள் இருந்தாலும், ஆறு மாதங்களுக்கு 1,250 ரூபாய்தான். அந்தக் கட்டணத்தைக்கூட கட்ட மறுக்கின்றார்கள். ஆகவே, ஊராட்சிமன்றத்தில் N.O.C பெற்றால்தான், பணத்தை விடுவிப்போம் என்று சட்டத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் தளர்த்திக் கொண்டுவந்தால்தான், அந்த ஊராட்சிகளுக்கு வரவேண்டிய நிதி கிடைக்கும். இல்லையெனில், ஊராட்சிகள் கட்டவேண்டிய மின் கட்டணத்திலாவது நீங்கள் இவற்றை வரவு வைத்தால்கூட, ஒவ்வொரு ஊராட்சியிலும் தெரு விளக்கு போன்றவற்றுக்கு...

*(முற்பகல் 9–35)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இது ஒரு முக்கியமான கேள்வி. நீண்ட நாளைய பிரச்சினை. ஆகவே, ஏதாவது ஒரு வழியில், இந்த மின் கட்டணத்தில், இந்த ஊராட்சிமன்றங்களுக்குக் கிடைக்கக்கூடிய வரி கிடைப்பதற்கு ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

D
V2 11,31 Po
Po7. 19. 2

[2007 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள், நல்ல அனுபவம் வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர். ஒரு கிராமத்திலே வீடு கட்டினால் அந்த வீட்டு வரியை அந்தக் கிராமத்திலே அவர்கள்தான் வசூலிக்கவேண்டும். ஒரு கிராமத்திலே தொழிற்சாலை அமைத்தால், அந்தத் தொழிற்சாலைக்கான வரியையும் அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய தலைவரோ, நிர்வாகமோதான் வசூலிக்கவேண்டும். அதைப்போலத்தான், காற்றாலைகள் அமைத்தால்கூட, அந்தக் காற்றாலைக்கான வரியை, அந்த ஊராட்சிமன்றம் நிர்ணயம் செய்து, அவர்களேதான் வசூலிக்க வேண்டுமே தவிர, இதையெல்லாம் மின்சார வாரியம் வசூலிக்க ஆரம்பித்தால், பிறகு வரி வசூல் செய்வது மின்சார வாரியத்திற்கு ஒரு வேலையாக அமைந்துவிடும். அதுமட்டுமல்ல; மின்சார வாரியச் சட்டம், 2003-ன்படி, இந்த வரியையெல்லாம் வசூலித்து ஊராட்சிமன்றங்களுக்கு வழங்குவதற்குச் சட்டத்திலே எந்தவிதமான விதிமுறைகளும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் தயாரிக்கப்படுகின்ற மின்சார வசதி, ராதாபுரம் தொகுதிக்கு அடுத்து, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலேதான்; இப்பொழுது மிகப் பரவலாக அவை நிறுவப்பட்டு வருகின்றன. அவை நிறுவப்படுகின்றபோது, காற்றாலையை நிறுவுகின்ற அந்தக் காற்றாலையின் உரிமையாளர்கள், பொது இடங்களிலேகூட யாருக்கும் தெரியாமல் இரவு நேரங்களிலே கண்மாய்க்கு வருகின்ற வாய்க்கால்கள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளங்களிலே இருக்கின்ற முக்கியமான பகுதிகளைக்கூட ஆக்கிரமித்து, இரவோடு இரவாகக் கட்டிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு, அதை அகற்றுவது என்பது முடியாத காரியம். அதுபோல, ஏழை எளிய மக்கள் வயல்வெளிகளிலே போகின்ற பாதைகளிலே, தம்மிடம் வைத்திருக்கின்ற அந்தக் கணக்கீட்டுக் கருவிகளிலே காட்டுகின்ற அந்த point இருந்தால்கூட, அங்கே அவர்கள் அதை நிறுவிவிடுகிறார்கள். எனவே, அந்த ஆலைகளை நிறுவுவதற்கு முன்னால், அவர்கள் உள்ளாட்சியிலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ, தாலுகா அலுவலகத்திலோ, அவர்கள் வைக்கின்ற இடத்திற்கு No Objection Certificate அல்லது clearance from the district administration, அதைக் கண்டிப்பாக வாங்கவேண்டும் என்கின்ற விதியைத்



2007 ஜனவரி 23]

தமிழ்நாடு மின்சார வாரியம் விதிக்க முன்வருமா என்று உங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, கால்வாய்களிலேயோ, சாலைகளிலேயோ அப்படிப்பட்ட மின் ஆலைகள் வைத்திருப்பார்களேயானால், அது சட்ட விரோதமானது. பட்டா நிலங்களிலேதான் காற்றாலைகள் பொருத்தவேண்டுமென்று ஏற்கெனவே அவர்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; மின்சார வாரியத்திலும் அவர்கள் அனுமதி கேட்கின்ற நேரத்தில், எந்த இடத்திலே அவர்கள் காற்றாலையை நிறுவப் போகிறார்கள் என்பதற்கான, பட்டா நிலத்திற்கான ஆதாரங்களை, பத்திரங்களையெல்லாம் கொடுத்துவிட்டுத்தான் அந்தக் காற்றாலைகளை நிறுவுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, கால்வாய்களிலேயோ, நடைபாதைகளிலேயோ எங்கேயாவது நிறுவப்பட்டிருக்குமானால், அதைக் குறிப்பிட்டு எழுதித் தருவாரேயானால், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காற்றாலைகள்மூலம் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்திற்கு, அரசாங்கம் ஒரு யூனிட்டிற்கு எவ்வளவு கட்டணமாக அவர்களுக்கு வழங்குகிறது? அது மாநிலம் முழுவதும் ஓரே கட்டணமா? அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபட்ட கட்டணங்கள் வழங்கப்படுகிறதா? எதிர்காலத்தில் இந்தக் கட்டணத்தை உயர்த்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, காற்றாலைகள்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற அந்த மின்சாரத்திற்கு, ஒரு யூனிட்டிற்கு 2 ரூபாய் 75 காசு என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்தகால ஆட்சியில், புதிதாகத்

தொடங்கப்பட்டுள்ள காற்றாலைகளுக்கு, யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 95 காசு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, காற்றாலைகளுடைய உரிமையாளர்கள், "மற்ற மாநிலங்களிலே ஒரு யூனிட்டிற்கு 3 ரூபாய் 55 காசு கொடுக்கிறார்கள்; தமிழ்நாட்டிலேதான் 3,200 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பை நாங்கள் பெற்றிருக்கின்றோம்; எனவே, மற்ற மாநிலங்களிலே, குறிப்பாக அண்டை மாநிலங்களிலே கொடுப்பதைப்போல, ஒரு யூனிட்டிற்கு 3 ரூபாய் 55 காசு கொடுக்க வேண்டும்" என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மின்சார வாரியத்திற்குக் கிடையாது. மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்குத்தான் இருக்கிறது. எனவே அவர்கள், மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். "அவர்கள் கேட்கின்ற கட்டணத்தைக் கொடுக்க முடியாது; எங்களுக்கு வசதி இல்லை" என்று மின்சார வாரியம் பதில் மனு கொடுத்திருக்கிறது. விரைவிலே ஒழுங்குமுறை ஆணையத்தினுடைய ஆணையை மின்சார வாரியமும், அரசும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியிலுள்ள பேரளத்தில் துணை மின் நிலையம் கொண்டுவருவதற்கான கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்ற வேளையில், தொடர்ந்து நீண்ட காலமாக இருக்கின்ற பிரச்சினை, நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஆதீனத்திடம் இருக்கின்ற நிலத்தைப் பெறுவது, மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆனால், அளந்து முள் வேலியெல்லாம் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி என்று சொல்கின்றபோது, என்னுடைய தொகுதி மட்டுமல்லாமல், காரைக்கால் வரையில், பாண்டிச்சேரி வரையில் அது செல்கிறது. அப்படி வருகின்றபோது, தற்போது பல்வேறு கிராமங்களுக்கு மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், அவர்கள் உபயோகத்திற்குப் பயனளிக்கவில்லை. எனவே, அந்தவகையில், அதை உடனடியாக நாம் கொண்டுவர வேண்டும். அதற்கென கடுமையான முயற்சியை மாவட்ட ஆட்சியர் மூலமாகவும், அங்கேயிருக்கிற நமது D.R.O. மூலமாகவும் செய்துகொண்டிருக்கின்றோம். ஆனால், ஆதீனத்துடன் பேசும்போது, அவர்கள் அரசாங்க விலைக்குத் கொடுக்க ஒத்துவருவதில்லை. எனவே, உடனடியாக அதைத் தீர்த்து வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையான முயற்சிகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே புதிதாக ஏறக்குறைய 200 துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. முதற்கட்டமாக, 60 துணை மின் நிலையங்களை அமைப்பதற்காக இந்த அரசு முடிவு செய்து, ஏறக்குறைய 400 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கியிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று அரசு முடிவெடுக்கின்ற நேரத்தில், தேவையான நிலம் கிடைப்பதில்லை. அதற்காக, கடந்த மாதம் 20 ஆம் தேதி, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுடைய கூட்டத்தைக் கூட்டி, துணை மின் நிலையங்களை அமைக்க, மின்சார வாரியத்திற்கு அவர்கள் இடம் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தேன். அதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சி மட்டும், அவர்களிடத்திலே இருக்கக்கூடிய O.S.R. நிலம்—Open Space Reservation—"பல பேர் அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டுகிறார்கள்; அதிலே 10 சதவிகித இடத்தை Open Space Reservation-க்காக வழங்குகிறார்கள்; அப்படிப்பட்ட இடங்களையெல்லாம் மின்சார வாரியத்திற்கு இலவசமாகக் கொடுக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்திருக்கின்றோம். மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், "guideline value-படி நீங்கள் பணம் கொடுப்பதாக இருந்தால், நாங்கள் கொடுக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, நம்முடைய அறநிலையத் துறை அதிகாரிகளைக் கேட்கின்ற நேரத்தில், "நாங்கள் market விலை கேட்க மாட்டோம்; ஆனால், அதேநேரத்திலே guideline Value-படி நீங்கள் நியாயமான விலையைக் கொடுத்தால், எங்களுடைய நிலத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே, சென்னை மாநகராட்சியிலே இருக்கக்கூடிய அந்த மன்றத்திற்கு மட்டும், அவர்கள் இலவசமாகக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிற காரணத்தினாலே, மின்சார வாரியம் மூலமாக அவர்களுக்கு நன்றி தெரிவித்தோம். மற்ற அதிகாரிகளுக்கு, guideline Value-படி விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறோம் என்றும் நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். அந்த அடிப்படையிலே எங்கெல்லாம் துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமோ, அதை அமைப்பதற்கான நிலம் ஆராயப்படும் செய்யப்படும்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேரவையினுடைய துணைத் தலைவர் திரு. வி.பெ. துரைசாமி அவர்கள்.

[2007 ஜனவரி 23

**மாண்புமிகு திரு. வி.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றி மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைகள் எத்தனை இருக்கின்றன? அவைமூலமாக எவ்வளவு மின்சாரம் தயாரிக்கிறோம்? காற்றாலைகள் சென்னையைச் சுற்றித் தொடங்குவதற்கு ஏதாவது—restriction—தடை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றி எந்தக் காற்றாலையும் இல்லை. அதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. காற்றாலைகள் எங்கே அமைக்கப்படுகிறது என்றால், காற்று எங்கே வேகமாக வீசுகிறதோ, அந்த இடத்திலேதான் காற்றாலைகள் அமைக்கப்படுகின்றன. Velocity என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஒரு நிமிடத்திற்கு எத்தனை கிலோ மீட்டர் வேகத்திலே வீசுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு, காற்றாலைகள் அமைக்கப்படுகின்றன. அப்படிப் பார்க்கின்ற நேரத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே, திருநெல்வேலி மாவட்டத்திலே, அதைப்போல இப்பொழுது கோவை மாவட்டத்திலே, காற்றினுடைய வேகம் அதிகமாக வீசுகிறது என்று ஆய்வு செய்து, அந்த மாவட்டங்களிலே காற்றாலைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்விதான் கேட்டார், சென்னையிலே இருக்கிறதா என்று. சென்னையில் இதுவரையிலே இல்லை. நான் அதிகாரிகளுக்கு ஒரு யோசனை தெரிவித்திருக்கிறேன். சென்னையிலே கடற்கரை ஓரத்தில் நல்ல காற்று வீசுகிறது. ஆனால், அதனுடைய velocity எவ்வளவு என்று இதுவரையிலே யாரும் அறியவில்லை. அதை அதிகாரிகளிடத்திலே சொல்லி இருக்கிறேன். ஏனென்றால், தமிழ்நாட்டிலே, சென்னையிலேயிருந்து கன்னியாகுமரி வரையில் நீண்ட கடற்கரை இருக்கின்ற காரணத்தினாலே, 365 நாட்களும் காற்று வேகமாக வீசக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்தக் கடலுக்குப் பக்கத்திலே காற்றாலைகள் அமைக்க முடியுமா என்பதைப்பற்றி இலாகா பரிசீலித்து வருகிறது. 365 நாட்களும் இங்கு காற்று வீசக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி நாங்கள் விரைவிலே ஒரு முடிவெடுத்து நடவடிக்கை எடுப்போம். ஆனால், காற்றாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்ற இடங்களிலேகூட நமக்கு 3,200 மெகாவாட் மின்சாரம் காற்றாலைகள்மூலம் கிடைக்கிறதே தவிர, கன்னியாகுமரியாக இருந்தாலும் சரி, திருநெல்வேலியாக இருந்தாலும் சரி, கோவையாக இருந்தாலும் சரி, அந்த மாவட்டங்களிலே எல்லாம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களில் காற்று அதிகமாக



2007 ஜனவரி 23]

வீசுவது இல்லை. எனவே, 3,200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகக்கூடிய அந்தக் காற்றாலைகளிலிருந்து அந்த மூன்று மாதங்களில் வெறும் 500 மெகாவாட் மின்சாரம்தான் நமக்குக் கிடைக்கிறது. எனவே, அந்த மூன்று மாதங்கள் காற்று வீசாமல் இருக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையிலிருந்து மாறி, நிரந்தரமாக நமக்கு மின்சாரம் கிடைப்பதற்காக, கடலோரத்திலே 365 நாட்களும் காற்று வீசக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே அமைக்க முடியுமா என்பதைப்பற்றி மின் வாரியம் மற்ற நிபுணர்களோடு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## தென்னைப் பாதுகாப்பு

***5419—திரு. த.அ. மேகநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் தென்னையில் கூண்வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாநிலத்தில் தென்னையைத் தாக்கும் கூண்வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு, ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கோரி, தென்னை வளர்ச்சி வாரியத்திடம் கேட்கப்பட்டுள்ளது. தென்னை வளர்ச்சி வாரியம் ரூ. 5.00 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் உட்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், தென்னையைத் தாக்கும் கூண் வண்டினைக் கட்டுப்படுத்தும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2007 ஜனவரி 23

(ஆ) இந்நிதியாண்டிலேயே, 2006–2007–ல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 300 ஹெக்டேர் பரப்பில் 100 சதவீதம் மானியத்தில் இனக் கவர்ச்சிப் பொறிமூலமாக இப்பூச்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9–50

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். அங்கு தென்னை அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எண்ணெய் பிழியும் பல ஆலைகளும், தேங்காய் நார் தயாரிக்கும் ஆலைகளும், தென்னங்கீற்று ஆலைகளும் உள்ளன. அங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் தென்னைக் கயிறு அனுப்பப்படுவதன்மூலம் மக்கள் பயனடைந்து வருகின்றனர். அங்கு தென்னையால் அப்பகுதி மக்கள் வேலைவாய்ப்பும் அடைந்து வருகின்றனர். மேற்கண்ட சூழ்நிலையில், தென்னை மரங்களின் ஒரு பகுதி, நோய்த் தாக்குதலாலும், மறு பக்கம் வண்டு தாக்குதலாலும், சுருள் புழுக்களின் தாக்குதலாலும், பாதிக்கப்பட்டு சாய்ந்துவிடுகின்றன. தென்னை ஓலைகள் காய்ந்து விடுகின்றன. காய்கள் சிறியதாகக் காய்க்கின்றன. அதனால் தென்னை மரங்கள், மரம் ஒன்றிற்கு 300 ரூபாயிலிருந்து, 150 ரூபாயாகக் குறைத்துக் குத்தகைக்கு விடப்படுகின்றன. விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அதன் காரணமாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், இந்த நோய்த் தாக்குதலாலும், வண்டு தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு அரசு நஷ்ட ஈடு வழங்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னையைத் தாக்கும் பல்வேறு வகை பூச்சிகளில் கூன்வண்டு என்னும் பூச்சி தாக்குவதால், தாக்கப்பட்ட மரத்திலுள்ள சிறு துவாரங்களில், புழுக்களால் வெளியே தள்ளப்பட்ட சக்கைகள் துருத்திக் கொண்டிருக்கும். அவற்றிலிருந்து பழுப்பு நிற பசை போன்ற சாறு வடியும். இந்தச் சாற்றிலிருந்து, ஒருவித துர்நாற்றம் வீசும். தாக்கப்பட்ட மரங்களில் முதற்கட்டமாக குருத்து வாடும். பின்பு, பாளைகள் மற்றும் மரமே மடிந்துவிடும். இதற்கான தடுப்பு முறைகள், மரத்தில் காயம் உண்டாக்காமல் வண்டுகளினால் சேதம் அடைந்த மரங்களின் பகுதிகளை அல்லது மரங்களை அகற்றி அழித்து வண்டின்



2007 ஜனவரி 23]

இனப்பெருக்கத்தைத் தடுப்பது அவசியம். பச்சை மட்டைகளை வெட்டக்கூடாது. கூன்வண்டினைப் பிடித்து அழிக்க வேண்டும். வேப்பங்கொட்டைத் தூள் மற்றும் வேம்புப் பருப்புத் தூள் ஆகியவற்றை 2 : 1 என்ற அளவில் மரத்தின் அடியில் இடலாம். கரும்புச் சர்க்கரைப் பாகு 2.5 கிலோ + பதநீர் 2.5 லிட்டர் + அசிடிக் அமிலம் 5 மில்லி + ஈஸ்ட் மாத்திரை 5 கிராம் இவற்றுடன் தென்னை மட்டைகளை நீளவாட்டில் சிறு துண்டுகளாக வெட்டிச் சேர்த்து வைத்து இப்பூச்சியை அழிக்கலாம். 10 மில்லி அல்லது 15 மில்லி மானோகுரோட்டோபாஸ் மற்றும் 5 மில்லி டைகுளோர்வாஸ் மருந்தை 15 மில்லி தண்ணீருடன் கலந்து, ஒரு பிளாஸ்டிக் பையில் ஊற்றி, நல்ல உயிருடன் உள்ள வேரில் கட்டி, உள் செலுத்த வேண்டும். மருந்தைச் செலுத்துமுன் முற்றிய காய்களைப் பறித்துவிட வேண்டும். மீண்டும் அடுத்த அறுவடையை 45 நாட்கள் கழித்து செய்ய வேண்டும். வேர்மூலம் மருந்து செலுத்திய மரத்திற்கு ஒரு வாரம் தண்ணீர் பாய்ச்சக்கூடாது. இது நடைமுறையில் இப்போது விவசாயிகளுக்கு ஆலோசனையாக வழங்கப்பட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், தமிழகத்திலே 6 கோடியே 6 இலட்சத்து 90 ஆயிரம் தென்னை மரங்கள் இருக்கின்றன. இந்த வண்டினால் பாதிக்கப்பட்டிருப்பவை 13 இலட்சத்து 33 ஆயிரத்து 150 மரங்கள். கிருஷ்ணகிரியில் மொத்தம் 14,049 எக்டேரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இதிலே, கூன்வண்டினால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பு 470 எக்டர். கூன்வண்டினால் பாதிக்கப்பட்ட மரங்களினுடைய எண்ணிக்கை 82 ஆயிரத்து 250. இதற்காக ஆலோசனை வழங்கப்பட்டு, மருந்துகள் வாங்கி விவசாயிகளுக்குக் கொடுத்து வேளாண்மைத் துறை இதிலே கவனம் செலுத்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை, இன்றைக்கு விவசாயிகளுக்கு ஒரு நல்ல பலன் தரக்கூடிய மகசூலாக வந்து கொண்டிருக்கிறது. அதோடு இணைந்து, ஊடுபயிராக கோகோ பயிரிட்டால், அதிகமான இலாபம் தரும் என்று சொல்லப்படுகிறது. எனவே, தென்னையின் ஊடுபயிராகக் கோகோவைப் பயிரிட, விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஜனவரி 23

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊடுபயிராகக் கோகோவைப் பயிர் செய்யலாம் என்று ஆலோசனை இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

**கால்வாய்ப் பணி**

***61—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், பதினெட்டாம் கால்வாய்த் திட்டப் பணியை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. 67 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மார்ச் 2007-க்குள் எஞ்சியுள்ள பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் இந்தப் பதினெட்டாம் கால்வாய்த் திட்டம் குறித்து, நான் அங்கு செல்கிறபோது, அந்த மாவட்டத்திலுள்ள விவசாயிகளும், எங்களுடைய தோழர்களும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். அதையொட்டி எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். மீதம் இருக்கிற 33 சதவிகிதப் பணியையும் வருகிற மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்கிறோம் என்று தெரிவித்ததற்கு மீண்டும் நன்றிகூறி, இதன்மீது தொடர் கவனம் எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



2007 ஜனவரி 23]

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் சென்னையில் நடைபெற்ற ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் பாராட்டு விழாவிலே அரசியலும், ஆன்மீகமும் இணை பாதிகளாக இருந்ததைக் கண்டு நான் பெருமைப்பட்டேன். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய வணக்கத்திற்குரிய முதல்வர் அவர்களும் மிகச் சிறப்பாக அந்த விழாவிலே பங்கேற்றுச் சிறப்பு செய்தார்கள். அதிலே கூறப்பட்ட ஒரு செய்தியை நான் இங்கே கூற விரும்புகின்றேன். தமிழகத்தினுடைய எல்லை வரை ஸ்ரீ சத்ய சாய் பாபா அறக்கட்டளை மூலமாகக் கால்வாய் சீரமைக்கப்பட்டிருக்கிறது என்றும், பிறகு தமிழகத்தினுடைய எல்லையிலே இருந்து பூண்டிவரை அமைப்பதற்கு, சென்ற அரசு இணக்கம் அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அதைச் செய்வதற்கு ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது வேறு ஒரு வகையிலோ உறுதி அளித்திருக்கின்றார்களா? அப்படிப்பட்ட அதே நிலையினைத் தமிழக எல்லையிலே நிறுவுவதற்கு, கட்டமைப்பு செய்வதற்கு, அரசு திட்டம் ஏதும் வைத்திருக்கிறதா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம்; அவ்வளவுதான். அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம். இது சட்டமன்றமல்ல, உறுப்பினர் கேள்வி கேட்டவுடனே பதில் சொல்வதற்கு. கோரிக்கை வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னடியன் கால்வாயிலுள்ள வெள்ள நீரை, சாத்தான்குளத்திற்குக் கொண்டுவர 198 கோடி ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனால் நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் தொகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம், இந்த நிதியாண்டிலேயே தொடங்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் தாமிரபரணி ஆற்றுப் பகுதியில்

அதிகமான நீர், வீணாகக் கடலிலே கலக்கிறது. அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பது எல்லோருடைய நீண்டநாள் கோரிக்கை. அதை ஆய்வு செய்தபோது, வெள்ளான்குடி வரையிலே அந்தத் தண்ணீரை எடுத்துப் போக முடியும் என்பதற்காக, கன்னடியன் கால்வாய்மூலம் தண்ணீரை எடுத்துச் செல்வதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. கன்னடியன் கால்வாயிலே ஆரம்பத்திலிருந்து 6.5 கிலோமீட்டர் வரையில் 450 கன அடி தண்ணீரைத்தான் இப்பொழுது எடுத்துச் செல்ல முடியும். அதை 3,680 கன அடி கொள்ளளவுள்ள கால்வாயாக அந்தப் பகுதிக்கு மாற்ற வேண்டும். பிறகு அங்கிருந்து வெள்ளான்குடி வரையிலே ஒரு கால்வாய் வெட்டி எடுத்துச் செல்ல வேண்டும். அப்படி எடுத்துச் செல்கிறபோது, நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் தாலுகாவிலுள்ள வறண்ட பகுதிகள் பயனடையும். 2,765 மில்லியன் கன அடி தண்ணீர் இந்தத் திட்டத்தின்மூலம் எடுத்துச்செல்லலாம். சுமார் 37 கிராமங்கள் பயனடையலாம். 4,770 கிணறுகள் உயிரோட்டம் பெறும். 19,710 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். இந்தத் திட்டத்தினுடைய economic beneficiary ratio மிகவும் நன்றாக இருக்கின்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தை அரசு ஏற்று, நபார்டு வங்கியின்மூலம் உதவி பெறுவதற்கு எல்லாவிதமான ஆக்கப் பணிகளும் முடிந்து, நபார்டு பணிக்கு அனுப்புகின்ற பரிசீலனையில் மட்டும் இறுதியில் இருக்கிறது. விரைவில் நபார்டு வங்கியினுடைய உதவியோடு இந்தத் திட்டம் நிறைவேற அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## பேருந்து வசதி

***408—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் மகளிருக்கான தனிப் பேருந்துகள் மற்றும் அடுக்குமாடிப் பேருந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



திருப்பூர் நகரில் மகளிருக்கான தனிப் பேருந்துகள் T–19– திருப்பூர்– அவினாசி இரண்டு நடைகளும், T–19/1A – திருப்பூர் – பல்லடம் இரண்டு நடைகளும், 10 ஆம் எண், திருப்பூர்– பாண்டியன் நகர் இரண்டு நடைகளும், 8/4A – திருப்பூர் – ஊத்துக்குளி இரண்டு நடைகளும் ஆகிய இந்த வழித் தடங்களில் 30–6–2006 முதல் மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, காலையும் மாலையும் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்பூர் நகரிலே தற்சமயம் அடுக்குமாடிப் பேருந்துகளை இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எழுதிக் கொடுத்த கேள்வி இது. இருந்தாலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். முதல் கூட்டத் தொடரிலேயே கூடுதல் பேருந்துகள் கோரி, முதல்வர் அவர்கள் ஆணையின்பேரில், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள், எதிலுமே கொஞ்சம் வேகமாகச் செயலாற்றக்கூடியவர்; அவர் உடனடியாக அந்த மாத இறுதியிலேயே 20 புதிய வழித் தடங்களில பேருந்துகளை இயக்கிக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது காலை, மாலை நேரங்களில் மட்டும் பெண்களுக்கான அந்த தனிப் பேருந்துகள், அமைச்சரவர்கள் சொன்னதன் அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்பூரில் கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்கள் பணியாற்றுவதிலே, 40 சதவிகிதமானவர்கள், பெண் தொழிலாளர்களாக அங்கே வேலை செய்யக்கூடிய நிலைமையாலும், அதேமாதிரி பள்ளி, கல்லூரிக்கு வந்து செல்லக்கூடிய மாணவிகள் நிறைந்திருக்கின்ற காரணத்தாலும், காலை, மாலை நேரங்கள் மட்டுமல்லாமல், நாள் முழுக்க அந்தப் பேருந்துகள் பெண்களுக்கென்று தனியாகவே இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்பேரில், நமது உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களே வந்து, ஓரே நாளில் அந்தப் பகுதியிலே 24–க்கும் மேற்பட்ட புதிய வழித் தடங்கள் உருவாக்கப்பட்டன. அஃதன்னியில், இந்த ஆட்சி ஏற்பட்டு 8 மாத காலங்களில், தமிழ்நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 400 புதிய வழித் தடங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே 100 வழித் தடங்கள் திருப்பூரை நோக்கித்தான்

[2007 ஜனவரி 23

புதிதாக விடப்பட்டிருக்கின்றன. நேற்றுகூட திருவண்ணாமலையிலிருந்து திருப்பூருக்குத்தான் அதிகமான வழித் தடங்கள் வந்துகொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 100 புதிய வழித் தடங்களில் அந்தப் பேருந்துகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், எவ்வளவு பேருந்துகள் கொடுத்தாலும் அங்கே பற்றாக்குறை இருந்துவருவதை நான் நன்றாக அறிவேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவருடைய கோரிக்கையை ஏற்று, இன்னும் ஒரு மாத காலத்தில் அவருக்குத் தேவையான அளவுக்கு, பெண்களுக்கென்று தனியாகவே பேருந்துகளை விடுவோம். அதேபோல தேவையான அளவுக்கு மற்றவர்களும் செல்லக்கூடிய வகையில், புதிய பேருந்துகள் திருப்பூர் நகருக்கு அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. சமீபத்திலே கோவையிலிருந்து திருவள்ளுவர் விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஆறு பேருந்துகள் சென்னைக்கு இயக்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். திருப்பூரைப் பற்றி நீங்கள் சொன்னது உண்மைதான். அது தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலிருந்து மக்கள் வந்து செல்லவேண்டிய கட்டாய சூழ்நிலையின் காரணமாக, தவிர்க்க முடியாமல் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த ஆறு பேருந்துகளில் இரண்டு பேருந்துகளை அல்லது புதிதாக இரண்டு பேருந்துகளை, விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் திருப்பூரிலிருந்து சென்னைக்கு வருவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தால், உதவியாக இருக்கும். செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அரசுப் பணத்தைத் தந்த காரணத்தினால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் 200 புதிய Ultra Deluxe Buses வாங்கப்பட்டிருக்கின்றன. அந்த 200-ல் 65 பேருந்துகள் இப்போது சாலையிலே விடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருப்பூரிலிருந்து சென்னைக்குத் தேவையான அளவுக்கு, Ultra Deluxe Buses இயக்கப்படும். அதுவும் ஓரிரு வாரங்களில் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2007 ஜனவரி 23]

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில், தருமபுரி-சேலம் மெயின் சாலையில் தருமபுரி மாவட்டத்தினுடைய ஆட்சியர் அலுவலகமும், அரசுக் கலைக் கல்லூரி, மற்ற அரசு அலுவலகங்கள் அனைத்தும் அந்தச் சாலையிலே அமைந்துள்ளதால், காலையிலே அலுவலக நேரத்திலும், பள்ளி நேரத்திலும் ஆண்களும், பெண்களுமாக அந்தப் பேருந்துகளிலே பயணம் செய்வது மிகக் கடினமாக உள்ளது. ஆகவே, மகளிருக்கென்று தனியாகப் பேருந்து இயக்க, இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கின்ற இட நெருக்கடியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக, 16,200 வழித் தடங்களிலே பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம்; 800 பேருந்துகளை Spare bus-களாக வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்த நிதியின் காரணமாக 2,230 பேருந்துகள் வாங்கச் சொல்லி எங்களுக்கு அனுமதி அளித்தார். அவற்றிலே 831 பேருந்துகள் சாலைக்கு வந்திருக்கின்றன. Chasis எடுத்து, body கட்டி, அவை சாலைக்கு வந்திருக்கின்றன. தொடர்ந்து, ஒவ்வொரு பகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பகுதிகளிலே அதிகமான அளவிற்குப் பேருந்துகள் வேண்டும்; வழித் தடங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுவும், சொல்கின்றபோது எங்களுக்குப் புதிய பேருந்துகளாகவே தேவை என்றும் சொல்கிறார்கள். அதனால், இந்தப் புதிய பேருந்துகள் body கட்டி வருகிறபோது, ஒவ்வொன்றாக வருகின்றபோது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையும் நிறைவேற்றப்படும். அதுவும் மகளிருக்குத் தேவை என்று சொன்னால்—கடந்தகால ஆட்சியிலே அதை நிறுத்தி இருந்தார்கள்; ஆனால், இந்த முறை திருச்சியிலே, மற்றப் பகுதிகளிலே மகளிருக்கென்று தனிப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அது, தருமபுரி நகருக்கும் பொருந்தும்; தேவைப்பட்டால், அங்கும் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

[2007 ஜனவரி 23

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய இரயில் தடம், தற்போது அகலப் பாதைப் பணியின் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, இந்தப் பகுதியிலிருந்து சென்னை வரக்கூடிய மக்களுக்குப் பேருந்துகள் போதிய அளவில் இல்லாததனால், மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக, கடந்த பொங்கலின்போது, நான்கைந்து தினங்கள் விடுமுறை தினங்களாக வந்த காரணத்தினாலே, தனியார் வண்டிகளில் எல்லாம் டிக்கெட் கிடைக்காமலும், அரசு வண்டிகளில் டிக்கெட் கிடைக்காமலும் மிகவும் சிரமப்பட்டார்கள். நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அதை ஏற்று, அவர்கள் மேலும் இரண்டு வழித் தடங்களைச் சென்னைக்கு ஏற்படுத்தவும், அவற்றிலே அதிநவீன சொகுசுப் பேருந்து ஒன்றைக் கொடுக்கவும் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும். ஏற்கெனவே நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். எங்கெங்கு அந்த அகல இரயில் பாதைப் பணி நடக்கிறதோ, அங்கெல்லாம் பேருந்துகள் புதிதாக விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது ஆரம்பித்து, ஓடிக்கொண்டிருக்கிறது. பட்டுக்கோட்டைக்கு இன்னும் தேவையென்றாலும் உடனடியாக அவர்களுக்குப் பேருந்து விடப்படும். Ultra Deluxe Bus-ம் விடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, மதுரை போன்ற மாநகரங்கள், குறிப்பாக சென்னை, அதிகமாக மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்கிறது. குறிப்பாக, பெண்கள் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்ற இடம். குறிப்பாக, வட சென்னை போன்ற ஒதுக்குப்புறங்களில் இருக்கின்ற பகுதிகளில் வாழ்கின்ற கல்லூரிகளில் படிக்கின்ற மாணவிகள், தி. நகர் பேருந்து நிலையத்திற்கு அருகில் Shasun Jain College என்ற ஒரு கல்லூரி இருக்கிறது—அந்த விழாவிற்குக்கூட நான் சென்றிருந்தேன் அந்தக் கல்லூரியிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பயின்று வருகின்றார்கள். தமிழ்நாட்டினுடைய மொத்த விற்பனையில் 30 சதவிகிதம் விற்பனையாகின்ற ஒரு வணிகத் தலமாக இருக்கின்ற தி. நகர்



2007 ஜனவரி 23]

பகுதியிலிருந்து, கல்லூரியில் படித்து திரும்ப பேருந்து நிலையத்திற்கு வந்து, பேருந்தில் ஏறி, அவர்கள் தங்கள் இல்லங்களுக்குச் செல்வதற்கான சூழலே இல்லை. அது மிகப் பெரிய வணிகத் தலமாக இருப்பதால், பல இலட்சக்கணக்கான மக்கள் பேருந்துகளைப் பயன்படுத்தி வருகின்ற சூழல் இருக்கிற காரணத்தால், அப்படிப் பள்ளி, கல்லூரி மாணவிகள் அந்தப் பேருந்துகளிலே ஏறுகிறபோது, பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு மிகவும் உட்படுத்தப்படுகிறார்கள். வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு அவர்கள் வக்கிரத்திற்கு மிகவும் ஆளாகிற காரணத்தால், சென்னையைப் போன்ற பெரு நகரங்களில் இருக்கின்ற கல்லூரிகளுக்கு என்று கல்லூரி நேரங்களில் காலை, மாலை அல்லது—Evening College, Day College வைப்பார்கள்—அந்த நேரத்திற்கு ஏற்றவாறு அந்தக் கல்லூரி மாணவிகளை ஏற்றிக் கொண்டுவந்து, இறக்குவதற்கான வழித் தடங்களில் புதிய பேருந்துகளையும், பெண்களுக்கு, குறிப்பாக மகளிருக்கு என்று தனியாக வழித் தடங்களையும் இயக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புவதோடு, நான் சென்னை, திருவொற்றியூர் தொகுதியில் 1996 தேர்தலிலே நின்று தோல்வியைத் தழுவியவன். வட சென்னையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** வந்துவிடுகிறேன்; வந்துவிடுகிறேன். குறிப்பாக, அந்தப் பகுதியில் பெரும்பான்மையான மக்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிற காரணத்தால், திருவொற்றியூர், தி. நகர் பேருந்து நிலையங்களிலிருந்து மகளிருக்கு என்று, அதுவும் கல்லூரி மாணவ மாணவிகள் பயன்பாட்டிற்கு என்று, தனியாகப் பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த முறை சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சொல்லியிருக்கிறேன். சென்னை நகருக்குக் கிட்டத்தட்ட 2,700 வழித் தடங்கள் என்று இருந்தாலும்கூட, கடந்தகால ஆட்சியிலே, அது புதுப்பிக்கப்படாத காரணத்தால், புதிய பேருந்துகள் வாங்காத காரணத்தால் 2,200 அல்லது 2,250 என்கிற வகையிலேதான் வழித் தடங்களில் அவை ஓடிக்கொண்டிருந்தன. நமது ஆட்சி வந்த பிறகுதான்,

[2007 ஜனவரி 23

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு நிதியைத் தந்த பிறகுதான், புதிய பேருந்துகள் கிட்டத்தட்ட 480 பேருந்துகளில், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு என்று 176 பேருந்துகள் வாங்கப்பட்டு, இன்றைக்கு அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. வருகின்ற மார்ச் மாதம் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு நிதி தருவதாக எங்களுக்கு உறுதியளித்து இருக்கிறார்கள். இது 480 என்று வருகின்றபோது, பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரி நேரத்தில் இயக்குகின்ற அந்தப் பணி என்பதைக் கருத்திலே கொள்வோம். ஏற்கெனவே ஒரு கேள்வியிலே, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை நிருபர் கேட்டபோதுகூட, பள்ளி நேரங்களிலே, கல்லூரி நேரங்களிலே தனியாக அவர்களுக்கென்று விடப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். ஏனென்றால், மற்ற இடங்களிலே, குறிப்பாக விழுப்புரம் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும், கும்பகோணம் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும், சேலம் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் அவர்கள் ஓட்டுகின்ற பேருந்துகளுடைய எண்ணிக்கை 3,000; வசூலாகின்ற தொகை மூன்று கோடி ரூபாய் நாளொன்றுக்கு. ஆனால், சென்னையிலே 2,200 பேருந்துகள் ஓடினாலும்கூட, வசூலாகிற தொகை வெறும் 91 இலட்சம் ரூபாய்தான். இங்கு கூட்ட நெரிசல்; அதிகமாக கிலோமீட்டர் ஓட்ட இயலாத நிலை. அதனால், நிதிச் சுமையும் எங்களுக்கு, மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு இருக்கிறது. இப்போது புதிய பேருந்துகள் வந்த பிறகுதான் ரூபாய் ஒரு கோடியைத் தாண்டி, ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே நாளொன்றுக்கு வசூலாகிறது. அதையும் கருத்திலேகொண்டு, கல்லூரிகளிலே மாணவிகள் தனியாகச் செல்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று தனியாகப் பேருந்து விடுவதற்கு இந்தத் துறை ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, சென்னை, திருச்சி போன்ற நகரங்களில் மட்டும் மகளிருக்கான பேருந்துகள் விடப்படுவதோடு, அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் அடுத்தடுத்த கட்டமாக பெண்களுக்கான தனிப் பேருந்துகள் விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்ற கேள்வியோடு இத்தகைய மகளிர் பேருந்துகளிலாவது பெண் ஓட்டுனர்கள், பெண் நடத்துநர்களை நியமிக்க போக்குவரத்துத் துறை முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மற்ற நகரங்களிலும் பெண்களுக்கென்று தனியாகப் பேருந்துகள் விடப்படுமா என்று கேட்கிறார். இந்தியாவிலேயே பெண்களுக்கென்று 33 சதவீதத்தை நிர்ப்பந்தப்படுத்தி, அது இங்கு வரவேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் வருகின்ற பிப்ரவரி 10ஆம் தேதி, அதற்கென்று மகளிருடைய ஊர்வலத்தை நடத்தி வைக்கிறார். அவருடைய ஆட்சியிலே நிச்சயமாக அனைத்து நகரங்களிலும் தேவையான அளவிலே பெண்களுக்கென்று பேருந்துகள் விடப்படும். பெண்கள் ஓட்டக்கூடிய அளவிற்கு அவர்களுடைய உடல்நிலை சரியாக இருக்குமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## இலவசத் தடுப்பூசி

***880—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை நோய்க்கு இலவசமாகத் தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில், மஞ்சள் காமாலை நோயைத் தடுக்கும் பொருட்டு, சென்னை, மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் உதகமண்டலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் "Hepatitis B" தடுப்பூசி, ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பரீட்சார்த்த முறையில் தற்பொழுது இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை, மத்திய அரசின் உதவியோடு, தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2007 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதாஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குழந்தைகளுக்கு மட்டும் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, இப்போது பரீட்சார்த்தமாக சில மருத்துவமனைகளிலே நடைமுறைப்படுத்துவதாக அறிவித்தார்கள். இது எல்லா இடங்களிலும் மிகமிகத் தேவைப்படுகிற அவசியமான ஒரு திட்டமாகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எல்லா தாலுகா மருத்துவமனைகளிலும், அதேபோல—Primary Health Centre—ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் என, இப்படி எல்லோருக்கும் இப்படிப்பட்ட வசதியை விரிவுபடுத்தி, குழந்தைகளை மட்டுமல்ல; பெரியவர்களையும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரீட்சார்த்தமாக நடத்தப்பட்ட 5 மாவட்டங்களைத் தாண்டி, வரும் நிதியாண்டிலே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ள, தமிழ்நாடு முழுவதுமாக இருக்கிற அத்துணை மருத்துவமனைகளிலும் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்காக, வருகிற 25–1–2007 ஆம் தேதியன்று, முதற்கட்டமாக அதிகாரிகளோடு கூட்டம் நடக்க இருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் உதவியோடு நடக்கிற திட்டம். வரும் நிதியாண்டிலே இது முழுவதுமாக தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் நீண்டகாலமாக, Dean பதவியில் பொறுப்பு அலுவலர்களே இருக்கிறார்கள். அதேபோல, மருத்துவக் கல்லூரியிலும் Dean பதவியில் பொறுப்பு அலுவலர்களே இருக்கிறார்கள். Dean பதவியில் நிரந்தரமாக அலுவலர்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய நாட்களில், ஓரிரு நாட்களில் அந்த Dean பதவியில் அலுவலர்களைப் போடுவதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அங்கே Dean போடுவதிலே பிரச்சினை என்னவென்றால், Clinical, Non–Clinical என்று சொல்லி, இரண்டு பிரிவு டாக்டர்களும் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். அதை ஓரளவிற்கு அதிகாரிகளை வைத்துப் பேசி முடித்திருக்கிறோம். அவர்களை அழைத்துப் பேசி முடிக்காமல்விட்டால், ஒவ்வொருவரும் கோர்ட்டுக்குப் போய், தடையாணை வாங்கிவிடுவார்கள். ஆகவே, அதையெல்லாம் பேசி முடித்துவிட்டோம். எனவே, குறுகிய காலத்திற்குள்ளாக அந்த Dean பதவி எல்லா இடங்களிலும் நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

## திருப்பணி

***8939—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் காவிரிக்கரையிலுள்ள பழமைவாய்ந்த காசி விஸ்வநாதர் ஆலயத் திருப்பணியை நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பரமத்தி வேலூர் காவிரிக்கரையில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கான திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு, மடைப்பள்ளியினைச் சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. அருள்மிகு சுப்பிரமணியர், விநாயகர் மற்றும் சண்டிகேஸ்வரர் சன்னதிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. காசி விஸ்வநாதர் மற்றும் அம்மன் சன்னதிகளைக் கட்டுகின்ற பணி, தொடர் நடவடிக்கையில் உள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிகள் அனைத்தும்

[2007 ஜனவரி 23

முடிந்து, குடமுழுக்கு நடத்திடப் பரம்பரை அறங்காவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியில், அதாவது வருங்காலத்திலே தொகுதி சீரமைப்புக்குப்பின் பரமத்தி வேலூர் தொகுதி என்று அழைக்கப்படவிருக்கின்ற பரமத்தி வேலூரிலே இருக்கின்ற காசி விஸ்வநாதர் ஆலயம், தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் வலதுபுறமாக காவிரியினுடைய இடதுகரையில் அமைந்திருக்கின்ற பழமையான, தொன்மையான, பாரம்பரியமிக்க கோயிலாகும். காசியிலே இருக்கின்ற விஸ்வநாதர் ஆலயத்தைப்போல, ஈசனின் இருப்பிடமாகக் கருதப்படுகின்ற இடுகாட்டிற்கு எதிரிலே அமைந்திருக்கின்ற இந்தக் கோயில், அந்தப் பகுதி மக்கள் எல்லோராலும் வழிபடப்படுகின்ற ஒரு மத நல்லிணக்கச் சின்னமாக விளங்குகிறது. நீண்ட நாட்களாக இயற்கைச் சீற்றத்தாலும், வெள்ளத்தாலும் இடிபாடுகளுக்கு உட்பட்ட அந்த ஆலயத்திற்குச் 'சீரமைப்புப் பணி நடைபெறுகிறது, நடைபெறுகிறது' என்று அந்தப் பரம்பரை அறங்காவலர்களால் சொல்லப்படுகிறது. அவர்கள் உண்மையிலேயே கடந்தகாலத்திலே பெரிய புரவலர்களாக இருந்தவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** ஆனால், இப்போது அவர்களால் சீரமைப்புப் பணி நடைபெறுவதில் காலதாமதம் ஆகிறது. அதனை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு அரசு நிதியுதவியினை அளித்திட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயம் பரம்பரை அறங்காவலர்களால் நடத்தப்படுகின்ற, பராமரிக்கப்படுகின்ற, நிர்வகிக்கப்படுகின்ற ஆலயம். அதிலே துறை அதிகாரிகள் அங்கே இருப்பார்கள். ஆனால், முழுமையாக நாம் ஆதிக்கம் செலுத்துவது என்பது இயலாத காரியம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல தவறுகள் அங்கே நடைபெறுமேயானால், அவற்றைத் திருத்திக்கொள்வதற்கு, எச்சரிப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.



2007 ஜனவரி 23]

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** அங்கே தவறு நடக்கிறது என்பதைச் சொல்ல நான் வரவில்லை. நிதியுதவி அரசிடமிருந்து பெற ஆவன செய்யப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்போது இங்கே கேள்வியாக வைத்திருக்கிறார் அதை மனுவாகக் கொடுத்தால், துறையின் சார்பாகவும் உதவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயமும் மற்றும் அருள்மிகு யோக ஆஞ்சநேயர் கோயிலும் உள்ளது. இக்கோயில் திருப்பணி, நீண்ட ஆண்டுகளாக செய்யப்படாமலே உள்ளது. சமீபத்தில்கூட, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் முத்தமிழ் அறிஞர் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பைச் செய்தார்கள். விரைவில் அந்தக் கோயிலுக்கு 'ரோப் கார்' வசதி செய்து தரப்படும் என்று. இந்த நேரத்திலேயே, ஓர் உரிய சந்தர்ப்பமாக இருக்கின்ற இக்காலக்கட்டத்திலேயே அந்தத் திருப்பணியை நடத்தினால், மிகச் சிறப்பாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தக் குடமுழுக்கு விரைவில் தொடங்கப்படுமா, அதற்குரிய சம்பந்தப்பட்ட துறை நடவடிக்கை எடுக்குமா, அறநிலையத் துறை அமைச்சர் இதற்கு விடையளிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நீண்ட நெடுங்காலமாக, இந்த அவையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தார்கள். பிறகு, புதிய உறுப்பினராக வந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்களும் அந்தக் கோரிக்கையை வைத்து, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 'ரோப் கார்' அமைக்கின்ற அந்தப் பணிக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணி தொடங்குகின்ற நாளை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து, அதிகாரிகள் தேர்ந்தெடுத்து நடத்துவதற்கு, ஏற்பாடுகள் செய்வதற்குக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்

[2007 ஜனவரி 23

அவர்கள் தங்களுடைய தேதியை உரிய அதிகாரிகளிடத்திலே தெரிவித்தால், அந்தப் பணி நிச்சயமாக விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17. மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**17—**

### கைத்தறிப் பூங்கா

***12293—திரு. சபா. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, புதுப்பேட்டையில் கைத்தறிப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, புதுப்பேட்டையில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் புதுப்பேட்டை பகுதி, கடந்த நூறாண்டுகளாக, கைத்தறித் தொழிலையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. 3,000 கைத்தறிகள் வரை செயல்பட்டுக்கொண்டிருந்த அந்தப் பகுதியிலே, இப்போது 200, 300 கைத்தறிகள்தான் செயல்படுகின்றன. மிக நுட்பமாக அந்தத் தொழிலைச் செய்யக்கூடிய அந்த மக்கள் வேறு எந்தத் தொழிலுக்கும் செல்ல முடிவதில்லை; வேலைவாய்ப்பும் பெற முடிவதில்லை. எனவே, தமிழக அரசின்மூலம் ஒரு கைத்தறிப் பூங்காவினை அங்கே அமைத்து, 3,000 கைத்தறிகளை அங்கே அமைத்துக் கொடுத்து, அதற்கான கட்டமைப்புப் பணிகளையும் செய்து கொடுத்தால், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மற்றும் ஏற்றுமதிக்கும்...



2007 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** வருகிறேன்... பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன. எனவே, ஒரு கைத்தறிப் பூங்காவினை அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வு அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கரூர் பகுதியிலே, முதன்முதலாக கைத்தறிப் பூங்கா அமைக்கிற நிகழ்ச்சிக்காக மாநில அரசிடமிருந்து மத்திய அரசிடம் ஒப்புதல் பெறுவதற்காக, முதலாவதாக ஒரு நிலை இங்கே தொடங்கப்பட்டிருக்கிறது. நெல்லிக்குப்பம் பகுதியிலே இருக்கிற புதுப்பேட்டையினுடைய கைத்தறி நெசவாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்கிற நிலையையும் கருத்திலேகொண்டு, அடுத்த ஒரு திட்டத்தின் முதல் நோக்கமாக இருக்கிற நிலையில், இந்தப் பகுதியிலே இதற்குரிய நிலை, துறையின்மூலமாக உருவாக்கப்படும் என்பதை இங்கே உங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையும், நுணுக்கமும், தரமும் வாய்ந்த திருபுவனம் பட்டு, இந்தியாவில் சிறப்புப் பெற்ற ஒன்றாகும். கழக ஆட்சிக் காலத்தில், ஜனாதிபதி பரிசு பெற்ற நெசவாளர்கள் அதிகமாக அந்தப் பகுதியில் உள்ளனர். மேலும் திருநாகேஸ்வரம், அம்மாசத்திரம், தாராசுரம், அம்மாபேட்டை, கும்பகோணம் பகுதிகளில் கைத்தறி நெசவாளர்கள் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். பட்டு கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைய உள்ளன. அரசுக்கு நிதிச் சுமை இல்லாமல் ஏற்கெனவே 50 ஏக்கர் நிலப் பரப்பில் தொழிற்பேட்டை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருபுவனத்தின் முக்கியத்துவம் கருதி, அங்கு பட்டு கைத்தறிப் பூங்கா அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஜனவரி 23

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி கேள்வியாக கேட்கும்படி நம்முடைய உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், வேளாண் தொழிலுக்கு அடுத்த தொழிலாக இருக்கிற, வேலைவாய்ப்பினை உற்பத்தி பெருக்குகிற தொழில், நெசவுத் தொழில். இப்போது படித்த இளைஞர்கள் அல்லது வேளாண்மையிலே ஈடுபட்ட பல்வேறு பொதுமக்கள் எல்லாம், வேலைவாய்ப்பு இல்லாமல் உழன்று கொண்டு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இந்த நெசவுப் பூங்கா அமைப்பதன்மூலமாக, நெசவுப் பூங்காக்களை உருவாக்குவதன்மூலமாக, உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்ல; வேலைவாய்ப்புகளை உருவாக்குகிற ஓர் அருமருந்தாக, அரிய வாய்ப்பாகத் தமிழ்நாட்டிலே இருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரிலே, சிறப்பு முன்னோடித் திட்டமாக ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, மாவட்டங்கள்தோறும் நெசவுப் பூங்கா உருவாக்குவதற்கு முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் படித்த பகுதி, கொளத்தூர் பகுதி; வேலைவாய்ப்பு இல்லாத பகுதி. அந்தப் பகுதியிலேயும், நங்கவல்லி பகுதியிலேயும் இப்படிப்பட்ட நெசவுப் பூங்கா அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், சென்னை, இருங்காட்டுக்கோட்டை, திருப்பூர், பல்லடம், ஆண்டிப்பட்டி மற்றும் குமாரபாளையம் பகுதிகளிலே இந்த விசைத்தறி நெசவுப் பூங்காக்களை அமைக்கிற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனுடைய தொடர்ச்சியாக நம்முடைய நாட்டிலே நெசவாளர்கள் அதிகம் இருக்கிற பகுதிகளிலே அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற தலைவர் கலைஞருடைய எண்ணத்தின் அடிப்படையில், அடுத்த திட்டத்திலே எந்தெந்தப் பகுதிகளில் தேவையோ, அதைத் துறையின்மூலமாக நாங்கள் தேடி, அந்தந்தப் பகுதிகளிலே ஜவுளிப் பூங்காக்களை அமைக்க இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

### சாலை சீரமைப்பு

***2537—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி ஏரிக்கரை உடைப்பினால் ஓசூர்-தளி நெடுஞ்சாலை துண்டிக்கப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓசூர்-தளி நெடுஞ்சாலையில் கி.மீ. 25/8-ல் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிக் கரையில் உள்ள பாலம் ஏற்கெனவே பெய்த மழையின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக, புதிய பாலம் கட்டும் பணி துறையின் பரிசீலனையில் உள்ளது. வரக்கூடிய 2008, ஜூன் இறுதிக்குள் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளாகச் சீரமைக்கப்படாமல் இருந்த தேன்கனிக்கோட்டை-தளி சாலை, தேன்கனிக்கோட்டை-கெலமங்கலம் சாலை, அத்திப்பள்ளி-இராயக்கோட்டை சாலை ஆகிய மூன்று சாலைகளைச் சீரமைத்து 5½ மீட்டர் அகலப்படுத்த, ரூ.10 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த தமிழக அரசுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, தளி சட்டமன்றத் தொகுதியில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கன மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, தளி பெரிய ஏரிக்கரை உடைந்து, தளி-ஓசூர் பிரதான நெடுஞ்சாலை துண்டிக்கப்பட்டு இருப்பதால், அந்தப் பகுதியில் இருந்து தொழில் நகரமான ஓசூருக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கும், பள்ளி

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் துண்டிக்கப்பட்ட நெடுஞ்சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர்-தளி சாலையில் கி.மீ 25/8—ல் பொதுப் பணித் துறை ஏரிக்கரையில் உள்ள பாலம், திரும்பக் கட்டும் பணிக்காக நிர்வாகப் பொறியாளர் அனுமதி பெற்று 30 மீட்டர் நீர் வெளியேறும் பாதையைக் கணக்கில்கொண்டு, NABARD R.I.D.F. XI திட்டத்தின்கீழ், அரசாணை எண் 78, நெடுஞ்சாலைத் துறை, நாள் 26–5–2006–ன்படி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 1–3–2006 முதல் 3 முறை ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டதில், எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை. 28–9–2006–ல் 4–வது அழைப்பில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதனிடையில் தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை ஏரியினை ஆய்வு செய்து, மேற்படி இடத்தின் நீர் வழிப் பாதையை 45 ½ மீட்டர் அகலம் மற்றும் நேர்பாட்டினையும் மாற்றியமைக்க அறிவுரை வழங்கி, அதன் விவரத்தைத் தலைமைப் பொறியாளர் (பொது) (நெடுஞ்சாலை), சென்னை அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** தலைமைப் பொறியாளர் (பொது) (நெடுஞ்சாலை) அவர்களின் குறிப்பாணை, நாள் 18–12–2006–ன்படி, திருத்திய மதிப்பீடு இத்துறையினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் திருத்திய நிர்வாக அனுமதி வழக்கப்பட்டு, மேற்படி பாலம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட்டு 2008, ஜூன் இறுதிக்குள் மேற்படி பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய நன்றி அறிவிப்பு. என்னுடைய திருப்போரூர் 



தொகுதியிலிருந்து சென்னை தி.நகர் வரையிலும் அதேபோன்று மறைமலை நகரிலிருந்து சென்னை தி. நகருக்கும் புதியதாகப் பேருந்து வழித் தடங்களை உருவாக்கி, அதில் புதிய பேருந்துகளை விட்ட டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதேபோன்று மாவட்டச் செயலாளர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், திருப்போரூர் தொகுதி மக்களின் நன்றியையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என்னுடைய கேள்வி-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் கேள்வி கேட்காமல், எதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்?

**திரு. டி. மூர்த்தி:** நன்றி, நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேள்வி கேளுங்கள்.

**திரு. டி. மூர்த்தி:** திருப்போரூர் தொகுதி பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நெமிலி–திருப்போரூர் இடையே பக்கிங்காம் கால்வாய்மீது மேம்பாலம், நெடுஞ்சாலைத் துறை மூலமாக அமைத்துத் தரப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மூலக்கேள்வி ஓசூர்–தளி சாலையிலுள்ள பாலம் கட்டும் பணிக்கானது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிக் கேள்வி எழுப்பினால் உரிய பதில் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## அடிப்படை வசதிகள்

***537—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2007 ஜனவரி 23

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் தொகுதியில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய, அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

**பால் கறவை மையம்**

***6881—திரு. செ. சின்னசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பாலகருதம்பட்டி கிராமத்தில் பால் கறவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியத்தில் உள்ள பாலகருதம்பட்டி கிராமத்தில் பால் கறவை மையம் அமைக்கப்பட்டு, 1-8-2006 முதல் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இக்கறவை மையத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 129 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் வேறொரு பால் கறவை மையம் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிற பாலுக்கு விலை உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக



2007 ஜனவரி 23]

நிலுவையில் இருந்து வருகிறது. அது உயர்த்தப்படப் போகிற செய்திகளும் இன்றைக்கு 'தினமலர்' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. மத்திய பால் ஆராய்ச்சிக் குழு கூடி, உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற செய்தியும் இன்றைக்கு வந்திருக்கிறது. இந்த நேரத்திலே, தமிழகத்தில் இருக்கிற ஏழையெளிய விவசாயிகளுக்குப் பாலின் கொள்முதல் விலை உயர்த்திக் கொடுக்கப்படுமா என்று அமைச்சரிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அதிலும் இன்னொரு செய்தி என்னவென்று சொன்னால், தமிழகத்திலே ஈரோடு மாவட்டத்திலும், விழுப்புரம் மாவட்டத்திலும் மட்டும், பால் கொள்முதல் செய்யப்படுகிற விலையை, 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய் வரை குறைத்துக் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ஈரோடு கூட்டுறவு ஒன்றியமும், விழுப்புரம் கூட்டுறவு ஒன்றியமும் நஷ்டத்தில் இயங்கிய காரணத்தினாலே N.D.D.B. மூலமாக மத்திய அரசினுடைய உதவிகளைப் பெற்று, கடனைப் பெற்று, அதனுடைய வளர்ச்சிக்காகப் பட்ட காரணத்தினாலே, அதைச் சரிக்கட்டுவதற்காக 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய் வரை குறைத்துக் கொடுக்கப்படுவதாகச் செய்தி இருக்கிறது. இந்த இரண்டு கோரிக்கைகளும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22-1-2007 'தமிழ் முரசு' பத்திரிகையில்கூட, பாலினுடைய விற்பனை விலையைத்தான் அதிகரித்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாங்கக்கூடிய விலையை உயர்த்த வேண்டும் என்று அதில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இன்னொன்று; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பால் வாங்குகிற விலையை உயர்த்த வேண்டுமென்று, விவசாயிகளுக்கு அதிக விலையைக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு பனமரத்துப்பட்டி சட்டமன்ற உறுப்பினர்கூட அவரிடம் அறிக்கை கேட்டதாகக் கூறியிருந்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள், விவசாயிகளுடைய தலைவர்கள் எல்லாம் வந்து அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். இவற்றைப்பற்றி நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் அணுகி, இந்தக் கூட்டத் தொடரில், பால் கொள்முதல் விலையை உயர்த்த முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மேலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இரண்டு மாவட்டங்களிலும் rehabilitation செய்வதற்காக அதாவது சரிக்கட்டுவதற்காக, நட்டத்தைச் சரிக்கட்டுவதற்காக, விவசாயிகளுடைய ஒத்துழைப்போடு, 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, அந்தக் கொள்முதல் விலை 50 பைசா குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 ஆண்டுக் காலம் முடிந்தபிறகு, நிச்சயமாக மற்ற மாவட்டங்களில் என்ன தொகை கொடுக்கப்படுகிறதோ, அதே விலைக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பாலை வாங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள்தான் பேசப் போகிறீர்கள்; உங்கள் கருத்துகளை நீங்கள் அப்புறம் பேசும்போது சொல்லிக்கொள்ளுங்கள், உட்காருங்கள்.

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய பன்னிரண்டு முதல் பதினெட்டு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.





**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்று முதல் பதினைந்து வரையிலான பதினைந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2007 ஜனவரி 23

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். மொத்தம் 12 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்குமேலே எடுத்துக்கொள்ளாமல், தங்களுடைய உரையை 10 நிமிடங்களுக்குள் பேசி முடிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** கண்ணியமிக்க சான்றோர்களும், ஆன்றோர்களும், அறிஞர்களும், கலைஞர்களும் இருந்த, இருக்கின்ற இந்த அவையினுடைய கண்ணியமிகு மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, என் குடும்பத்தின் மூத்த தலைவர், உலகத் தமிழர்களின் ஒரே தலைவர், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் வாழும் காலங்களில் நான் வாழ்வது பெருமை. உங்களால் இந்த எளியோன் துணை மேயரானது பெருமை. உங்கள் காலத்தில் இந்த அவையில் என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கியது என் வாழ்நாள் முழுவதும் பெருமை. என் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். அதைப்போலவே, எனக்குப் பிறகு என்னுடைய ஏழு தலைமுறைகளும் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அதுபோல, கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், மாண்புமிகு நிதியமைச்சருமான மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், என் வெற்றிக்குத் தொகுதி முழுவதும் சுற்றி பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்த, என் வெற்றிக்கு உதவிய, இளைஞர்களின் எழுஞாயிறு, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், அதைப்போலவே, அரும்பாடுபட்டு மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்த என்னை, மிகச் சாதாரணம் என்றால், எவ்வளவு மிகமிக என்று போட்டுக் கொண்டாலும் தகும். அதைப்போல ஒரு சாதாரணமான குடும்பத்தில் பிறந்த என்னை, குடத்திற்குள் இருந்த இவ்விளக்கினை, குன்றினில் ஏற்றி, புகழான வெற்றியைக் காணச் செய்த கொடைக் கரம், தமிழர் குல விளக்கு, எளிமையை வலிமையாக்கி, வலிமைக்குப் பொலிவு சேர்த்து, பொலிவிற்கு மகுடம் சூட்டி, தமிழகம் மட்டுமல்லாது அகில இந்தியாவே வியக்குமளவிற்குச் சாதனை படைத்த வெற்றி நாயகன், என் குடும்பத்தின் மூத்த அண்ணன், ஆற்றலரசர், அஞ்சா நெஞ்சன், (மேசையைத் தட்டும் ஒலி)





*"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்"*-க்குப்

பிறந்த அண்ணன் மு.க. அழகிரி அவர்களுக்கும் எனது வெற்றியைப் பாதங்களில் வைத்து நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். அதைப்போலவே, மதுரை மத்தியத் தொகுதியில் என் வெற்றிக்குப் பாடுபட்ட கழகத்தின் முன்னோடிகளுக்கும், தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(முற்பகல் 10–40)

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

ஏழை மக்களின் பசி போக்கிட, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாது தமிழகத்தில் மட்டும் கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கியும், ஏழை மக்களுக்கு இலவச கலர் டி.வி. வழங்கியும், தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில், விவசாயக் கடனை அறவே தள்ளுபடி செய்தும் புரிந்த சாதனைக்கும், தலைவரின், 100 நாட்கள் ஆட்சி சாதனைக்கும் அங்கீகாரம் அளித்து, மைனாரிட்டி அரசு என்று கூக்குரலிட்டவர்களுக்கு மரண அடி கொடுத்து, அவர்களின் வாயடைத்து, என்னைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த மதுரை மத்தியத் தொகுதி வாக்காளர்களுக்கும் நன்றியைச் சமர்ப்பித்து, எனது தாழ்மையான அறிமுக உரையைத் துவக்குகின்றேன்.

இப்பேரவையின் வாயிலாக, தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாட்சித் திறன்களை நானிலத்திற்கும் எடுத்துரைத்த, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு, முதலிலே நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்த உரை மக்களுக்குப் பொற்கிழி என்றால் அது மிகையல்ல. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பன்னெடுங்காலமாய் மறுக்கப்பட்டு வந்த உரிமைகள் மீட்பு; சமூக நீதி கண்ட அத்தலைவர்களுக்கு நம் தலைவர் கலைஞர் அவர்களால், தலைநகரிலே பாராட்டு; இந்திய அரசியல் சட்டத்திற்கு மறு மதிப்பீடு தேவை என ஒரு மாமாங்கத்திற்கு முன்னால் மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவிற்கு எழுச்சிக் குரல் ஒன்று இந்த உரையிலே எழும்பியுள்ளது. இந்த உரைக்கு விரைவிலே தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு நல்லுரை காண்பார் என்ற நம்பிக்கை இந்த மாமன்றத்திற்கு உள்ளது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற நற்பணி வரி விதிப்பு, நமக்கே தேவை என ஒரு நற்கோரிக்கை; 11 ஆண்டுக் காலமாய்ப் பரிதவிக்கும் காவிரிக் கரை விவசாயிகளுக்கு காவிரி நடுவர் மன்றத்தால் விரைவிலே ஒரு நல்ல தீர்ப்பு; அதுவும் கலைஞர் ஆட்சியால் வந்த ஒரு தீர்ப்பு; 10 ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டிக் குடியிருப்போரில், தகுதியானவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கல்; வரும் கல்வியாண்டில் எல்லா அரசுப் பள்ளிகளிலும் கணினி ஆய்வகங்களை அமைத்து, அதன்மூலம் மாணவர்களுக்குக் கணினிக் கண்கள் திறப்பு; நுகர்வோர் மற்றும் வணிகர்களின் நலன் காக்கும் மதிப்புக் கூட்டு வரி அமலாக்கம்; பட்டறிவோடு இருப்பவர்களுக்குப் பார் பற்றிய அறிவைப் புகட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; அடுப்பூதும் பெண்களுக்குச் சுய வேலைவாய்ப்பு நல்க மகளிர் உதவிக் குழுக்களுக்கு ஊக்கம்; இன்னமும் பெண்கள் அடுப்பு ஊத வேண்டுமா என்ற கேள்விக்கு விடையாக அவர்களின் அடுப்படிகளுக்கு இலவச எரிவாயுடன்கூடிய எரிவாயு அடுப்பு; வீட்டுப் பணியாளர்களுக்கு ஒரு வாரியம்; ஊனமுற்றோருக்கு ஒரு வாரியம்; மீனவர்களுக்கு ஒரு வாரியம் என இந்த உரையிலே ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் முத்தான மூன்று திட்டங்கள். இவையெல்லாம் ஏழைகளின் கண்ணீர்த் துடைப்புகள்; வருமுன் காப்போம்போல, பின்தங்கியவர்கள் முன்னேற வாழ்ந்து காட்டுவோம் என்கின்ற ஒரு திட்டம்; இவை செப்படி வித்தை அன்று; செதுக்கிய வரலாறுகளாய்ப் பின்வரும் மக்களும் பின்னாளில் போற்ற, மேதகு ஆளுநர் உரையில் எங்கெங்கு காணினும் மக்களின் நலன்காக்கும் மகத்துவப் பணிகள்; இந்த மகத்தான பணிகளுக்கெல்லாம் தலையாய் விளங்கும் என் தலைவருக்கு நன்றி கூறி, என் தொகுதி மக்களையும் கண்ணேறுபடாமல் கொஞ்சம் கண்கொண்டு பார்க்கவேண்டும் என்கின்ற சிந்தையோடு, தொகுதிப் பிரச்சினைகளை இந்தப் பேரவையின்மூலம் தலைவர் கலைஞர் அவர்களின் தலையாய முடிவுகளுக்காகத் தலைவணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

முற்பகல் 10–45

உலக அதிசயங்களிலே ஒன்றாக, வரலாற்றுச் சிறப்புமிக்க, கலைநயமிக்க, கலைப் பொக்கிஷமாக விளங்கக்கூடிய மதுரை அருள்மிகு அன்னை மீனாட்சி அம்மன் திருக்கோயில், பல்வேறு வெளிநாட்டுப் பயணிகளும், வெளி மாநில பக்தர்களும் வந்து செல்லும் ஆன்மீகம் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. ஆனால், பக்தர்கள் வரக்கூடிய பகுதிகளிலுள்ள சாலைகள் மற்றும் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகள் சுகாதாரச் சீர்கேட்டுடனும், சாலைகள் மற்றும் நடைபாதைகள் மிக மோசமாகவும் உள்ளன. இந்தப் பகுதியை உடனே வெளிநாட்டுத் தரத்திற்கு





அழகுபடுத்தி, தூய்மையாகப் பராமரிக்க, அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனால் மதுரைக்கும் பெருமை; தமிழகத்திற்கும் பெருமை; ஏன், அகில இந்தியாவிற்கே பெருமை. இதன் அருகில் உள்ள Central Market-ஐ உடனே அகற்ற வேண்டும். அதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் மற்றும் போக்குவரத்து நெரிசல்கள் தடுக்கபபடவேண்டும். அதைப்போலவே, அன்னை மீனாட்சி அம்மன் கோயிலில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் பழுதுபார்க்கப்பட்டு, பொற்றாமரைக் குளத்தில் நீர் நிரப்பப்பட்டு, கோயில் புனிதம் காக்கப்படவேண்டும். அதுபோலவே வண்டியூர் தெப்பக்குளம், மதுரை பெருமாள் கோயில் தெப்பக்குளத்திலும் நீர் நிரப்பி, ஆண்டுதோறும் இருக்க ஆவன செய்யவேண்டும். கலை அம்சம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, தென் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையின் தரத்தை உயர்த்தி, உடனுக்குடன் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு உள்பட பல்வேறு உயர்தர அறுவை சிகிச்சைப் பிரிவுகள் துரிதமாகச் செயல்பட்டு, தென் மாவட்ட மக்களின் துயர் துடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மருத்துவமனையின் சுகாதாரம், குடிநீர், மின்சார வசதிகளைப் பெருக்கவேண்டும். குறிப்பாக, அனைத்து மருத்துவக் கருவிகளும், உயிர்காக்கும் மருந்துகளும் வைக்கப்பட்டு, நாட்டிலே உயர்தர மருத்துவமனையாக உருவாக்கவேண்டும். இதற்குரிய ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, உரிய நிதியினை வழங்கவேண்டும். மேலும், அண்ணா பேருந்து நிலையத்திற்கான இடத்தில் மருத்துவமனைக் கூடுதல் கட்டடம் உடனடியாகக் கட்டப்படவேண்டும்.

மதுரை மாநகரத்தில், 25 ஆண்டுகளுக்கும் மேலாக திடீர் நகர், ஹீரா நகர், எம்.கே. புரம், ஆண்டாள்புரம், எல்லீஸ் நகர், போடிலைன், சிம்மக்கல் போன்ற பகுதிகளில் பட்டா இல்லாமல் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார்கள். கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, உடனடியாக அவர்களுக்கு இலவசப் பட்டா வழங்க உத்தரவிடுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். பல்வேறு சலுகைகளை வாரி வழங்கிய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின்மூலமாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு நிர்ணயித்தத் தொகைக்கு வட்டி, அபராத வட்டி என மோசமாக வசூலித்து, பொதுமக்கள், பல்வேறு இன்னல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இடத்திற்குரிய கிரயத் தொகையை முறையாகச் செலுத்தியவர்களுக்குப் பத்திரம் வழங்காமல், அவர்கள் சொல்லொணாத்

துயரத்திற்கு ஆளாகிறார்கள். விவசாயக் கடன் 7,000 கோடி ரூபாயை ஒரே ஆணையில் இரத்து செய்த ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் அத்தகையோர்க்கு உள்ள சுமார் 800 கோடி ரூபாய் வட்டிக் கடனைத் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க உத்தரவிடும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அவர்களுக்கு உடனடியாகப் பத்திரம் கிடைத்திட ஆவன செய்யுமாறும் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் மேலவாசல், சுப்பிரமணியபுரம் ஆகிய பகுதிகள் உள்ளன. அதில் மாநகராட்சிக் காலனிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள், சுமார் 1,140 குடியிருப்புகளில் மிகமிக மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள், ஒப்பற்ற தலைவர் கலைஞரின்மீது பற்றும், பாசமும் கொண்டவர்கள். மேற்கண்ட அனைவரும் மிக மிக வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்கள். இவர்கள் அங்கேயே வாழ விரும்புகிறார்கள். ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களே, தாங்கள் ஐந்தாம் முறை ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 696 புதிய வீடுகளைக் கட்ட உத்தரவிட்டுள்ளீர்கள். கருணையுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களே, அந்த மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் துயரத்தைத் துடைத்தெறிய, மேலும் 444 வீடுகள், ஆக 1,140 வீடுகள் கட்டிக்கொடுக்க உத்தரவிட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

மதுரையில் உள்ள காவலர் குடியிருப்புகளில் குடியிருக்கக்கூடிய காவலர்கள் பயன்படுத்தும் பாதைகளில், தெரு விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் அங்கு வசிக்கக்கூடிய காவலர் குடும்பங்கள் மிகவும் சிரமப்படுகின்றன. அதைப்போலவே குடிநீர், சுகாதார வசதிகள் குறைவாக உள்ளன. உரிய நடவடிக்கை எடுத்து, உடனடியாக தெரு விளக்குகள், தண்ணீர் வசதி செய்து தர வேண்டும். இதற்குக் காவலர் வீட்டு வசதிக் கழகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை வக்ஃபு போர்டு கல்லூரிக்காக, ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் கடந்தகால ஆட்சியில், ஏறத்தாழ 40 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தரப்பட்டது. அது பராமரிப்பின்றி, ஆக்கிரமிக்கப்பட்டதுபோக 22 ஏக்கராக இப்போது சுருங்கிவிட்டது. தற்போதுள்ள இடத்தில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கவும், கல்லூரி செவ்வனே நடைபெறவும், வருமானம் ஈட்டித் தரும் வகையிலும் வக்ஃபு போர்டு கல்லூரியின் சட்டத்தைத் திருத்தி, முன்புறம் உள்ள பகுதியின்





கீழ்த்தளத்தில் கடைகளும், மேல்தளத்தில் மாணவர்கள் தங்கும விடுதியும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டும். மேலும், தென் மாவட்டங்களில் சிறுபான்மைச் சமுதாயம் ஏற்றம் பெறும் வகையில், வக்ஃபு போர்டு கல்லூரியின் மீதியுள்ள காலியிடத்தில் பல் மருத்துவக் கல்லூரி அல்லது பொறியியல் கல்லூரி அரசின் செலவிலேயே கட்டித் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னைக்கு அடுத்தபடியாக, சிறந்த மாநகராட்சியாக மதுரை மாநகராட்சி திகழ்ந்து வருகிறது. மதுரையில் ஏற்கெனவே இருந்த பல்வேறு மில்கள், TVS தொழிற்சாலை, Fenner, Madura Coats Mill, Meenakshi Mill போன்ற தொழில் ஸ்தாபனங்கள் இப்போது மூடப்பட்டு, தொழிற் சாலைகளே இல்லாத ஜனநெருக்கடி மிகுந்த பரிதாபத்திற்குரிய நகரமாக இருக்கிறது. ஆட்சிக்கு வரும்பொழுதெல்லாம் மதுரைக்கு மறுமலர்ச்சி தரும் தலைவர் கலைஞர் அவர்களே, இம்மாநகர் தொழில் துறையில் புத்துணர்வு பெற தொழில் பூங்கா, தொழில்நுட்பப் பூங்கா உள்ளிட்ட உள்நாட்டு, அயல்நாட்டு முதலீடுகள் மூலம், மதுரை மக்களுக்கு மறுவாழ்வும் தென் மாவட்ட மக்களுக்கு, படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும் ஆவன செய்திடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சியின் அலட்சியப்போக்கால், எனது மதுரை மத்தியத் தொகுதியிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கி மூடப்பட்டது. மீண்டும் அது திறக்கப்பட வேண்டும். காரணம் இந்தியன் வங்கியாக இருந்தாலும்சரி, தேசியமயமாக்கப்பட்ட எந்த வங்கியாக இருந்தாலும்சரி, டெபாசிட்தாரர்கள் தங்கள் டெபாசிட் தொகையை ஒரே நேரத்தில், ஒட்டுமொத்தமாகத் திருப்பிக் கேட்டால், அந்த வங்கி கடும் பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டு, மூடப்பட வேண்டிய நிலைதான் உருவாகும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தலையிட்டு, மானியம் கொடுத்து வங்கியைக் காப்பாற்ற முடியாமல், அ.தி.மு.க. அரசின் அலட்சியப்போக்கால் அது மூடப்பட்டது. இன்றைக்கு டெபாசிட்தாரர்களும், வங்கியில் முதலீடு செய்தவர்களும், ஊழியர்களும் நடுத் தெருவில் நிற்கிறார்கள். வங்கிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு மானியம் அளித்து வங்கியை மீண்டும் செயல்பட வைக்குமாறு ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், மதுரை நகர வங்கியில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் உள்ளனர். மேற்படி வங்கிக்கு 5.5 கோடி ரூபாய் வெளியிலிருந்து வர வேண்டியுள்ளது. பொது மக்களுக்கு டெபாசிட் தொகையாகத் தர

வேண்டியது 42 கோடி ரூபாய். இதில் இன்ஷூரன்ஸ் மூலமாகக் கிடைத்த 25 கோடி ரூபாயைத் தற்பொழுது டெபாசிட்தாரர்களுக்கு வழங்கி வருகிறார்கள். மீதியுள்ள 17 கோடி ரூபாயைத் தமிழக அரசு மானியமாக வழங்கி, டெபாசிட்தாரர்களுக்கு உரிய தொகை கிடைத்திட வழி செய்யுங்கள். வங்கிக்கு வரவேண்டிய ரூபாய் 55 கோடியை வசூலிக்கும்வகையில், மீண்டும் வங்கியைத் திறந்து செயல்பட வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அப்படி முடியாதபட்சத்தில், டெபாசிட்தாரர்களுக்கு உரிய தொகையை மானியமாக அளித்தும், பணியாளர்களுக்கு மாற்றுப் பணியிடம் அளித்தும் உதவுமாறு ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–55

கழக அரசினால் அடிக்கல் நாட்டப்பட்ட இரண்டாம் வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டம், விரைவுபடுத்தப்பட வேண்டும். இதனால், மதுரை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, மதுரையின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும்விதமாக, கழக அரசினால் அடிக்கல் நாட்டப்பட்ட இரண்டாம் சுற்றுச் சாலைப் பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, மதுரையினுடைய போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்குத் தேவையான பகுதிகளைக் கண்டறிந்து fly–over என்கின்ற மேம்பாலப் பணிகளை ஆங்காங்கே மேற்கொண்டு, மதுரை நகர மக்களின் துயரத்தைத் துடைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே நலிந்து வரும் நாடக நடிகர்களின் வாழ்வு மலரச் செய்ய, கோயில் திருவிழாக்களில் ஆண்டுக்கு ஒரு முறை கண்டிப்பாக நாடக நிகழ்ச்சிகள், அரசு சார்பில் அல்லது கோயில் சார்பில் நடத்தப்பட வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, என்னை இந்த மன்றத்திலே இன்றைக்கு அமர்த்தியிருக்கக்கூடிய ஆற்றல் அரசர், அஞ்சா நெஞ்சன் அண்ணன் மு.க. அழகிரி அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருவாளர் பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது





நடந்துகொண்டிருக்கிற இந்த விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவாதத்திற்கு உள்ளே போவதற்கு முன்பாக, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சில கோரிக்கைகளை முன்வைத்துவிட்டு, பிறகு நான் விவாதத்திற்கு வருகிறேன். ஏற்கெனவே இந்த அவையிலே பல முறை நான் வலியுறுத்தியதுபோல, எங்களுடைய வேலூர் நகரத்தில் 80 ஆண்டுகளாக இயங்கிவந்த, அரசு Pentland மருத்துவமனைக்கு மூடுவிழா நடத்திவிட்டு, இப்போது அங்கே 1,500 beds கொண்ட அந்த மருத்துவமனையின், எல்லாக் கட்டடங்களுமே எல்லாமே மூடப்பட்டிருக்கின்றன; அதற்கு உடனடியாக 40 டாக்டர்களையும், 50 செவிலியர்களையும் மற்றும் உபகரணங்களை எல்லாம் தந்து, உடனடியாகத் திறக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக்கொண்டு, உடனடியாக திறக்கப்படும் என்று அறிவித்தார்கள். எங்களுடைய வேலூரில் 80 ஆண்டு காலமாக இயங்கி வந்த அரசு மருத்துவமனையை, Government Pentland Hospital–ஐ உடனடியாகத் திறப்பதற்கு அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வேலூரிலே புதிதாகத் துவக்கப்பட்டிருக்கிற பேருந்து நிலையத்தில், M.L.A. நிதியைக் கொண்டு, அதேபோல சில Small Savings Fund போன்றவற்றையெல்லாம் வைத்து, இப்போது கீழே ரோடுகளை மட்டும் போட்டிருக்கிறோமேயொழிய, பயணிகள் தங்குகிற அந்த நிழற்குடைகளையோ அல்லது bay—பஸ்கள் நிற்பதற்கான இடத்தையோ, அல்லது கடைகளையோ இன்னும் கட்டவில்லை. 5 கோடி ரூபாய் Town and Country Planning Consolidated Fund–லிருந்து உடனடியாக மானியமாகத் தந்து, உடனடியாக வேலூர் புதிய Bus Stand–ல் அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதற்காக ஏற்கெனவே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருகைதந்து, அடிக்கல் நாட்டு விழாவை எல்லாம் நடத்தினார்கள். அதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக ஐந்து கோடி ரூபாயை அரசு வழங்கி, அங்கே கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

அதேபோல, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிவிட்டது. இன்னும் பணிகள்

[திரு. சி. ஞானசேகரன்] [2007 ஜனவரி 23

தொடங்கப்படவில்லை. அதற்கு tender வைத்திருக்கிறார்கள். மீண்டும் re-tender வைப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் வேகப்படுத்தி, நம்முடைய வேலூர் நகரத்திற்கு உடனடியாக பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான பணியைத் துவக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2000 ஆம் ஆண்டு, அப்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்கள், இந்த அவையிலே அரசு சட்டக் கல்லூரியை வேலூருக்கு வழங்குவதாக அப்போதே அறிவித்தார்கள். ஆனால், பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நடைபெறவில்லை. உடனடியாக வேலூருக்கு அரசு சட்டக் கல்லூரியை வழங்கி அங்கே அதற்கான துவக்க விழாவை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை அந்த இடத்திலே நடத்துவதாக அறிவிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அதற்கான கட்டடங்கள் இல்லை. இன்னும் அதற்கான infrastructure எதையுமே நாம் உருவாக்கவில்லை. ஆகவே, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு இடத்தைத் தேர்வு செய்து, உடனடியாகக் கட்டடங்களைக் கட்டவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இப்போது விவாதத்திற்கு வருகிறேன்.

பாலாறு என்பது நம்முடைய வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், அதேபோல சென்னை ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குக் குடிநீரை ஆரம்பக் காலத்திலிருந்து வழங்கி வந்த ஒரு வற்றாத நதியாக முன்பு இருந்தது. பாலாறு என்று அழைக்கப்பட்டு, பிறகு அது இப்போது பாழாறு என்று சொல்லக்கூடிய அளவிற்கு, மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது. இந்த ஐந்து மாவட்டங்கள் குடிநீருக்காக நம்பியிருந்த இந்தப் பாலாற்றில், ஆந்திர அரசு கிட்டத்தட்ட 34 இடங்களிலே அவர்கள் தடுப்பணைகளைக் கட்டிவிட்ட காரணத்தாலே, மழை வந்தால், ஏதோ சில நேரங்களிலே எங்களுடைய பாலாற்றிலே தண்ணீர் எட்டிப் பார்க்கிறது. மற்ற நேரங்களில் தண்ணீரே இருப்பதில்லை. இப்போது எங்களுக்கு அதிர்ச்சியான ஒரு செய்தி. ஏற்கெனவே சென்ற கூட்டத் தொடர் நடந்தபோதுகூட, அப்போது நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் உடல்நலம் குன்றியிருந்தபோது, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அந்தத் துறையினுடைய பொறுப்பை வகித்தார்கள். அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அதேபோல நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், இரண்டு பேரும் ஹைதராபாத்துக்குச் சென்று—இப்போது கணேசபுரம் என்கிற இடத்திலே,



2007 ஜனவரி 23] [திரு. சி. ஞானசேகரன்]

குப்பத்தின் பக்கத்திலே அவர்கள் ஒரு பெரிய அணை கட்ட, 30 கோடி ரூபாய் அளவிலே நிதி ஒதுக்கீடு செய்து, வருகிற 28 ஆம் தேதி, ஆந்திர முதல்வர் அடிக்கல் நாட்டுவதாக, ஏற்கெனவே தகவல்கள் வந்துவிட்டன; பத்திரிகைகளிலே செய்திகள் எல்லாம் வந்துவிட்டன; நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அதேபோல உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் சென்ற முறை—ஆந்திர முதலமைச்சரைச் சென்று பார்த்தபோது, "நாங்கள் அப்படிக் கட்டமாட்டோம்; அப்படிக் கட்டுவதாக இருந்தால், நாங்கள் தமிழக அரசுக்குச் சொல்லி, ஒரு நல்ல முடிவு எடுக்கக்கூடிய நிலையை உருவாக்கலாம்" என்று கருத்து தெரிவித்ததாகச் சொன்னார்கள். ஆனால், இன்று 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அடிக்கல் நாட்டுவதற்காக ஆந்திர அரசு எடுத்திருக்கிற முயற்சி, உண்மையிலேயே இந்த ஐந்து மாவட்ட மக்களுக்கும் செய்யக்கூடிய ஒரு மாபெரும் துரோகமாகும். அப்படிப்பட்ட செயலை இந்தத் தமிழக அரசு, எப்படித் தடுத்து நிறுத்தப் போகிறது என்று நான் அறிய விரும்புகிறேன். சொல்லப்போனால், இது காட்டுப் பகுதி. வனப் பகுதியிலே வரக்கூடிய ஒரு இடம். வனப் பகுதியிலே வருகிறபோது, நம்முடைய மத்திய வனத் துறை அமைச்சருடைய ஒப்புதல் இல்லாமல் அவர்கள் அந்த இடத்திலே அணையைக் கட்ட முடியாது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

நான் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், அதேபோல நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுக்கு உயிர்த் தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருக்கிற இந்தப் பாலாற்றுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னால், எதிர்காலத்தில் நம்முடைய மாவட்டம், கொஞ்சம்கூட வற்றிவிடாத ஒரு மாவட்டமாக இருக்கவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஆந்திர முதல்வரோடு பேசி, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால், மத்திய வனத் துறை அமைச்சகத்திற்கு எடுத்துச்சொல்லி, வனத் துறையிலே அவர்கள் அணையைக் கட்டாமல் இருப்பதற்கு உடனடியாகத் தடை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கு உண்மையிலேயே ஒரு பெரிய போராட்டம் வெடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, நானும் அவருமே, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாலே பெரிய அளவிலே

[திரு. சி. ஞானசேகரன்] [2007 ஜனவரி 23

போராட்டத்தை நடத்தினோம். இப்பொழுது அந்தத் துறைக்கே அவர்கள் அமைச்சர். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்துக்காரர். பாலாற்றுத் தண்ணீரை அவரும் குடித்து வளர்கிறார்; நானும் குடித்து வளர்கிறேன். ஆகவே, நீங்களாவது, உடனடியாக முதல்வர் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, ஆந்திர முதல்வருடன் உடனடியாகப் பேசி அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை எடுத்தால்தான், எங்களுடைய மாவட்டம் எதிர்காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து தப்பும். இல்லையென்று சொன்னால், ஒரு பெரிய ஆபத்தில்போய்ச் சிக்கிக்கொள்ளக்கூடிய ஒரு நிலை வந்துவிடும் என்பதை நான் தமிழக அரசுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தேசிய நதிகளையெல்லாம் இணைக்க வேண்டுமென்றும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் இப்போது ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலே நாங்களெல்லாம் வரவேற்கிறோம். நம்முடைய தவத்திரு சாய் பாபா அவர்கள்கூட நம்முடைய தமிழகத்திற்கு வந்திருந்தபோது, அவர்கள் விழாவிலே பேசுகிறபோது மாநிலங்களையெல்லாம் பிரித்தால் அது நல்லதல்ல என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, ஆந்திராவிலே தெலுங்கானா பிரியத் தேவையில்லையென்று சொன்னபோது அதற்கு எதிர்ப்பாக இப்போது பலபேர் அங்கே சில போராட்டங்களையெல்லாம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்த மாநிலங்களைப் பிரித்ததனால் வந்த வினையை, இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். மொழிவாரி இராஜ்யம் என்று வந்துவிட்ட காரணத்தினாலேதான், ஏற்கெனவே ஒன்றுபட்ட Madras Presidency என்று இருந்த நம்முடைய பகுதியில், இப்போதுள்ள நம்முடைய தமிழகம், கேரளா, அதேபோல கர்நாடகம், ஆந்திரம் எல்லாம் ஒன்றாக இருந்து, பின்னர் பிரிந்தன.

*முற்பகல் 11-05*

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்" என்ற பாடலிலே சொல்கிறபோது,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"



2007 ஜனவரி 23] [திரு. சி. ஞானசேகரன்]

என்று பாடினார் மனோன்மணீயம் சுந்தரனார் அவர்கள். கன்னடம், களி தெலுங்கு, கவின் மலையாளம், இவையெல்லாம் நம்மிடமிருந்து பிரிந்து போனதினுடைய விளைவு—இப்பொழுது பார்த்தால் பக்கம் பக்கமாக இடிக்கிறார்கள். அந்த இடத்திலே, ஆந்திராவிலே அவர்கள் பாலாற்றிலே அணை கட்டுகிறார்கள்; முல்லைப் பெரியாறு, அங்கு பார்த்தால் கேரளாவிலே இருப்பவர்கள், இங்கு வந்து அந்த அணையை நான் உடைக்கிறேன் என்கிறார்கள். என்னைக் கேட்டால், இப்படிப் பிரித்துவிட்ட இந்தப் பகுதிகளையெல்லாம், மீண்டும் இவற்றை ஒன்றாக்குவதற்கு—ஏனென்று சொன்னால், அரசியல் சாசனத்தையே காலத்திற்கேற்ப நாம் திருத்த வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொல்கிறபோது—இந்தப் பிரிந்துவிட்ட மாநிலங்களைக்கூட ஒன்றாகச் சேர்த்து விட்டாலே, இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது ஒரு தீர்வு காண முடியுமா என்பதையும் மறு சிந்தனைக்கு நாம் நிச்சயமாக இதை விடவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசியல் சாசனச் சட்டத்தைத் திருத்த வேண்டும்; காலத்திற்கேற்ப அதை நாம் மாற்ற வேண்டும்; மத்தியிலே கூட்டாட்சி என்கிற தத்துவம் நிலைபெற வேண்டும் என்றெல்லாம் இங்கே மிக அழகாக நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுடைய கட்சியைச் சார்ந்த, அதேபோல முதல் பிரதமராக வந்த மாண்புமிகு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், கர்மவீரர் காமராஜர் போன்றவர்களெல்லாம் எடுத்த முயற்சியால், பிறகு தமிழகத்திலே எழுந்த அத்தனை கோரிக்கைகளால், தந்தை பெரியார், அதேபோல பேரறிஞர் அண்ணா, கலைஞர் போன்றவர்கள் எல்லாம் எடுத்த முயற்சியால், அப்போது டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இயற்றிய அந்த அரசியல் சாசனச் சட்டத்தில் சொல்லப்பட்ட அந்த 67 சதவிகித இட ஒதுக்கீடு குறித்து இப்போதுதான் நாம் ஒரு சிந்தனைக்கே வருகிறோம். காரணம், Judicial activism. இப்பொழுதெல்லாம், அரசு, ஒரு சட்டத்தை இயற்றி, 69 சதவிகித இட ஒதுக்கீடு குறித்து நாம் பேசுகிறபோதுதான் Judicial activism என்ற இந்தப் பிரச்சினையே வருகிறது. காரணம், அதற்கு ஒரு இடையூறை ஏற்படுத்துகிற வகையிலே, அதை ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்ததைக்கூட நாங்கள் பரிசீலிப்போம் என்று உச்ச நீதிமன்றம் சொன்ன காரணத்தினாலேதான், இப்போது நாம் இந்த அரசியல் சாசனத்தையே காலத்திற்கேற்ப திருத்த வேண்டும் என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறோம். இப்படி நாம் 69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைக் கொண்டுவர வேண்டும்; அதுதான் சமூக நீதி என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்; உண்மை. அதை எல்லோருமே ஏற்றுக்

கொண்டார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், கர்மவீரர் காமராஜர் போன்றவர்கள் எல்லாம் இருந்தபோதுதான் முதன்முதலிலே, முதல் திருத்தம், First Amendment to the Constitution என அப்போதுதான் வந்தது. இப்போது 100 Amendments என வந்துவிட்டன. அரசியல் சாசனத்திலே மாற்றங்களை வேண்டுமானால் நாம் உருவாக்கலாம். ஆனால், அதனுடைய அடித்தளத்தையே தகர்த்துவிட்டு, மீண்டும் நாம் அரசியல் சாசனத்தை எழுதுவோம் என்று சொன்னால்—ஏனென்றால், இந்த அரசியல சாசனம்தான நம்முடைய இந்தியத் திருநாடு இன்னும் சிதறுண்டு போகாமல், ஒருங்கிணைந்த ஒரு நாடாகக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது; நம்முடைய பெரிய stalwarts, அம்பேத்கர் போன்றவர்கள் எல்லாம் இயற்றிய அந்த அரசியல் சாசனம், மிகக் கட்டுக்கோப்பாக இந்தியாவைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அப்படிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற இந்த Constitution-ல் 'இன்னும் சில திருத்தங்களைக் காலத்திற்கேற்ப நாம் கொண்டுவந்து, இதை எப்படியாவது—ஏனென்றால், 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நிச்சயமாக எல்லாக் கட்சிகளும் தமிழகத்திலே வரவேற்கின்றன. அதிலே மாறுபட்ட கருத்து யாருக்குமே இல்லை—அதை எல்லா இடங்களிலும் வலியுறுத்தி, அதை நிறைவேற்றுவதற்கான முயற்சியை நிச்சயமாக நாம் எடுக்கவேண்டும்.

மாநிலத்திலே இதுபோன்ற 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் Judicial activism பற்றிச் சொல்ல வந்தேன். இந்த Judicial activism என்னும்போது, இப்போது சட்டத்தை இயற்றுபவர்கள் நாம்; நிர்வாகத்தில் இருப்பவர்கள் நாம்; நிர்வாகம் எடுக்கிற முடிவைச் சட்டமாக்குகிறபோது, அந்தச் சட்டத்திற்கேற்ற வகையில்தான் தீர்ப்புகள் நிச்சயமாக நீதிமன்றத்திலே வரவேண்டும். அப்படித்தான், அந்த வரையறையில்தான் அவர்கள், அப்படிப்பட்ட நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்கியாக வேண்டும். ஆனால், இப்பொழுதெல்லாம் தங்களுடைய எல்லையைக் கடந்து, அவர்கள் சில தீர்ப்புகளை வழங்குகிற காரணத்தினாலேதான், இப்போது அரசு ஆளுகிறதா அல்லது நீதிமன்றங்கள் ஆளுகின்றனவா என்று சொல்லக்கூடிய அளவிற்குக் காலப்போக்கு மாறிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், இங்கே building-ஐ யாரெல்லாம் approval இல்லாமல் கட்டி விட்டார்களோ, அதை regularisation செய்வது என்று ஒரு சட்டத்தை, இப்போது உயர் கல்வித் துறையினுடைய அமைச்சராக இருப்பவர்தான், அப்போது, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 'Regularisation of the building' என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். சென்னையிலே, அதற்கான பணத்தையெல்லாம்கூட வசூல் செய்தாகிவிட்டது. ஆனால், அந்தப்





பணத்தையெல்லாம் வசூலித்துவிட்டு, C.M.D.A. எல்லாம் வரன்முறை செய்துவிட்டபிறகு, இப்போது தன்னுடைய எல்லையை மீறி—ஏனென்றால், இதே அவையில்தான் ஒரு சட்டத்தை இயற்றி, ஏற்கெனவே, அப்படி யாராவது அனுமதியில்லாமல் கட்டி விட்டிருந்தாலும்கூட, அந்தக் கட்டடத்தை வரன்முறைப்படுத்துகிறோம் என்று ஏற்கெனவே நிதியெல்லாம் வசூல் செய்தாகிவிட்டது; பணத்தை, கட்டணத்தை வசூலித்து ஆகிவிட்டது. இப்போது நீதிமன்றம், 'இல்லை, இல்லை, அதை இடி' என்று சொல்கிறது. 10 ஆண்டுகளாகப் புறம்போக்கு நிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கே வீட்டை வழங்க வேண்டுமென்று சொல்கிறது இந்த அரசு. இதுதான் அதன் கொள்கை; policy. இந்த ஒரு policy இருக்கிறபோது, அவர்கள் பணத்தைப்போட்டு, அவர்கள் இடத்தில் அவர்கள் கட்டடத்தைக் கட்டி, அனுமதியில்லாமல் கட்டி விட்டிருந்தாலும்கூட அரசாங்கம் அதை regularise செய்கிறோம் என்று சொல்லி அறிவித்தபிறகு, அதை இடி என்று சொன்னால் எப்படி? இந்த அரசாங்கத்தை நம்பி பணத்தைக் கட்டியவர்கள், அரசாங்கத்தினுடைய கொள்கையை நம்பி, அதற்குப் பிறகு அதை வரன்முறை செய்துவிடுவோம் என்று சொன்னதால், கட்டடத்தைக் கட்டியவர்கள் எல்லாம், இதை எப்பொழுது இடிப்பார்கள் என்று இப்போது வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இதற்கு ஒரு பொது விவாதம் நிச்சயமாகத் தேவைப்படுகிறது. நாம் இயற்றுகிற சட்டத்திற்குள்ளேதான் நீதிமன்றங்கள் அந்தச் சட்டத்திற்கேற்ப தங்களுடைய தீர்ப்புகளை வழங்க வேண்டுமேயொழிய, அவர்கள் தங்களுடைய எல்லையை மீறி, பிறகு இப்படி நாம் இயற்றிவிட்ட சட்டத்திற்கு அவ்வாறு சொல்வது பொருத்தமானது அல்ல. ஏனென்றால், நம் fundamental right-ல் போகாது இதெல்லாம். முன்னால் காற்று வருகிறமாதிரி இடம் இருக்கிறதா? இல்லாவிட்டால், தண்ணீர் அங்கு போகிறதா? சுகாதார வசதி இருக்கிறதா? இதுமாதிரி எல்லாம் சேர்த்து அவர்கள் கட்டடம் sound-ஆக இருந்தால், தாராளமாக அதை வரன்முறைப்படுத்தலாம் என்று சொல்லலாம். புறம்போக்கில் இருக்கக்கூடிய இடத்திற்கே நாம் அனுமதியை வழங்குகிறோம்; அவர்களுக்குப் பட்டா கொடுக்கிறோம் என்று சொல்கிறபோது அவர்கள் கோடி கோடியாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு அதைக் கட்டி, பிறகு அதிலே வாழ்ந்து கொண்டிருக்கிறபோது அதை இடிப்போம் என்று சொல்வது, பொருத்தமானது அல்ல. ஆகவே, இதற்கு ஒரு Review Petition போட்டாவது—இந்த அரசை நம்பித்தான் இன்று மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்—ஆகவே அதற்கேற்ப இந்த அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–10*

இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கும் அதேதான். "அதை நாங்கள் எல்லாம் எங்களுடைய நீதி விசாரணைக்கு உட்படுத்துவோம்; ஒன்பதாவது அட்டவணையின்கீழ் உள்ளதையும் நாம் மறு ஆய்வுக்கு உட்படுத்துவோம்" என்று உச்ச நீதிமன்றம் சொல்வது என்பது, ஏற்புடையது அல்ல. காரணம், ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்துவிட்ட பிறகு, அதற்கான சட்டத்தை இயற்றிய பிறகு, இதை நம்பி மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறவேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கிறபோது, இந்தச் சட்டத்திற்கு ஏற்ப நீதிபதிகள் நீதித் தீர்ப்புகளை வழங்குவதற்கான நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையினை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கே மத்தியிலே கூட்டாட்சித் தத்துவம் எப்படி நிலை பெறுகிறதோ அதேபோல மாநிலங்களிலும் இப்பொழுது கூட்டாட்சி. இப்பொழுது மகாராஷ்டிராவை எடுத்துக் கொண்டாலும் சரி, கேரளாவை எடுத்துக் கொண்டாலும் சரி அல்லது மற்ற மாநிலங்களில் எல்லாம்கூட, இப்பொழுது கூட்டாட்சித் தத்துவம் வந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தத்துவத்தை *(மணி அடிக்கப்பெற்றது)* முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். மாநிலத்திலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகச் செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, விலைவாசி உயர்வு. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று கொடுத்து, ஏழைகளின் பசியைப் போக்கியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அரிசியைக் கொடுத்துவிட்டு—நிறைய பண்ணிவிட்டோம்; ஆனால், அதற்கான—எப்போதுமே side-ல் தேவைப்படும் குழம்புக்குக் காய் வாங்க வேண்டும்; பிறகு பருப்பு வாங்க வேண்டும்; அதற்கான விலை எல்லாம் ஏறிக்கொண்டு போகிறது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், எப்போதுமே மற்ற மாநிலங்களில் இல்லாத ஒன்றை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டி, முன்னோடியாகத் திகழ்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கென்றே ஒரு துறையை தயவுசெய்து ஏற்படுத்தி, ஏழை மக்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, அதேபோல கடலைப் பருப்பு, புளி, மிளகாய் எல்லாம் விலை கிடு கிடுவென்று நிறைய ஏறிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது.



மட்டன் ஒரு கிலோ 150 ரூபாய்; நாங்கள் எல்லாம் அதனாலேயே சைவமாக மாறிவிட்டோம்! *(சிரிப்பு)* ஆகவே, *(குறுக்கீடு)* மட்டன் எங்கள் ஊரில் 150 ரூபாய்தான்; 200 ரூபாய் என்றும், 250 ரூபாய் என்றும் சொல்கிறார்கள். நம் முதல்வரும், நானும் சைவமாக ஆகிவிட்ட காரணத்தினால் இப்போது மற்றவர்கள் அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் குறையைத் தீர்ப்பதற்கும், கால்நடைத் துறையின்மூலமாக நிறைய ஆடுகளை வளர்ப்பதற்கும், அமைச்சரை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இதற்கெல்லாம் ஒரு வழி பண்ணுங்கள். எப்படி டாஸ்மாக் கடை வைத்து, நாம் எல்லாம் கொஞ்சம் கட்டுக்கோப்பான விலையில் கொடுக்கிறோமோ, அதேமாதிரி இதற்குக்கூட, நீங்கள் மட்டன் சிக்கன் போன்றவற்றையும்கூட, இறைச்சிக் கடைகள் அரசு சார்பில் வைத்துகூட ஒரு கட்டுக்கோப்பான விலையில் அதை மக்களுக்குக் கொடுப்பதற்கான ஏறபாடுகளை நிச்சயமாகச் செய்ய வேண்டும்.

அதேபோல, கட்டுமானப் பணிகளுக்குண்டான சிமெண்ட், மணல் போன்ற விலைகள் எல்லாம் நிறைய ஏறிக்கொண்டு போகின்றன. அதற்கு விலைக் கட்டுப்பாட்டுத் துறையை ஏற்படுத்தி, நிச்சயமாக இவற்றையெல்லாம் கட்டுக்கோப்பிற்குள் நீங்கள் வைத்தால்தான், நிச்சயமாக ஏழைகளுடைய சிரிப்பில் இறைவனைக் கண்டுகொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள், நம் எல்லோருடைய சிரிப்பையும் நிரந்தரமாகக் காணக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கக்கூடிய சாத்தியம் இருக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல O.A.P. பழைய காலத்தில் நிறைய cancel பண்ணி விட்டார்கள். அந்த O.A.P. இன்னும் restore ஆகவேயில்லை பலபேருக்கு. ஆண் குழந்தைகள் இருந்தாலும்கூட அந்த ஆண் குழந்தைகள், பெற்றோர்களைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்று சொன்னால், பராமரிக்கத் தவறி விட்டார்கள் என்று சொன்னால், அந்த முதியோர்களுக்கும் முதியோர் பென்ஷன் வழங்குவதாகத்தான் அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு சற்குண பாண்டியன் அவர்கள் காலத்திலேயே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு G.O. போட்டார்கள். பிறகு அதை எடுத்துவிட்டார்கள். பிறகு இப்பொழுது, மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. ஏற்கெனவே cancel செய்யப்பட்டவர்களுக்கு ஆண் குழந்தை இருந்தாலும்கூட, அவர்கள் பராமரிப்பு இல்லாமல், பாவம் நடுத் தெருவில் இருந்தால் அவர்களையும் கவனிப்பதற்கு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. சி. ஞானசேகரன்] [2007 ஜனவரி 23

நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள். நீங்கள் உடனடியாக ரேஷன் கார்டு வழங்குவதாகச் சொன்னீர்கள். நிறைய பேர் மனு கொடுத்துவிட்டார்கள். உடனடியாக நீங்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, இந்த ரேஷன் கார்டை உடனடியாக—lamination-க்கு Madras வந்திருக்கிறது; சென்னைக்கு வந்திருக்கிறது; சென்னைக்கு வந்திருக்கிறது என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்—அதை lamination உடனடியாகச் செய்து, யாரெல்லாம் புதிதாக மனு கொடுத்தார்களோ, அவர்களுக்கு உடனடியாக ரேஷன் கார்டை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பட்டா யார் எல்லாம் 10 ஆண்டுகளாகப் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறார்களோ அவர்களுக்குப் பட்டா கொடுப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அப்பொழுது ஏற்கெனவே சென்ற 1996–2001 ஆட்சியிலே அற்புதமான ஓர் அரசாணையை வழங்கினார்கள். பிறகு நிறுத்தி விட்டார்கள். அப்பொழுது கொடுத்துவிட்டதைக்கூட இன்னும் செயல்படுத்தவில்லை.

*(முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். Time ஆகிவிட்டது. நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** செயல்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒரு அற்புதமான அந்தத் திட்டத்தைச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், இந்த Revenue Department-ல் உண்மையிலேயே நல்ல ஆற்றல்மிக்க ஒரு செயலாளர் இப்போது இருக்கிறார். அவர்களையெல்லாம் கேட்டுக்கொள்வது என்னவென்றால்—Revenue Department என்ன செய்கிறது என்றால், "நாங்கள் sub-division பண்ணுகிறோம்; sub-division பண்ணுகிறோம்" என்று சொல்லிக்கொண்டே காலத்தைக் கடத்திவிடுகிறார்கள். "ஏனென்றால் ஓரே சர்வே நம்பரிலே 4 ஏக்கர், 3 ஏக்கர் புறம்போக்கு நிலத்திலே நிறைய பேர் நிலம் ஒன்றாக இருக்கும்; அந்த சர்வே நம்பரை நாங்கள் sub-division செய்கிறோம்" என்பதிலே காலம் கடத்திக்கொண்டிருக்கிற காரணத்தினாலே— நீங்கள் உடனடியாக அதை sub-division செய்து அவர்களுக்கு அளந்து உடனடியாகப் பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 23] [திரு. சி. ஞானசேகரன்]

மணலைப் பொறுத்தளவிலே, அரசாங்கம் இப்போது மணலை விற்பனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், அதை லாரியிலே ஏற்றுகிறபோது இரண்டு யூனிட்தான் ஏற்ற வேண்டும். அதிலே ஐந்து யூனிட் எல்லாம் ஏற்றிக்கொண்டு, சில பேர் அதிலே சில முறைகேடுகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாகக் கண்டுபிடித்து, அப்படிப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக ஒரு மணல் வாரியத்தையேகூட உருவாக்கி, அதைச் செம்மைப்படுத்தினால் நிச்சயமாக அரசுக்கு இன்னும் வருவாய் வரும் என்பதை நான் அரசாங்கத்திற்கு ஓர் ஆலோசனையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டம்-ஒழுங்கைப் பொறுத்தளவில் நல்ல நிலையில் இருந்தாலும்கூட, இப்போது காவலர்களுடைய எண்ணிக்கை போதவில்லை. எங்களுடைய சத்துவாச்சாரியில், Type-2 என்று design-ஐ மாற்றி, 50 பேர் அந்த இடத்திலே காவலர்கள் இருக்க வேண்டும், சத்துவாச்சாரி காவல் நிலையத்தில். ஆனால், அங்கு இப்போது 11 பேர்தான் இருக்கிறார்கள். சென்ற ஒரு கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான ஆணை பிறப்பித்தார்கள். அதைப்போல இப்போது ஆந்திரா; எங்களுக்கெல்லாம் ஆந்திரா, கர்நாடகா போன்றவை border. வேலூர் மாவட்டத்திற்கு. அங்கே பார்த்தால் எப்போதுமே ரோந்து செல்ல வேண்டியிருக்கிறது. நக்சலைட் ஊடுருவல் வந்துவிடுமோ என்கிற அச்சத்தில் இன்று எங்களுடைய பகுதியிலுள்ள காவல் துறை முடுக்கிவிடப்பட்டு அதிரடிப்படை ரோந்து சென்றுகொண்டிருக்கிறது. ஆனால், அங்கு A.R. Police-Armed Reserve Police—போதவில்லை. ஆகவே, Armed Reserve Police-னுடைய ஒரு படையை நீங்கள் வேலூரிலே இன்னும் ஒன்று கூடுதலாக வைத்து அந்த இடத்தில் ரோந்து செல்வதற்கான பணியை உடனடியாகச் செய்ய வேண்டும். அதேபோல போதிய காவலர்களைக் கொடுக்க வேண்டும்.

நேற்றையதினம் பார்த்தாலும்கூட, குடியாத்தம் பக்கத்திலே கொண்டசமுத்திரம் கிராமத்தில் திடீரென்று உள்ளே கொள்ளையர்கள் புகுந்து, பட்டப் பகலிலே ஒரு பெண்ணைக் கொலை செய்துவிட்டு நகையைப் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதேபோல, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், நாமக்கல் மாவட்டத்திலே சேந்தமங்கலத்தில் பாரிவேல் என்பவர், நடு இரவில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது அவரைக் கூலிப் படையினர் கொன்றிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் ஒடுக்க, குண்டர் சட்டத்தை சில ரவுடிகள்மீது உடனடியாகப் போட்டு ... டுப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்க... டு

227482
சென்னை-600 009

சம்பவங்கள்கூட தமிழகத்தில் இனித் தலைதூக்கக் கூடாது; தலைகாட்டக் கூடாது என்கிற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Fast Track Court–லே 40 நாட்களிலே, 30 நாட்களிலே தீர்ப்பை வழங்கிவிட்டோம் என்று நீதித் துறை, சில நேரங்களிலே உடனடியாகத் தீர்ப்பு வழங்குகிறது; பாராட்டுகிறோம். ஆனால், வனத் துறையின்மூலம் நடத்தப்படுகிற சில வழக்குகள், 1991–லே பதிவு செய்யப்பட்டு charge sheet போடப்பட்ட வழக்குகள், இன்னும் விசாரணையே தொடங்கப்படாமல், திருப்பத்தூரில் இருக்கக்கூடிய Special Court–லே பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்றன. இன்றைய 'தினமணி' பேப்பரிலே எங்களுடைய மாவட்டத்திலே வந்த செய்தியைப் பார்த்தேன். அங்கே ஒரு அ.தி.மு.க. கவுன்சிலர்மீது, 1991 ஆம் ஆண்டு—அவர் சந்தனக் கட்டையிலே பிரபலமானவர்—அவர் இப்போது வேலூர் நகரமன்றத்தில் ஒரு நகரமன்ற உறுப்பினராகக்கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முதலிலே எங்கள் கட்சியிலேயிருந்து, பிறகு அ.தி.மு.க.விற்குச் சென்றுவிட்டார். இதிலே பார்த்தீர்களானால், 1991–96–ல் நடந்த நிகழ்வுகளுக்கு இப்போது முன்ஜாமீன் போட்டு dismiss ஆகியிருக்கிறது. இன்னும் முன்ஜாமீன் stage–லேயே இருக்கிறது. ஆகவே, இந்த வனத் துறை என்ற ஒன்று செயல்படுகிறதா என்பதே எங்களுக்கு ஐயமாக இருக்கிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் உடனடியாக வனத் துறையை முடுக்கிவிட்டு—ஏனென்றால் சந்தனக் காடே அழிந்துவிட்டது; இனிக் காட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால்—பழைய வழக்குகளை நீங்கள் உடனடியாக, துரிதமாக தூசி தட்டி எடுத்து, யார் யார் எல்லாம் தப்பு செய்தார்களோ, அவர்களுக்கெல்லாம் தண்டனை கொடுக்கவேண்டும்; உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; வழக்குகளை முடிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை என்று வருகிறபோது, எங்களுடைய மாவட்டத்திலே— மாண்புமிகு முதல்வர் அவர்கள், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இப்போது ஒகேனக்கல்லிலிருந்து வரக்கூடிய குடிநீர் திட்டத்தை 1008 கோடி ரூபாயிலே நிறைவேற்றுவதற்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள்; எங்களுடைய வேலூர் மாவட்டத்திலே— பாலாற்றிலே தண்ணீர் இல்லாத காரணத்தினாலே, 1500 கோடி ரூபாயில் வேலூர் மாவட்டத்திற்கும் நீங்கள் ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தால்தான் எங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு. அந்த நிரந்தரத் தீர்வை, நீங்கள் இப்பொழுதே நிறைவேற்றிவிட்டீர்கள் என்று சொன்னால், ஒரு 500 கோடி ரூபாய் அதிலே மீதமாகும் என்று சொல்கிறார்கள்.



ஏனென்றால், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு அந்த work–ஐ எடுக்கிறபோது, வேலூர் மாவட்டத்திற்கும் சேர்த்து எடுத்தீர்கள் என்று சொன்னால், ஒரு 500 கோடி ரூபாயை நீங்கள் நிச்சயமாக மீதப்படுத்தலாம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இப்பொழுதே அதற்கான ஒரு துவக்கத்தைக் கொடுத்து, உடனடியாக நிதியை வழங்கி வேலூர் மாவட்டத்திற்கும் சேர்த்து, அந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை யிலிருந்து வரக்கூடிய கழிவு நீரை—ஏழு, எட்டு யூனிட்டுகளில் R.O. போட்டிருக்கிறார்கள்; மற்ற யூனிட்டுகளில் இன்னும் Reverse Osmosis போடவில்லை; அவர்கள் என்னதான் போட்டாலும், நிரந்தரத் தீர்வாக 400 கோடி ரூபாயிலே அந்தக் கழிவு நீரை--நீங்கள் அதாவது pipe line மூலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 21 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

முற்பகல் 11–20

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியை வழங்கி, ஒரு 400 கோடி ரூபாயிலே தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து விடக்கூடிய கழிவுநீரை pipe line மூலமாக கடற்பகுதியிலே கொண்டுவந்து விடுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, திருப்பத்தூர், ஈரோடு போன்ற பகுதிகளிலிருந்து வரக்கூடிய சாயப்பட்டறை நீரைக்கூட pipe line மூலம், 800 கோடி ரூபாய் செலவிலே, நாகைப் பகுதியிலுள்ள கடலிலே கொண்டுவந்து விட்டால்தான், அந்த மாவட்டங்களுக்கும் நிரந்தரத் தீர்வு. ஆகவே, ஒரு மாசற்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய நிலத்தடி நீரைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கிற மக்கள் குடிநீரைப் பருக வேண்டுமென்று சொன்னால், இதற்கான நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுசெய்து வழங்கி, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்று, முதலாவது ஆளுநர் உரையிலும்,

[திரு. அ. தமிழரசு] [2007 ஜனவரி 23

நிதிநிலை அறிக்கையிலும் தமிழகத்தின் எல்லாத் தரப்பு மக்களின் நாடிகளையும் பிடித்துப் பார்த்து, அவர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் உணர்ந்து, மக்களின் பிணியைப் போக்கும் அருமருந்தாக, மகத்தான அறிவிப்புகளை, மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து நிறைவேற்றி வருகின்ற, மக்கள் பசிப்பிணி போக்கும் மாபெரும் மருத்துவராக, மகத்தான நிர்வாகியாக சிறந்து விளங்குகிறார் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயல்பாட்டைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறோம்; வரவேற்கிறோம்.

இந்த நடப்பாண்டிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் அளித்த உரை என்பது, முதல்வர் அவர்களின் நடப்பாண்டின் திட்டத்தை, தமிழக அரசின் செயல்பாட்டை விளக்குகிற முதல் அறிக்கையாக அமைந்திருக்கிறது. இதில், அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை வலியுறுத்துதல், வருமுன் காப்போம் திட்டம், தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் உள்ள காலியிடங்கள் நிரப்பப்படும் வகையில் இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல், இலங்கைத் தமிழர்களின் அவல நிலையைப் போக்கிட மத்திய அரசை வலியுறுத்துதல் போன்ற பல அறிவிப்புகள் செய்திருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வரவேற்கிறோம்.

மாவட்டந்தோறும் உள்ள அரசுப் பயிற்சி நிறுவனங்களுக்கு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம், உரிய கல்வித் தகுதியின் அடிப்படையில் முறையாக நியமனம் செய்யப்பட்டு, பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்குக் கடந்த ஐந்து மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை; நிரந்தரம் செய்யப்படவில்லை. ஏன் இந்த அவல நிலை? இதே ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்குத் தற்போது புதிய ஆசிரியர்களும் தேர்வு செய்து நியமிக்கப்பட்டுள்ளனர். தொகுப்பூதியத்தில் இருந்தவர்களைக் காலமுறை ஊதியத்திற்கு மாற்றிய நிலையில், தற்காலிகப் பணிகளை நிரந்தரமாக்கிய இந்த நல்ல சூழ்நிலையில், கல்வித் துறையில் உள்ள அவல நிலை ஏன் என்று தெரியவில்லை. இந்த நிலை அவசியம் போக்கப்பட வேண்டும்; உரிய நடவடிக்கை எடுத்து, ஆவன செய்ய வேண்டுமென அரசை வலியுறுத்தி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

தொகுப்பூதியத்தைக் காலமுறை ஊதியத்திற்கு மாற்றியமைத்த இக்காலக்கட்டத்தில், கணினி உலகமாக மாறி வருகிற இந்த வேளையில், அரசுக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் போன்றவற்றில் குறைந்த சம்பளத்தில் பணியாற்றிவரும் கணினி பயிற்சிப் பாடப் பிரிவு ஆசிரியர்களை நிரந்தரப்படுத்திட உதவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். இவர்கள் அனைவரும் M.C.A., M.Sc., B.E. Computer



2007 ஜனவரி 23] [திரு. அ. தமிழரசு]

Science படித்த, உரிய கல்வித் தகுதி உடைய ஆசிரியர்கள், பெரும்பாலானவர்கள் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது.

மனித வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் கல்வி அடிப்படையானது. சுதந்திரம் பெற்று, உணவு, உடை, குடியிருப்பு, போக்குவரத்து, நாகரிகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் வளர்ந்திருந்தாலும், நம்முடைய மக்கட்தொகை, வளர்ச்சிக்கு ஏற்ப கல்விப் பணிகள் போதாது என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் திடமான கருத்தாகும்.

அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை விகிதம், தனியார் பள்ளிகளைக் காட்டிலும் குறைந்து வருகிறது. கூலி விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளை அரசுப் பள்ளிகளைக் காட்டிலும் தனியார் மெட்ரிக் பள்ளிகளில் சேர்த்தால்தான், தரமான கல்வி கிடைக்கும் என்ற கருத்து இருக்கிறது. எனவே, அரசுப் பள்ளிகளின்மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்துவதைத் தடுக்க, அரசு நடவடிக்கை எடுக்கும் வகையில், தனியார் பள்ளிகளில் வசூலிக்கப்படும் கூடுதல் கட்டணத்தை வரைமுறைப்படுத்த வேண்டும்.

முற்பகல் 11-25

L.K.G., U.K.G. முதல் கல்லூரிப் பாடங்கள்வரை கட்டணத்தை அரசே நிர்ணயித்து அறிவிக்கவேண்டும். கல்விக்கு நன்கொடை வசூலிப்பது தடுத்து நிறுத்தப்படவேண்டும். கட்டணமாகச் செலுத்தப்படும் தொகைக்கு உரிய இரசீது வழங்கப்படவேண்டும். ஆரம்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவம், அதிக நிதி ஒதுக்கீடு, அதிக ஆசிரியர் நியமனம், நவீன கட்டட அமைப்பு என்பதைக் கட்டாயப்படுத்தப்பட வேண்டும். மாணவர்களிடத்திலே, விளையாட்டு, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, இலக்கியப் போட்டி போன்றவை கட்டாயமாக்கப்பட வேண்டும்.

தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் அவரவர் விருப்பத்திற்கேற்ப கட்டணம் வசூலித்துக்கொள்ளலாம்; பாடத திட்டங்களை வகுத்துக்கொள்ளலாம்; தேர்வு முறையும், தேர்ச்சி நிலையும் அவரவர்களே நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற நிலை அறவே தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பயனாளிகளைச் சேர்ப்பதிலே, கடந்த அ.தி.மு.க. அரசு, வறுமைக்கோட்டிற்குக்

[திரு. அ. தமிழரசு] [2007 ஜனவரி 23

கீழுள்ளவர்கள் பட்டியலில், விருப்பு வெறுப்பு பார்த்து சேர்த்ததனால், அரசு சலுகைகள்— உதாரணத்திற்குத் தொகுப்பு வீடுகள் உரியவர்களுக்குப் போய்ச் சேராமல்—இதைப்போன்று 35 கிலோ அரிசி வழங்குவது போன்ற அந்தச் சலுகைகள் எல்லாம் உரிய, தகுதியுள்ள பயனாளிகளுக்குப் போய்ச் சேராமல், வசதி படைத்தவர்கள் இப்போது அதில் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் பல்வேறு இலவசத் திட்டங்களை இப்போது அறிவித்திருக்கிறார்கள்; இவை உரியவர்களுக்குப் போய்ச் சேர, அரசுக்கு நல்ல பெயர் கிடைக்க, சட்டமன்ற உறுப்பினர் உட்பட மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழு அமைத்து, அதன்வாயிலாக அந்தப் பயனாளிகள் பட்டியல்களைத் தேர்வு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கியிலே விவசாயிகள் வாங்கிய கடன்களை, நமது அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. இப்போது அதனால் கிராமத்திலே ஏழை எளிய விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். தாய்மார்கள் இன்றைக்கு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். ஆனால், அதிலே இன்னும் சிறு வியாபாரிகள், குறு விவசாயிகள் வாங்கிய ரூ. 5,000/– அளவிலே கொண்ட பல்வேறு கடன்கள் தள்ளுபடி செய்யப்படாமல், அதற்கு நோட்டீஸ் விடப்பட்டு, இப்போது அதை வசூல் செய்கின்ற ஒரு நிலை கூட்டுறவு வங்கியிலே இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கடன்களையும் பார்த்து, அதையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று இங்கு பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக, சேலத்திலே மாவட்ட அளவிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆர்ப்பாட்டமும் செய்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முத்தான திட்டங்களில் ஒன்றான இலவச gas அடுப்பு வழங்கும் திட்டம் வரவேற்கக்கூடிய திட்டமாக, இப்போது அரசு அதற்கான தொடக்க விழா செய்திருக்கிறது. அதேவேளையிலே, கடந்தகாலங்களிலே கூலி ஏழைத் தொழிலாளர்கள் gas அடுப்புக்காக வங்கியிலே 3,500/– ரூபாய்வரை கடன்களைப் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கடனை இன்றைக்குவரை கட்ட முடியாமல், அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலவச gas அடுப்பு வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே, அந்த ஏழை கூலித் தொழிலாளிகள் வங்கியிலே வாங்கியிருக்கின்ற அந்தக் கடன்களையும் இரத்து செய்ய வேண்டுமென்று இங்கு பணிவோடு கேட்டுக் கொள்கிறோம்.



2007 ஜனவரி 23] [திரு. அ. தமிழரசு]

அதைப்போல, இப்போது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு அறிவிப்பாக 10 ஆண்டுகள் புறம்போககு நிலத்திலே வாழ்ந்து வருபவர்களுக்கு இலவச பட்டா வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததை, பா.ம.க. சார்பிலே வரவேற்கிறோம். அதே வேளையிலே, கடந்த அ.தி.மு.க. அரசு மாநகர எல்லையிலேயிருந்து 16 கிலோ மீட்டர் தூரம்வரை பட்டா வழங்க இயலாத அளவிற்கு ஒரு அரசு ஆணையை இன்றுவரை நடைமுறையிலே வைத்திருக்கிறார்கள். இப்போது அந்த ஓமலூர் தொகுதியை எடுத்துக்கொண்டால், 16 கிலோ மீட்டர் தூரம்வரை பட்டா வழங்க இயலாது என்று வட்டாட்சியர் அலுவலகம் வழியாகச் சொல்கிறார்கள். எனவே, அந்த ஆணையை இரத்து செய்து, எல்லா இடங்களிலும், தொகுதியிலே அனைத்துப் பகுதிகளிலும் பட்டா கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலே வாழும் தமிழர்கள் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாமல், குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை நித்தம் நித்தம் கொன்று குவிக்கும் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைமூலம் அமைதியான தீர்வு காணவேண்டுமென இந்திய அரசை, ஆளுநர் உரைமூலம் வலியுறுத்தியுள்ளீர்கள். அதோடு நின்றுவிடாமல், மாநில அரசும், மத்திய அரசும் கருத்து ஒத்திருக்கின்ற இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் எங்களுடைய பா.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா, சோனியா காந்தி அவர்களையும் மற்றும் ஒருமித்தக் கருத்துடைய தலைவர்கள் அனைவரையும் கொண்ட ஒரு கருத்தாய்வுக் கூட்டம் கூட்டி, அதன்வாயிலாகப் போர்க்கால அடிப்படையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உடனடியாக ஒரு நல்ல தீர்வு காணவேண்டும். அப்பாவி தமிழ் மக்கள், குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை, அங்கே கொன்று குவிக்கப்படுகின்ற ஒரு நிலைமையை நாம் பார்க்கும்போது, இன்றைக்கு மிக வேதனையான ஒரு நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

எனது ஓமலூர் தொகுதி, ஏற்காடு மலைப் பகுதியைச் சுற்றி, அடிவாரப் பகுதியாக அமைந்துள்ளது. மழைக் காலங்களிலே மிக அதிகமான தண்ணீர், இரண்டு ஆறுகளின் வழியாக, கீழ் சரபங்கா ஆறு, மேல் சரபங்கா ஆறு என்ற ஆறுகளின் வழியாக வந்து, விவசாயத்திற்குப்

[திரு. அ. தமிழரசு] [2007 ஜனவரி 23

பயன்படாமல், ஏரிகளுக்கும் பயன்படாமல், மீண்டும் காவிரியிலே, பூலாம்பட்டியிலே அந்தத் தண்ணீர் கலந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல நூறு ஏரிகள் நிறைகின்றவகையிலே, இரண்டு அணைகள் அங்கே கட்டப்படுமானால், அந்த அணைகளிலிருந்து அந்த ஏரிகளுக்குத் தண்ணீரைவிட்டு, அதனால் பல நூறு விவசாயிகள் அங்குப் பயன்படுவார்கள். அங்கே போதுமான அளவிற்குத் தண்ணீர் இருக்கிறது. எனவே, அந்த நீராதாரத்தைக் கணக்கிலே எடுத்து, அங்கு இரண்டு அணைகளை, சரபங்கா ஆற்றின் குறுக்கே, வனப் பகுதியிலே, டேனிஷ்பேட்டை பகுதியிலும், சக்கரைசட்டிப்பட்டி ஊராட்சிப் பகுதியிலும் கட்ட வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஓமலூர், தாலுகா தலைமையிடமாக இருக்கிறது. ஆனால், அங்கே ஆர்.டி.ஓ. அலுவலகம் நீண்ட நாட்களாக இல்லாமல் இருக்கிறது. எனவே, அங்கே ஒரு யூனிட் அலுவலகம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனி நீதிமன்ற வளாகமும் இன்றைக்கு இல்லாமல் இருக்கிறது. அதற்காக 75 சென்ட் நிலமும், ஒன்றரை கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டு, இன்னும் அரசு அதற்கு உத்தரவிடாமல், அந்தப் பணியானது தொடங்கப்படாத நிலையிலே இருக்கிறது. அதனைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மேட்டூரிலே நான்கு நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதிலே ஜே.சி.எம்.–2 என்ற நீதிமன்றம், ஓமலூரில் இயங்குவதற்கு உயர் நீதிமன்றம் இன்றைக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. எனவே, அந்த உத்தரவின் அடிப்படையிலே அரசாணை பிறப்பித்து, அந்த ஜே.சி.எம்.–2 நீதிமன்றம், ஓமலூரிலே இயங்குவதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூர், தாலுகா தலைமையிடமாக இருந்தும், பெண்களுக்கெனத் தனியாக அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று இல்லாமல் இருக்கிறது. இப்போது ஓமலூரிலே பல்வேறு பிரச்சினைகள் பெண்கள் பள்ளியிலே எழுந்திருக்கின்றன. எனவே, ஓமலூர் பேரூராட்சியிலே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி—நபார்டு திட்டத்தின்மூலம் கட்டடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டடமானது காலியாக இருக்கிறது. அந்தப் பள்ளிக் கட்டடத்திலே பெண்களுக்கென்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை. இந்தக் கல்வியாண்டிலே ஒதுக்கிக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே ஆயிரம் பெண்கள் அந்த மேல்நிலைப் பள்ளியிலே கல்வி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 23] [திரு. அ. தமிழரசு]

மேட்டூர் அணை நிரம்பி, வெள்ளக் காலங்களில் வழிந்தோடும் தண்ணீர், கடலில் கலப்பதைத் தடுத்து நிறுத்துகின்றவகையிலே, பிஞ்சாண்டியூர் பகுதியிலே புதிய வாய்க்கால் ஒன்றை அமைப்பதன்மூலம், மேட்டூர், தாரமங்கலம், ஓமலூர், சேலம், வீரபாண்டி, எடப்பாடி ஆகிய இந்தத் தொகுதிகளில் இருக்கின்ற பல நூறு ஏக்கர் நிலங்கள், பல ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பயனடைகின்றவகையிலே, அந்தக் காவிரி நீரைக் கொண்டுவருகின்ற ஒரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டும்.

இப்போது சேலம் மாவட்டத்திலே, காவிரி தண்ணீர் விவசாயிகளுக்குப் பயனடைகின்ற நிலை இல்லாமல் இருந்துவருகிறது. தமிழ்நாட்டிலே, பல்வேறு மாவட்டங்களில் காவிரி நீர் இன்றைக்குப் பயன்படுகிறது. எனவே, இந்த ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலே செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூரில் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும்வகையில், கயிறு தொழிற்சாலை அமைக்கப்படுமென கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள அறிவித்தார்கள். அந்தப் பணியானது இன்னும் தொடங்கப்படாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வனத் துறையில் பல்வேறு இடங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டு, பல ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். ஆனால், வனத் துறை அதிகாரிகள் அவர்களையெல்லாம் உடனடியாக காலி செய்ய வேண்டுமென்று இப்போது நோட்டீஸ் அனுப்பிக் கொண்டும், தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கும் நிலைமை, எனது ஓமலூர் தொகுதியிலே, லோக்பூர் பகுதியிலே, டேனிஷ்பேட்டை பஞ்சாயத்து போன்ற பகுதிகளிலே இருந்துகொண்டு இருக்கிறது. எனவே, 10 ஆண்டுகளுக்கு மேலாக வனத் துறையிலே வசித்து வருகின்றவர்களின் கட்டடங்களை இடிக்காமலும், அவர்களுக்குப் பட்டா கொடுக்கின்ற ஒரு நிலையையும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, திருவாரூர், நாகை, தஞ்சை பகுதிகளில், நெல் கொள்முதல் நிலையங்களில் எடை அளவு சரிபார்த்து, விவசாயிகளுக்குப் பணம் கிடைக்க 15 நாட்கள் ஆகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களைப் போக்கி உடனடியாகப் பணம் கிடைக்க அரசு ஏற்பாடு

[திரு. அ. தமிழரசு] [2007 ஜனவரி 23

செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள Mahyco 6918 பி.டி. விதை இன்னும் வியாபாரிகளிடத்திலே விற்பனையாகி வருகிறது. எனது தொகுதியிலே டேனிஷ்பேட்டையிலே...

முற்பகல் 11–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகள் இருந்தால், எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** முடிந்துவிட்டது. அந்த விவசாயிகள் பெரிதும் பாதித்து இருக்கிறார்கள். இது ஆட்சித் தலைவரிடத்திலே புகாராகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த விஷயத்திலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தி, விவசாயிகள் நலன்காக்க, இந்த பி.டி. விதை விற்பனை செய்வதிலேயும், விவசாயிகள் அதைப் பயிரிடுவதிலேயும் என்ன திட்டங்களை, ஆலோசனைகளைக் கொடுக்கலாம் என்று அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு அவர்கள், விவசாயிகள் கொள்முதல் நிலையங்களுக்குச் சென்று நெல்லைக் கொடுத்தபிறகு, 15 தினங்களுக்கு ஒருமுறைதான் பணம் கிடைக்கிறது என்கிற ஒரு தவறான செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தந்தக் கொள்முதல் நிலையங்களுக்குத் தகுந்தபடி ரூபாய் 2 இலட்சம், ரூபாய் 3 இலடசம் என்று முதல்நாளே பணத்தைக் கொடுத்துவிடுகிறோம். அன்று மாலையே மொத்தப் பணமும் கொடுக்கப்பட்டு, பட்டியலில் செலுத்தப்பட்டு, எவ்வளவு நெல் வாங்குகிறோம், எவ்வளவு பணம் இருப்பில் இருக்கிறது என்று அன்றன்றே கணக்கு வருகிறது. எனவே, அப்படி ஒரு செய்தி அல்ல. தினமும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய தலைவர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 ஜனவரி 23] [திரு. வே. மாரிமுத்து]

கடந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு நடைமுறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்பதோடு, ஆளுநர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய மீனவர்களுக்குத் தனி நல வாரியம், வீட்டுப் பணியாளர்களுக்குத் தனி நல வாரியம், சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டை மைய அரசு அமல்படுத்த வேண்டும் என்கிற இப்படிப்பட்ட நிலைப்பாடுகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோல, இன்றைக்கு அரசு நிறைவேற்றி வரக்கூடிய பல்வேறு திட்டங்களில் சில திட்டங்களை இன்னும் வேகமாக முனைப்போடு செயல்படுத்த வேண்டுமென நாங்கள் கருதுகிறோம். ஆளுநர் அறிக்கையிலே, வரக்கூடிய ஆண்டுகளில் வேளாண் துறையில் 4 சதவிகித வளர்ச்சியை எட்டுவதற்குண்டான முயற்சி எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல, ஆளுநர் அறிக்கையில், தரிசு நில விநியோகம் என்பது இரண்டு கட்டங்களில் ஏறத்தாழ 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. பாராட்டுக்குரிய விஷயம். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

அதேபோல, மாநிலத் திட்டக் குழு தயாரித்திருக்கக்கூடிய 11–வது திட்ட அணுகுமுறை அறிக்கை சமீபத்திலே வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தமிழ்நாட்டில் வேளாண் துறை, ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக இருந்து வருவதால், இத்துறையில் ஏற்படும் பாதிப்புகள் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு மிகுந்த இன்னலை ஏற்படுத்துகிறது. சாகுபடி நிலம், பயிரிடக்கூடிய அளவு என்பது 1977–1980 ஆம் ஆண்டுகளில் 42.8 விழுக்காடு என்ற அளவிலிருந்து, 2001–2004 ஆம் ஆண்டுகளில் 37.05 விழுக்காடு அளவாக இன்றைக்குக் குறைந்துள்ளது. அதேபோல, தரிசு நில அளவு என்பதும் இன்றைக்கு ஏறத்தாழ 20 இலட்சம் ஹெக்டேரை எட்டியிருக்கிறது. அதேபோல அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு விவசாயின் பயிர் செய்யும் நிலத்தின் அளவும் குறைந்து வருகிறது என்று. 1976–1977–ல் 1.25 ஹெக்டேரிலிருந்து 2005–2006–ல் ஒரு ஹெக்டேருக்குக் குறைவாக சரிந்துள்ளதால். விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். மேலும், தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் 59–வது அறிக்கையின் விவரப்படி, விவசாயிகள் அதிக அளவு கடன்பட்டுள்ளனர். சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு சார்ந்த

நிறுவனங்கள் போதிய கடன் வழங்காத காரணத்தினால், இப்படி விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாக அறிக்கை குறிப்பிடுகிறது. மேலும், அந்த அறிக்கை சொல்கிறது; "தமிழ்நாட்டில் ஏறத்தாழ 56 விழுக்காடு மக்கள், ஊரகப் பகுதிகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்; இவர்களுக்கு மாநிலத்தின் மொத்த வருமானத்தில் ஏழில் ஒரு பகுதிதான் கிடைக்கிறது; இப்போக்கு வருவாய்ப் பகிர்வில் ஏற்றத்தாழ்வு நிலையை வெளிப்படுத்துகிறது" என்று திட்டக் குழு அறிக்கை இங்கே குறிப்பிடுகிறது. மேலும், திட்டக் குழு அறிக்கை, வேளாண் துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், கிராமப்புற மக்களினுடைய வேலைவாய்ப்பு, வாழ்க்கைத் தரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது என்றும், ஓராண்டு வேலைவாய்ப்பு வளர்ச்சி என்பது 1.74 விழுக்காட்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு 0.2 விழுக்காடாக இன்றைக்குக் குறைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டுகிறது. எனவே, திட்டக் குழு தயாரித்திருக்கக்கூடிய இந்த அறிக்கையை நாம் பார்க்கிறபோது, இன்றைக்கு வேளாண் துறையில் தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. எனவேதான், அரசு, வேளாண் துறையை மீட்டெடுக்கத் தேவையான அளவிற்கு விவசாயிகளுக்குத் தடையின்றி கடன் கிடைப்பதை உத்தரவாதம் செய்ய வேண்டும். அதேபோல, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் இடுபொருள்கள் கிடைப்பதற்கும், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதையும், இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகிறபோது, அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதையும் அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும். இதன்மூலம் கிராமப்புறத்தில் ஒரு மாற்றத்தை நிச்சயமாக தமிழகத்திலே உருவாக்க முடியும். இந்த அடிப்படையில்தான் தரிசு நில விநியோகம் என்பதை அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

*முற்பகல் 11-40*

இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அரசின் கையில் கையளவு நிலம் இருந்தால்கூட, அது ஏழைகளுக்கு வழங்கப்படும் என்று அறிவித்ததைப் பாராட்டுகிறோம். ஆனால், அதுமட்டும் போதுமானதல்ல; இன்றைக்கு அரசுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் தமிழகத்தினுடைய சில மிகப் பெரிய மனிதர்களிடம், நிலப் பிரபுக்களிடம் குவிந்து கிடக்கின்றன. அரசு, தன்னுடைய முழுப் பலத்தையும் பயன்படுத்தி, அத்தகைய நிலங்களைக் கைப்பற்றி, கையகப்படுத்தி நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.





அடுத்து, இந்த அறிக்கையில் 10 ஆண்டுக் காலம் புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அதுமட்டும் போதுமானதல்ல; இன்றைக்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், நகரங்களில், கிராமங்களில் அரசுப் புறம்போக்கு நிலத்தில் மட்டுமல்ல; கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் பல இலட்சக்கணக்கான மக்கள் இன்றைக்குக் குடியிருந்து வருகிறார்கள். கோயில் நிலங்கள் என்று சொல்கிறபோது, ஒருபுறம் கோயில் நிலங்களில் விவசாயிகள், விவசாயம் செய்யக்கூடிய நிலை. இன்னொருபுறம், கோயில் நிலங்களில் கட்டடங்கள் கட்டி, வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை. அதேபோல, திருப்பூர் போன்ற பகுதிகளில் அறநிலையத் துறை உருவாவதற்கு முன்பு, தர்மகர்த்தா கையில் இருந்த பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு, பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு இருக்கின்றன; ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த மனைகளைப் பெற்ற அந்த மக்கள், இன்றைக்குப் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து, வீடுகளைக் கட்டி இருக்கிறார்கள். இன்றைக்கு அந்த தர்மகர்த்தாவிற்கும், அறநிலையத் துறைக்கும் நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்று, அறநிலையத் துறைக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. இப்படி அந்த மனைகளை, மனைப் பிரிவுகளை வாங்கி, வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

அதேபோல, தமிழகத்தின் பல்வேறு நகரங்களில், கிராமப்புறங்களில் கோயிலுக்குச் சொந்தமான அடிமனைகளில் கூரை வீடுகளை அமைத்து, பல இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அறநிலையத் துறை 1999 ஆம் ஆண்டு முன் தேதியிட்டு, இன்றைக்குப் பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு வாடகையை உயர்த்தி இருக்கிறது. அறநிலையத் துறையின் சார்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டிஸ் அனுப்பப்பட்டு இருக்கிறது. இதன்காரணமாக அந்த மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே, 1999 ஆம் ஆண்டு முன் தேதியிட்டு உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய அந்த வாடகை உயர்வை அரசு இரத்து செய்வதோடு, கோயில் மனைகளிலே குடியிருக்கக்கூடிய பல இலட்சக்கணக்கான மக்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் அந்த மனைகளை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும். கேரளா போன்ற மாநிலங்களில் கோயில் நிலங்கள் வசிப்பவர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டு, ஒரு தொகை நிர்ணயம் செய்யப்பட்டு, அந்தத் தொகை அந்தந்தக் கோயில்களின் பெயரால் டெபாசிட் செய்யப்பட்டு, அதிலிருந்து

[திரு. வே. மாரிமுத்து] [2007 ஜனவரி 23

கிடைக்கக்கூடிய வருவாயைப் பயன்படுத்தி, கோயில் பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட ஒரு பணியை இந்த அரசு செய்ய வேண்டும். இதன்மூலமாக பல இலட்சக்கணக்கான மக்கள் மிகப் பெரிய பலன் அடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு மக்களினுடைய அடிப்படையான தேவைகளை, பிரச்சினைகளை உடனுக்குடன் சரிசெய்கிற நிலையில் உள்ளாட்சி அமைப்புகள் இருக்கின்றன. எனவே, அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலான அதிகாரத்தையும், நிதியாதாரத்தையும் அரசு வழங்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நான் சமீபத்தில் திருவாரூருக்கு அருகில், மன்னார்குடிக்கு அருகில் இருக்கக்கூடிய பரவாக்கோட்டை என்கிற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அந்த ஊராட்சிமன்றத் தலைவர் திரு. அண்ணாதுரை ஒரு செய்தியைச் சொன்னார். அந்தப் பகுதியிலே குடும்ப அட்டைகள் பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அந்தக் குடும்ப அட்டைகளுக்கெல்லாம் இன்று வரை மண்ணெண்ணெய் என்பது வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இது, அந்தப் பகுதிகளில் மட்டுமல்ல; பல்வேறு பகுதிகளிலும் நீடிக்கிறது. எனவே, அப்படிப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் உடனடியாகக் கிடைப்பதற்கான பணியைச் செய்யவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்ற ஆட்சியிலே, இறுதியாக 39 இலட்சம் கார்டுகளை அவர்கள் வழங்கிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதற்கு வேண்டிய மண்ணெண்ணெய் தமிழக அரசிடம் இருக்கிறதா என்றுகூட பார்க்கவில்லை. இப்பொழுது அதற்கு வேண்டிய முயற்சிகளை— மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஒரு முறை–one time– என்று அவர்கள் கொடுத்தார்கள். அது one time என்று 12,000 மெட்ரிக் டன் அந்த மண்ணெண்ணெயை உடனே கொடுத்துவிட்டால், தொடர்ந்து



2007 ஜனவரி 23] [திரு. எ.வ. வேலு]

அவர்களுக்குக் கொடுக்கமுடியாது. அதனால் அந்த மண்ணெண்ணெயை ஏற்கெனவே இருக்கிற கார்டுதாரர்களுக்கு இல்லையென்று சொன்ன குறையைப் போக்க கொடுத்தோம். தொடர்ந்து நேற்றையதினம்கூட, மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த மண்ணெண்ணெய் வந்தவுடனே, அந்த 39 இலட்சம் அட்டைதாரர்களுக்கு இந்த அரசு உடனே வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து, ஒரு நிமிடத்தில் முடியுங்கள், சீக்கிரம்.

**திரு. வே. மாரிமுத்து:** அதேபோல பேரூராட்சிகள், பல பேரூராட்சிகள் இன்றைக்கு மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்டு இருக்கின்றன. அப்படி மாற்றப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிகளில் ஆணையர் மட்டுமே இருக்கிறார். பல இடங்களில் பொறியாளர் இல்லை. சர்வேயர் இல்லை. வரி வசூலிப்பவர் இல்லை. இப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக, போதுமான அளவுக்குப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எனது தொகுதி சம்பந்தப்பட்ட ஒன்றிரண்டு பிரச்சினைகளை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாகை துறைமுகம் சம்பந்தமாக கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் பதிலளிக்கிறபோது, உடனடியாக அந்தப் பராமரிப்புப் பணிகளெல்லாம் செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில், நாகை துறைமுகப் பகுதியிலே அந்தப் பராமரிப்புப் பணிகளெல்லாம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட நேரடியாக வந்து பார்வையிட்டார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், 20 ஆண்டுகளுக்கு முன்பு நாகை துறைமுகம் எப்படிச் செயல்பட்டதோ, சரக்குகள் எப்படிக் கப்பல்களில் வந்து போனதோ, அத்தகைய ஒரு நிலையை உருவாக்குவதற்கு மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய, பொறுப்பில் இருக்கக்கூடிய நாகை துறைமுகத்தை மத்திய அரசினுடைய பொறுப்பிற்கு மாற்றுவதன்மூலமாக நாகை துறைமுகம் அபிவிருத்தி அடையும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல, திருவாரூரிலிருந்து நாகூர்வரை அகல இரயில் பாதை பணி நடைபெறுகின்ற காரணத்தினாலே, இரயில் போக்குவரத்து என்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. வேளாங்கண்ணி, நாகூர் போன்ற பகுதிகளுக்கு வரக்கூடிய பல ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் போதுமான பேருந்து வசதி இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப்

[திரு. வே. மாரிமுத்து] [2007 ஜனவரி 23

பகுதிகளுக்கு இரயில் போக்குவரத்து துவங்குகிறவரை, கூடுதலான பேருந்து வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதிலே ஒரே ஒரு விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, நான் கடந்த கூட்டத் தொடரிலேயே பேசி இருக்கிறேன். கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்ஷூரன்ஸ் தொகை என்பது என்னுடைய தொகுதியிலே கிடைக்கவில்லை. நாகப்பட்டினம் பகுதியிலே, கீழையூர் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு—நாகை மாவட்டத்திலேயே இந்த இரண்டு பகுதிகளில்தான் விவசாயிகளுக்கு பயிர் இன்ஷூரன்ஸ் தொகை என்பது கிடைக்கவில்லை. அது, தமிழகத்திலே இருக்கக்கூடிய புள்ளியியல் துறை செய்த தவறின் காரணமாக, அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதில் தனிக் கவனம் எடுத்து விவசாயிகளுக்குப் புள்ளியியல் துறையால் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பாதிப்பை ஈடுகட்டுகிற முறையில் விவசாயிகளுக்கு அந்த இன்ஷூரன்ஸ் தொகை கிடைப்பதற்குண்டான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அதேபோல, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கின்ற முறையில் கூடுதல் நடவடிக்கை வேண்டும். போதுமான மருத்துவக் கருவிகள் இல்லாத நிலை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மாவட்டத் தலைநகரமான நாகை மருத்துவமனையிலிருந்து தினசரி நூற்றுக்கும் மேற்பட்டவர்களைத் தஞ்சை மருத்துவமனைக்கு அனுப்புகிற சூழல் உருவாகியிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட இடங்களில் போதுமான ஊழியர்களை, மாவட்டத் தலைநகரம் என்று சொல்லுகிறபோது, பல நூற்றுக்கணக்கான கிராமங்களை உள்ளடக்கிய நகரம் என்கிற வகையில், போதுமான வசதிகளோடு இயங்கக்கூடிய மருத்துவமனையாக அதை மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டு, தந்த வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** தமிழகச் சட்டப் பேரவையைச் சமத்துவ, சமதர்ம நீதியரசராக வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.



2007 ஜனவரி 23] [திரு. கு. சின்னதுரை]

உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒரே தலைவர், தமிழ் அன்னையின் தவப் புதல்வர், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரின் தன்னிகரில்லா மாணவர், தமிழ்த் தாயின் மூத்த குடிமகன், பேரறிஞர் அண்ணாவின் பேரன்புமிக்க தம்பி, முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவரும், தமிழக நிதித் துறை அமைச்சருமான மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களின் பேராதரவோடு, இளைஞர் சமுதாயத்தின் எழு ஞாயிறு, 6½ கோடி தமிழர்களின் இதயத் துடிப்பு, அரசியல் உலகில் எங்களை எல்லாம் வழிநடத்தி அரவணைத்துச் செல்லும் குறிஞ்சி மலரின் அருந்தமிழ், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அன்பான ஆசியினைப் பெற்று, வீரத்தின் விளைநிலம், சேலத்துச் சிங்கம், எங்களின் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் அரவணைப்போடு அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் வெற்றி பெறுவதற்கு உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் மற்றும் என்னை முதன்முதலாக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்த தலைவாசல் தொகுதியிலுள்ள வாக்காளர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது கன்னி உரையை இவ்வவையில் பதிய வைக்கின்றேன்.

தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள், சமுதாயத்தில் ஏழையெளிய மக்களின் பசிப் பிணியைப் போக்குவதற்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கியுள்ளார். இந்த ஆண்டு 3 இலட்சம் ஏழையெளிய குடும்பங்களுக்கு gas அடுப்பும், 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் வழங்கி விவசாயிகளின் 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன்களையும் இரத்து செய்துள்ளார். சத்துணவில் வாரம் இரண்டு முட்டையும், ஏழையெளிய பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூபாய் 15 ஆயிரமும், கருவுற்றத் தாய்மார்களுக்கு 6 மாதங்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலமும், வேலையற்ற இளைஞர் பட்டதாரிகளுக்கு உதவித் தொகையும், வயதான மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகை இரட்டிப்பும், உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடும் தந்து, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு நல வாரியங்களும் அமைத்து இருப்பது மட்டும் அல்லாமல், உடல் ஊனமுற்றோருக்கும்,

ஙனவர்களுக்கும், வீட்டு வேலை செய்பவர்களுக்கும் நல வாரியம் அமைத்து, அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், வரும் கல்வி ஆண்டில் கணினி மையங்கள் அமைக்க இருப்பதும் என இந்த வகைகளில் சமுதாயத்தில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நல்வாழ்வுத் திட்டங்கள் வழங்கியுள்ள தலைவர் அவர்களே, உங்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேநேரத்தில், என்னைத் தேர்வு செய்த தலைவாசல் தொகுதி மக்களின் சார்பாக சில கோரிக்கைகளை வைக்கின்றேன். கெங்கவல்லி தாலுகா அலுவலகம், கடந்த நமது கழக ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை சொந்தக் கட்டடம் இல்லை. சமுதாய நலக் கூடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தாலுகா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு உதவ வேண்டும்.

இப்பகுதியில் கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் அதிகமாக இருப்பதால், சிற்றுந்து (mini-bus) அதிகமாக இருக்க வேண்டும். இதனால் அரசு அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள், பள்ளி மாணவ, மாணவியர், மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், வியாபாரிகள், பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

மேலும் கெங்கவல்லிக்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு உதவ வேண்டும். கடந்த நமது கழக ஆட்சியில், கெங்கவல்லியில் காவல் நிலையம் புதிதாக அமைக்கப்பட்டது. இதுவரை அதற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு உதவ வேண்டும்.

கெங்கவல்லி தாலுகாவிற்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். மேலும், தாலுகா துணைக் கருவூலம் ஒன்று அமைத்துத் தர வேண்டும். கெங்கவல்லியில், தாலுகா அளவில் ஒரு சார்பு நீதிமன்றமும் அமைத்துத் தர அரசு உதவ வேண்டும்.

தலைவாசலில், மறுவாழ்வு இல்லம் நமது முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்த மறுவாழ்வு இல்லம் சரியாகப் பராமரிக்கப்படாமல் உள்ளது. அந்த மறுவாழ்வு இல்லத்தைப் பராமரிக்க அரசு உதவ வேண்டும்.

தலைவாசலில் தினசரி காய்கனி மார்க்கெட் உள்ளது. அதற்குக் குளிர்ப்பதன வசதி ஏற்படுத்தித் தர அரசு உதவ வேண்டும்.

எனது தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர்



அதிகம் வசிக்கிறார்கள். இங்கு ஒரு ஆட்டுப் பண்ணை 600 ஏக்கரில் உள்ளது. அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலையினை அமைத்துக் கொடுக்க அரசு உதவ வேண்டும்.

கெங்கவல்லியில் உள்ள மருத்துவமனை, தாலுகா அரசு மருத்துவமனையாக நமது கழக ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்டது. அதற்குப் போதுமான கட்டட வசதி இல்லாமல் உள்ளது. அதற்குக் கட்டடம் கட்டித் தர அரசு உதவ வேண்டும்.

எனது தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அதிகமாக வசிப்பதால், அரசு பாலிடெக்னிக் அல்லது அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர அரசு உதவ வேண்டும்.

பச்சைமலை மிகவும் பழமைவாய்ந்த இடமாக இருப்பதால், அங்கு மலைமேல் நூற்றுக்கு மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. அங்கு ஒரு சுற்றுலாத் தலம் அமைப்பதுடன், நினங்கரை முதல் மாயம்பாடி வரை சாலை வசதி செய்து தரவும் அரசு உதவ வேண்டும்.

*முற்பகல் 11–55*

எனது தொகுதியைச் சுற்றி சுவேத நதி மற்றும் வசிஷ்ட நதி என்னும் இரண்டு ஆறுகள் இருப்பதால், மழைக் காலங்களில் மலையிலிருந்து தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்கும், தாங்கள் வாங்கும் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும், பள்ளி மாணவ மாணவிகள் பள்ளி செல்வதற்கும், நோயாளிகள் மருத்துவமனை செல்வதற்கும், கர்ப்பிணித் தாய்மார்கள் பேறுகால மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கும் பெரும் அவதிப்படுகிறார்கள். எனவே, நிறைய பாலங்கள் கட்ட வேண்டிய அவசியம் உள்ளதால், பாலங்கள் கட்டித் தர அரசு உதவ வேண்டும்.

எனது தொகுதியில், வீரகனூர் பொன்னாளியம்மன் அணைக்கட்டுத் திட்டம் மற்றும் சிறுவாச்சூர், மணிவிழுந்தான், சோடியில் உயர் அணைக்கட்டு கட்டுவதற்கும், மேலும் கடம்பூரில் கழுங்குமலை ஏரி கட்டுவதற்கும் அரசு உதவ வேண்டும.

தலைவாசல் தொகுதியில், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் அதிகமாக இருப்பதால், கால்நடை மருத்துவமனை மற்றும் போதிய கட்டடங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

தலைவாசல் பகுதியில் அதிக மக்கள் இருப்பதால், அங்கு இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி,

போதிய கட்டட வசதிகள், மேலும் தம்மம்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி, முழுநேர சுகாதார நிலையமாக மாற்றித் தரவும் மற்றும் போதிய கட்டட வசதிகள் செய்து தரவும் அரசு உதவ வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றினால், இங்கு மிகவும் சிரமத்தில் வாழும் மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று கூறி, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு முதல்வா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து, எனது கன்னி உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னைப் பேச அனுமதித்ததற்காக முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, மேதகு ஆளுநர் உரையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். ஐந்து ஆண்டு சட்டசபைத் தொடரில், முதல் ஆண்டு, மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை ஊழல் இல்லாமல் சிறப்பாகச் செயல்படுத்தியதன்மூலம் மகத்தான வெற்றியை ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு தமது ஆட்சியின்மூலம் பெற்றுத் தந்த, நமது சிறப்பு வாய்ந்த முதல்வர் கலைஞர் அவர்களை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன். இரண்டாவது தொடரிலும், மேதகு ஆளுநர் உரைமூலம் நல்ல அடிப்படைகளை உருவாக்கித் தந்துள்ளார். எனவே, சிறப்பான வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறேன்.

தமிழகத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில், பல வேண்டத்தகாத சம்பவங்களும், செயல்களும் நடந்தன. அதேசமயத்தில், கடந்த 10 ஆண்டுக் காலமாகத் தமிழகத்தில் ஜனநாயக முற்போக்குச் சக்திகளுக்கு அவமானத்தை ஏற்படுத்திய, சவாலாக இருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் கிராமங்களில் சுழற்சி முறையை அமல்படுத்தாது, தேர்தலை நடத்தி முடித்து, சமூக நீதியை நிலைநாட்டியது, தமிழ்ச் சமுதாயத்தை நமது அரசு மீண்டும் தலைநிமிரச் செய்துள்ள சாதனை. அந்தச் சாதனையைத் தனது அரசின் சாதனையாக மட்டும் என்று பெருமைப்பட்டுக்கொள்ளாமல், ஜனநாயக, சமூக நீதிக்காகப் போராடும் அனைத்துக் கட்சிகளின் வெற்றி என்று அரசு பதிவு செய்தது சிறப்புக்குரியது.



மாறுதல் என்ற சொல்லைத் தவிர, மற்றதெல்லாம் மாறும் என்று உலக வளர்ச்சியின் உண்மைகளைக் கண்டறிந்து, உழைப்பாளிகளின் உழைப்பால் உருவானதுதான் செல்வம் என்பதை உலகிற்கு உணர்த்தியவர், மாமேதை காரல் மார்க்ஸ். அதை அடிப்படையாகக் கொண்டு, இந்திய அரசமைப்புச் சட்டம் புதியதாக உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சாாபில் வரவேற்கிறோம்.

ஜனநாயகத்தில் அடிப்படையாக உள்ள பாராளுமன்றம், நீதிமன்றம், நிர்வாகம் என்ற அமைப்புகளின் அதிகாரங்களில் புதிய வரைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். 9-வது அட்டவணை பற்றிய தீர்ப்புகளில் நீதிபதிகள் சொல்லியது போல, நீதிமன்றங்கள் அரசமைப்புச் சட்டங்களில் சில அடிப்படையான கொள்கைகளை, உரிமைகளை உள்ளடக்கி அதற்குப் பாதுகாப்பான சுற்றுச்சுவரை உருவாக்கியுள்ளன; அதிலிருந்து நீதி வழங்குகிறோம் என்கிறார்கள். எனவே, இதைக் கருத்தில்கொண்டு இன்றைக்குப் புதியதாக உருவாகியிருக்கின்ற சமூக நீதி, நதிகள் இணைப்பு, வரிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளில், மாற்றங்களைக் கொண்டுவர, இந்தப் புதிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவது காலத்தின் அவசியம். அதேசமயம், நமது சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

*நண்பகல் 12-00*

சட்டமன்ற விவாத முறைகள், சட்டமன்ற நடவடிக்கைகள் ஆக்க பூர்வமாக அமைவதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும். அதிகாரத்தை உருவாக்குகிற சட்டமன்றம், அதிகாரமற்ற சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தொகுதியின்பால் உள்ள உரிமைகள் தெளிவுபடுத்தப்படவேண்டும். அரசின் திட்டங்கள், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற மக்கள்நலப் பணிகளை அமல்படுத்துவது முற்றிலும், நிருவாகத்திலுள்ள அதிகாரிகளையே சார்ந்துள்ளது. அதில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். தொகுதியில் உருவாக்கப்படுகின்ற திட்டங்களிலும், அரசால

உருவாக்கப்படுகின்ற திட்டங்களிலும் எந்தவிதப் பங்களிப்பையும், கண்காணிப்பையும் செலுத்த, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரங்கள் இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய தொகுதியில், வளர்ச்சிப் பணிகள், திட்டங்களை உருவாக்குவதில், சட்டரீதியான உரிமைகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதேபோல, உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளுக்கும் கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தியாவில் முன்மாதிரியான சில மாற்றங்களை நமது மாநிலச் சட்டமன்றத்திலேயும், உள்ளாட்சி அமைப்புகளிலும் உருவாக்க, ஒரு குழுவை அமைத்து, செயல்திட்டங்களை உருவாக்குகின்ற நடவடிக்கையை, நமது முதல்வர் அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

நதிநீர்ப் பிரச்சினையில் அண்டை மாநிலத்தில் சில ஆத்திரமூட்டும் செயல்கள் நடந்தாலும், நிதானமாக, அதேசமயத்தில் மிக உறுதியாக அப்பிரச்சினையை அணுகியதற்காக நமது அரசைப் பாராட்டுகின்றேன். விவசாய உற்பத்தியை 4 சதவிகிதமாக இலக்கு வைத்தது பாராட்டுக்குரியது. அவசியத் தேவையும் ஆகும். ஆனால், 4 சதவிகித வளர்ச்சி என்பது மிகப் பெரிய சவால் என்பதை நாம் உணரவேண்டும். தமிழ்நாட்டில் விவசாயத்தை மேம்படுத்த, கிராமப்புற மக்களின் வருமானத்தைப் பெருக்க, விவசாயத்தின் முழுக் கட்டமைப்பையும் பலப்படுத்தவேண்டும். விவசாயத்தில் விவசாயிகள் உற்சாகத்தோடும், நம்பிக்கையோடும் பங்கெடுக்க, சிறப்பான, ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தவேண்டும். விவசாய விளைபொருட்களுக்கு நிலையான, கட்டுப்படியான விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வெள்ளம், வறட்சி போன்றவற்றால் விவசாயம் பாதிப்படையும்போது, நிவாரணம் கிடைக்க நிதி ஒதுக்கீட்டோடுகூடிய திட்டத்தை உருவாக்கவேண்டும். மறு முளைப்புத் திறனற்ற terminator seeds விதைகளைத் தடை செய்து, அந்நிய மற்றும் தனியார் விதைக் கம்பெனிகள், 'எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம்' என்பதைப் போல, தாமற்ற விதைகளை உற்பத்தி செய்து, விற்று கொள்ளை இலாபம் அடிக்கின்ற போக்கைத் தடை செய்யவேண்டும்.

அதைப்போல, தமிழகத்திலே கரும்பு விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு ஒரு நிலையான கொள்கையை உருவாக்கவேண்டும். அரசுக் கூட்டுறவு ஆலைகளுக்குக் கூடுதல் விலை கிடைக்கிற அதேநேரத்தில், தமிழ்நாட்டில் இருக்கின்ற அதிகமான தனியார் ஆலைகளில் விவசாயிகளுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாத ஒரு சூழ்நிலை





உருவாகி இருக்கிறது. இதற்கும் காலத்தில் நாம் நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அதைப்போல டீசல், பெட்ரோல் தேவை அதிகமாக உள்ள சூழலில், பயோ–டீசல் உற்பத்தியில் கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டும். ஜெட்ரோபா வ்வசாயம் செய்யவும், பயோ–டீசல் தொழிற்சாலைகளை அதிக அளவில் நிறுவியும் அதற்கான விலை கிடைப்பதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்தவேண்டும். தரிசு நிலங்களில் ஜெட்ரோபாவை உற்பத்தி செய்வதன்மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும்.

2007 ஜனவரி முதல், 6 மாதங்கள் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா அரசு வழங்கும் என்ற ஆணை வரவேற்கத்தக்கது. அதேசமயத்தில், தலைநகரங்களிலிருந்து 18 கி.மீ. தூரம், மற்ற நகரங்களிலிருந்து 16 கி.மீ. தூரம் எந்தப் பட்டாவும் வழங்கத் தடை விதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்தத் திட்டம் முழுமை பெறாது. எனவே, இந்தத் திட்டத்திற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல இந்தச் சிறப்புத் திட்டத்திற்கு அது பொருந்தாது. கண்டிப்பாக அதற்கு உட்பட்ட இடங்களிலும் வழங்கப்படும். 2000 ஆம் ஆண்டே நகராட்சிப் பகுதிகளிலும், மாநகராட்சிப் பகுதிகளிலும் அதை வழங்கியிருக்கிறோம். அதே முறையைத்தான் இந்த வருடமும் பின்பற்றுவோம்.

**திரு. சு. குணசேகரன்:** மிக்க நன்றி. அதைப்போல தகுதியுள்ள இடங்களை முறையாகத் தேர்வு செய்து, நிலப்பட்டா மாறுதல் செய்து வழங்க நடவடிக்கை எடுக்க, கால நீட்டிப்பு வேண்டும். விவசாயத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது. அதிலே குடும்ப அடிப்படையில் அடையாள அட்டை வழங்குகின்ற தன்மையை மாற்றி, விவசாயத் தொழிலில் ஈடுபடக்கூடிய ஆண், பெண் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை கலைஞர் அவர்களின் அரசு உருவாக்கி, அதனை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல முதியோர், விதவை பென்ஷன் பெற ஆண் வாரிசு இருந்தால் அவர்களுக்கு இல்லை என்ற நிலையை மாற்றவேண்டுமென்று

சென்ற கூட்டத் தொடரில் சொன்னேன். சென்ற கூட்டத் தொடரிலேயே விதவைகளுக்கு, அதேபோல முதியோர்களுக்கு ஆண் வாரிசு இருந்தாலும் கொடுக்கலாம் என்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். ஆனால், அதற்கான G.O. இன்னும் வழங்கப்படாததால், ஆண் வாரிசு உள்ள விதவைகளுக்கும் முதியோர்களுக்கும் இன்னும் பென்ஷன் வழங்காத சூழல் உருவாகி இருக்கிறது. எனவே, ஆண் வாரிசு இருந்தாலும், உதவித் தொகை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

அதேபோல, 'வருமுன் காப்போம் திட்டம்' என்பது ஒரு மகத்தான திட்டம். இப்போது இருக்கிற கிராமப்புற மக்கள், தங்களுக்கு என்ன நோய் இருக்கிறது என்பதே தெரியாத ஒரு சூழ்நிலையில், நமது முதல்வர் அவர்கள், அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி இருப்பது சிறப்புக்குரியது. அதேசமயம், நமது முதல்வருடைய கருத்து முழுமையாக நிறைவேற வேண்டுமென்று சொன்னால்—இப்போது மருத்துவர்கள் deputation முறையிலே நியமிக்கப்படுகிறார்கள்; அதனால், இயல்பான சில பாதிப்புகள் ஏற்படுகின்றன. முறையாக அது செயல்படுத்தப்பட முடிவதில்லை—அந்தத் திட்டத்திற்கென்று—தனியாக ஊழியர்கள், மருத்துவர்கள், நியமிக்கப்பட்டு அது எல்லாக் காலங்களிலும் முறையாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, தமிழகத்தில் இப்போது சுற்றுப்புறச் சூழல், மாசுக் கட்டுப்பாடு திட்டங்கள் அடிப்படையில் பல்வேறுவிதமான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. திருப்பூர் சாயப் பட்டறை போன்ற கழிவுப் பிரச்சினைகள் எல்லாம் நீடித்துக்கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் குப்பைகள் என்பது, ஒவ்வொரு நகரங்களிலும், கிராமங்களிலும் ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகி இருக்கிறது. எனவே, குப்பைகளைச் சேகரித்து அதனுடைய அளவின் அடிப்படையில் மின்சார நிலையங்களை உருவாக்கி, அந்தக் குப்பைகளைப் பயன்படுத்துகிற ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். மின் தேவை அதிகம் உள்ள எங்களது மாவட்டத்தில் அந்த மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதன் மூலமாக, குப்பைப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய கிராமப்புற வேலைத் திட்டம்; அதில் அனைவருக்கும் ரூ.80 சம்பளம் கிடைக்கிற நிலை உறுதியாக்கப்படவேண்டும். இந்தத் திட்டம் செயல்படுத்துகிற மாவட்டங்களில், மாவட்ட ஊராட்சிகளில்,





ஒன்றியங்களில் S.G.R.Y. என்ற அந்த நிதி, இப்போது நிறுத்தப்பட்டு இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு எந்த நிதி ஆதாரங்களும் இல்லாமல் எந்த மக்கள் நலப் பணிகளும் நடைபெறுவதில்லை. எனவே, அவர்களுக்கு ஒரு புதிய திட்டத்தின் அடிப்படையில் கூடுதலான நிதி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, நமது அரசு கடந்த கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னால், வீடு கட்டியிருக்கிற மக்களுக்குக் கூட்டுறவுக் கடன் சலுகை என்ற அடிப்படையில், 12 சதவிகித வட்டி குறைப்பு, அந்த அடிப்படையில் அவர்களுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, மீண்டும் 25 சதவிகித பணத்தைச் செலுத்தினால், 75 சதவிகித பணத்தை 6 மாதத்திற்குள் கட்டி அவர்கள் சலுகையைப் பெறலாம் என்று அறிவித்து இருந்தது. அந்தத் திட்டத்தில் நகரக் கூட்டுறவு வங்கிகள் விடுபட்டுப்போய் இருக்கின்றன. எனவே, நகரக் கூட்டுறவு வங்கிகளையும் அந்தத் திட்டத்தில் சேர்ப்பதோடு, முழுமையாக வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து அசலை மட்டும் பெறுகிற ஒரு திட்டத்தை நமது முதல்வர் அவர்கள் அறிவிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்கான பல்வேறு கோரிக்கைகளைக் கடந்த கூட்டத் தொடரிலே வைத்திருந்தேன். (மணியடிக்கப்பெற்றது) அதிலே குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தின் கிராபைட் திட்டம்; அந்த கிராபைட் விரிவாக்கத் திட்டத்தையும், அதேபோல், உபதொழில்களைத் தொடங்குவதற்கான அந்தத் திட்டத்தையும், இந்த பட்ஜெட் தொடரிலே முதல்வர் அவர்கள் அறிவித்து, எங்கள் மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சி அடைகிற மாவட்டமாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போல, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் புதிய பேருந்து நிலையங்களை உருவாக்கித் தரவேண்டும். இந்த ஆண்டு, சிவகங்கை மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதித்திருக்கிறது. எனவே, வறட்சி நிவாரணப் பணிகளுக்குக் கூடுதலான நிதியும், வறட்சி நிவாரண உதவியும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இன்றைக்குப் பத்திரிகைச் செய்தியிலே, புதுக்கோட்டையிலே ஒரு பள்ளிக்கூடக் கட்டடம் இடிந்து விழுந்து, 52 குழந்தைகள் பாதிப்பு அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது அரசு அதில் கவனம் செலுத்தி, தனியார் பள்ளிக்கூடங்கள், சிறப்பான கட்டடங்களிலே இயங்குவதற்கு நடவடிக்கை

எடுக்க வேண்டும். தவறுபவர்கள்மீது எந்த தயவுதாட்சண்யமும் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆட்சியிலும், மற்றொரு கும்பகோணம் போன்ற ஒரு செயல் உருவாகாத ஒரு சூழநிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நமது இந்திய விஞ்ஞானிகள் ISRO அமைப்பின்மூலமாக 10 தினங்களுக்கு முன்னால், ஒரு சிறப்பான விண்வெளிக் கலத்தை அனுப்பி, அந்த விண்வெளிக் கலம், நேற்றைய தினம் பூமிக்குத் திரும்பி இருக்கிறது வெற்றிகரமாக. அது நமது இந்திய ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு மிகப் பெரிய மைல் கல். வல்லரசாக மாற வேண்டும், மாற வேண்டும் என்று நாம் கூறிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், வல்லரசுகள் செய்திருக்கிற சாதனையின் முதல் படியை நமது இந்திய விஞ்ஞானிகள் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த விண்கலமும் இன்றைக்குத் திரும்பி வங்காள விரிகுடாவிலே விழுந்து, நமது சிறப்பு வாய்ந்த இந்த மாநிலத்தில், நமது எண்ணூருக்கு வந்திருக்கிறது என்பது ஒரு மிகப் பெரிய சிறப்புச் செய்தி. அந்த அடிப்படையில் சிறப்பு வாய்ந்த நமது முதல்வர் அவர்கள், ஒரு தனித் தீர்மானத்தின் மூலமாக அந்த விஞ்ஞானிகளின் இந்தச் சாதனைக்காக இந்தச் சட்டமன்றத்தில் நன்றியைத் தெரிவிக்கிற தீர்மானத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, இறுதியாக, நேற்றையதினம் கிட்னி சம்பவத்தைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்; அதை ஆழமாகப் பரிசீலித்து, கிட்னி விற்று பாதிப்பு அடைந்த பெண்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்; விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது சட்டமன்ற நான்காவது கூட்டத் தொடரிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களது சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு பெரியவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரையின் விவாதத்தில் பங்கு பெறுவதற்கு முன்பாக எனது ஒருசில கோரிக்கைகளை முன்வைத்துத் தொடங்க விரும்புகின்றேன்.



என்னுடைய தொட்டியம் சட்டமன்றத் தொகுதியிலே தாலுகா அலுவலகம் கட்ட இடம் ஒதுக்கப்பட்டு 3 ஆண்டுகளாகியும், இன்னும் கட்டடம் கட்டித் தரப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மனு செய்து இருக்கிறேன். இந்த நிதி ஆண்டில் செய்து தருவதாக உத்தரவாதம் அளித்திருக்கிறார்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே ஸ்ரீராம் சமுத்திரம் என்ற காவிரியின் வட பகுதியிலே குரம்பு ஒன்று இருக்கிறது. அந்தக் குரம்பு ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்பட்டு 11,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகின்றது. எப்படியென்றால், மேட்டூர் அணையிலே தண்ணீர் நிறுத்தப்பட்டவுடன், தற்காலிகக் குரம்பு அமைக்கப்படும். தண்ணீர் திறந்தவுடன் அந்தக் குரம்பு அழிந்து விடும். அதற்காக நமது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், நாங்களும், அரசு அதிகாரிகளும் அந்தப் பகுதிக்குச் சென்று, 80 ஆண்டுக் காலமாக உள்ள அந்த விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, புதிதாக ஒரு திட்டத்தைத் தயாரித்து, பொதுப் பணித் துறை அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறோம். அதை இந்த நிதி ஆண்டிலேயே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கொல்லிமலையிலிருந்து மழைக் காலத்திலே வரக்கூடிய உபரி நீர், என்னுடைய தொகுதியிலே வந்து பாய்ந்து கொள்ளிடம் ஆற்றிலே கலக்கிறது. அப்படி கலக்கும்பொழுது அந்த ஒரு ஏரியிலே அதாவது ரெட்டியாப்பட்டி என்கின்ற ஏரியிலே நிரம்பி வரக்கூடிய உபரி நீர், மீண்டும் கொள்ளிடத்திற்குச் செல்லும்பொழுது அதை வழிமறித்துப் பல ஏரிகளுக்குத் திருப்பி விடலாம். அப்படித் திருப்பி விடுவதற்காக, தற்காலிக "Channel", அதாவது மணலால் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை சிமென்ட் கால்வாயாக அமைத்துக் கொடுத்தால் சுமார் 10 ஏரிகள் பயனடையும். ஆகவே. அதையும் அமைத்துத் தரக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதற்கடுத்தாற்போல், அருமைத் தலைவர் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள், நமது முதல்வர் அவர்களுடைய நெருங்கிய நண்பர். பல அரசியல் காலக்கட்டத்திலே தமிழகத்திலே ஏற்படுகின்ற அரசியல் மாற்றத்திற்கும், மத்தியிலே ஏற்பட்டு இருக்கின்ற அரசியல் மாற்றத்திற்கும் உறுதுணையாக இருந்தவர். அரசியலிலே அப்பழுக்கில்லாத ஒரு தலைவர். அரசியலிலே நேர்மையையும், தூய்மையையும் கையாண்ட அந்தத் தலைவருக்கு, ஒரு சிலை அமைக்க வேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரிலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கேட்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை அன்போடு,

[திரு. மா. ராஜசேகரன்] [2007 ஜனவரி 23

அரவணைப்போடு கனிந்து பரிசீலனை செய்து, சென்னை மெரினா பீச் பகுதியிலே அந்த மாபெரும் தலைவருக்கு சிலை வைக்க அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். அடுத்தாற்போல் அருமைத் தலைவருடைய ஸ்டாம்ப் வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

கவர்னர் உரையிலே, கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம் ஆகிய 3 பஞ்சாயத்துகளிலே சென்ற ஆட்சிக் காலத்திலே நாடு சுதந்திரம் பெற்றும்கூட, அந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்களுக்குச் சுதந்திரம் என்றால் என்ன; ஜனநாயகம் என்றால் என்னவென்று தெரியாத அளவிற்கு இருந்த அந்தப் பகுதிகளிலே ஜனநாயகம் என்றால் இதுதான்; தலைவர் என்றால் இவர்தான்; ஊராட்சிமன்றத் தலைவர் என்றால் இவர்தான்; உங்களுக்காக இந்த அரசு இருக்கிறது என்ற ஒரு மாபெரும் உத்தியை அங்கு கையாண்டு தேர்தலை நடத்தி, பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்வுசெய்து, ஆட்சியை நிலைப்படுத்தி இருப்பதற்காக இந்த மாமன்றத்தின் சார்பாக முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடக்காத இடத்திலேயே தேர்தலை நடத்தி, தடைகளை முறியடித்து இருக்கிறார். அதேபோல, தன்னுடைய ஆட்சியிலே யாரும் எந்தத் தவறும் செய்து விட்டதாக யாரும் கூறக் கூடாது என்பதற்காக நடந்த தேர்தலை மக்களின் முன்னிறுத்தி, ஒரு தவறு நடந்து இருக்கிறது என்று பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும், நீதிமன்றமும் மறைமுகமாகக் குற்றஞ்சாட்டும்பொழுது, அந்தக் குற்றத்திற்குப் பொறுப்பாவதற்கு முன்பாகவே, தானாகவே முன்வந்து 99 மாமன்ற உறுப்பினர்களை இராஜினாமா செய்யச் செய்திருக்கிறார்; அந்த மாமன்ற உறுப்பினர்களில் எங்களது இயக்கத்தைச் சேர்ந்த 25 நண்பர்களும், பட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த நண்பர்களும் அருமைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறோம்.

பிற்பகல் 12–15

அடுத்து முல்லைப் பெரியாறு அணை. சென்ற 2, 3 நாட்களுக்கு முன்பாக அரசியலும், ஆன்மீகமும் ஒரே மேடையிலே இருந்தன. அருமைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகத் தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள், தமிழகம் ஒரு தீபகற்பம் போல இருக்கிறது என்று. இங்கே சென்னைக்குத் தண்ணீர் வேண்டுமென்றால், அங்கே ஆந்திராவை எதிர்பார்க்க வேண்டியதாயிருக்கிறது; தஞ்சைக் கழனி விளைய வேண்டுமென்றால், கர்நாடகத்தை எதிர்பார்க்க வேண்டியதாயிருக்கிறது; தென் மாவட்டங்களுக்கென்று முல்லைப் பெரியாற்றை எதிர்நோக்க வேண்டியதாயிருக்கிறது என்று மிகத் தெள்ளத் தெளிவாகச்



2007 ஜனவரி 23] [திரு. மா. ராஜசேகரன்]

சொன்னார்கள். கிருஷ்ணா நதிநீரைப் பெறுவதற்கு, "அருமைத் தலைவி, அன்புத் தலைவி, நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக" என்று டாக்டர் கலைஞர் கூறினாரே, அந்தத் தலைவி ஆரம்பித்து வைத்த திட்டத்தால், அருமைத் தலைவர் முதலமைச்சராக இருக்கும்பொழுது, சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர் வந்திருக்கிறது. அதுமட்டுமா வருகின்றது? 16 ஆண்டுகள் கழித்து காவிரி டிரிபியூனல், வருகின்ற ஜூலை 5 ஆம் தேதி தீர்ப்பு அளிக்க இருக்கிறது. யாருடைய ஆட்சியிலே? அருமைத் தலைவர் டாக்டர் கலைஞர் தலைவராக இருக்கின்ற ஆட்சியிலே.

முல்லைப் பெரியாறு அணையில் தார்மீக உரிமையைப் பெறுவதற்காக, சட்டத்திலிருக்கின்ற நேர்மையான அனைத்து வழிகளிலும் முயன்று, எந்த வெற்றியையும் பெற முடியாத காரணத்தால், இன்று சுப்ரீம் கோர்ட்டை அணுகியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று அருமைத் தலைவர் அவர்கள் யோசித்தார்கள்; அரசும் யோசித்தது. நாட்டினுடைய இறையாண்மையைக் காப்பதற்கும், ஒற்றுமையைக் காப்பதற்கும், மக்களின் ஜீவாதார உரிமையைப் பெறுவதற்கும், அரசியல் சாசனச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை, இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக அதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், அருமைத் தலைவர் அவர்கள், பகவான் ஸ்ரீசத்ய சாய் பாபா அவர்களுடன் மேடையிலே அமர்ந்திருந்தார்கள். அப்போது சொன்னார்; "ஆன்மீகமும் அரசியலும் ஒரே மேடையில் அமர்ந்திருக்கின்றன என்று பல விமர்சகர்கள் விமர்சிக்கலாம்; ஆனால், எதற்காக அமர்ந்திருக்கிறோம் என்பதுதான் உண்மை. பகவான் ஸ்ரீசத்ய சாய் பாபா அவர்கள், 200 கோடி ரூபாயைக் கொடுத்து சென்னை மக்களின், ஒரு கோடி மக்களின், தாகத்தைத் தீர்த்தார்கள். ஆன்மீகத்தின் வாயிலாக, அவர் ஏழைக்குப் பணி செய்கிறார்; அதற்காகப் பாராட்டுகிறேன்" என்று தன்னுடைய தெள்ளத் தெளிவான தமிழிலே மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள்.

அதற்கடுத்தாற்போல, 10–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 44,000 கோடியை இலக்காகக் கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம் என்றும், 11–வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்தப் பணமானது ரூ. 80,000 கோடியாக உயர்த்த அரசு உத்தேசம் கொண்டிருக்கிறது என்றும் கூறியிருக்கின்றார்கள்.

கவர்னர் உரையிலே, தமிழகத்தில் 56 சதவீத மக்கள் விவசாய மக்கள் என்று கூறியிருக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், 56 சதவீத மக்கள், நாட்டினுடைய பாதிப் பகுதியைத் தாண்டியிருக்கிறார்கள். நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயிகள் முக்கியம் என்பதை, இந்த கவர்னர் உரை அறிவுறுத்தியிருக்கிறது.

கோழிப் பண்ணைத் தொழிலிலே இருக்கின்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்காக. சத்துணவிலே வாரம் இரண்டு முட்டைகளை அளித்து, அவர்களுடைய எதிர்காலத்திலே விளக்கேற்றி வைத்தீர்கள். அதுபோல, நாட்டின் 10 மாவட்டங்களில் பணப் பயிரான கரும்பு, வாழை ஆகியவை நடப்பட்டிருக்கின்றன. வாழை விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். வாழைத் தார்களைக் கொள்முதல் செய்யும்போது வியாபாரி ஒரு பழத்தை 25 பைசாவுக்குக் கொள்முதல் செய்கிறார். ஆனால், சென்னையிலே இங்கே நம்முடைய எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு வெளியிலேகூட பார்த்தீர்கள் என்றால், ஒரு ரூபாய் 50 பைசாவுக்கு ஒரு வாழைப் பழம் விற்பனை செய்யப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், விவசாயிகள் வயிற்றிலே பால் வார்க்கும் விதமாக வாழைப் பழத்தைச் சத்துணவிலே சேர்த்து விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கரும்பு. சென்ற முறை நான் விவசாய மானியக் கோரிக்கையிலே பேசும்போது, கரும்புக்கு வெட்டுக் கூலியையும், அதனுடைய வாடகைப் பணத்தையும் தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். 10 கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்கு வாடகையைக் குறைத்துத் தருவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஆனால், அதை, அரசு ஆலைகளும், கூட்டுறவு ஆலைகளும் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், தனியார் ஆலைகள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. அதுமட்டுமல்லாமல், வட இந்தியாவிலே இருக்கின்ற மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே வெட்டுக் கூலியையும், வாடகையையும் அந்த ஆலைகளே ஏற்றுக்கொள்கின்றன. அவர்களுக்கு அதுபோக டன்னுக்கு 1,200 ரூபாய் முதல் 1,600 ரூபாய்வரை கிடைக்கிறது. ஏனென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய இயந்திரங்கள், தொழிற்சாலைகள் ஆண்டுக்கு 6 மாதங்களுக்குத்தான் அரைவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல நமது பகுதிகளிலும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோல, ஒரு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சுவதை drip irrigation மூலமாக 10 ஏக்கருக்கு விரிவுபடுத்தியிருந்தீர்கள்; இப்போது அதை micro irrigation என்கின்ற நுண்ணிய முறையின் காரணமாக, இருக்கின்ற நீர்ப்பாசன வசதிகளை வைத்துக்கொண்டு, அதிகப்படியான நிலங்களில் உற்பத்தி செய்வதற்கு, இந்த micro irrigation முறை மிக உதவியாக இருக்கும் என்பதால் அந்தத் திட்டத்தையும் வரவேற்கிறோம்.

அரசுப் புறம்போக்கு நிலத்திலே 10 ஆண்டுகளாக அதைப் பயன்படுத்தி, 10 ஆண்டுகள் அனுபவத்தில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம்.

விவசாயத் தொழிலாளர் நல வாரியம், வருமுன் காப்போம் திட்டம், அவற்றையும் வரவேற்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், DELL Computers, Samsung நிறுவனங்களின் மூலமாக 2,700 கோடி ரூபாய் முதலீட்டில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்கள்.

சேவை வரி விதிப்பை மாநில அரசே ஏற்க வேண்டுமென்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அருமைச் சகோதரர் மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மிகத் தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள்; ஆண்டுதோறும் 20 per cent தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கூடுதலாகத் தருகிறது என்று கூறினார்கள். அதனுடைய அளவை நீங்கள் கூட்டிக் கேட்கலாம் என்கின்ற ஒரு அறிவுறுத்தலையும் இங்கே வைக்கின்றேன்.

பிற்பகல் 12–20

அதற்கடுத்தாற்போல, வருகின்ற பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி முதல் 655 கோடி ரூபாய் முதலீட்டில் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஏழை மக்களுக்கு வழங்கவிருக்கிறீர்கள். அதையும் வரவேற்கிறோம்.

5 ஆண்டுக் காலமாக, நாட்டிலே வேலை நியமனமே இல்லை என்கின்ற ஒரு சட்டத்தை இயற்றியது கடந்த கால அரசு. அந்தச் சட்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, சட்டமன்றத்தின் வாயிலாக, "இளைஞர்களே, படித்தவர்களே, கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு வேலை தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது" என்று உத்தரவாதம் அளித்து, 5 ஆண்டுக் காலமாக வேலைவாய்ப்பு இல்லாத அவர்களுக்கு வயது உச்சவரம்பை நீட்டித்துக் கொடுத்திருக்கிறீர்கள். தமிழ்நாடு அரசுப

[திரு. மா. ராஜசேகரன்] [2007 ஜனவரி 23

பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலமாக ஆசிரியர்களைத் தேர்வு செய்திருக்கிறீர்கள். சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு வைத்து அவர்களுக்கும் வேலைவாய்ப்பை அளித்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல், கூட்டாட்சித் தத்துவத்தின் வாயிலாக மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து ஒன்றாகச் செயல்பட்டால் எப்படி ஒரு மாநில அரசு மிக உயர்வான நிலைக்குப் போகும் என்பதற்கு ஒரு பெரிய உதாரணத்தை எடுத்துக்காட்டுகின்றோம். இன்றையதினம் இருக்கின்ற, டாக்டர் கலைஞர் தலைமையின்கீழ் இருக்கின்ற அரசு, மத்திய அரசோடு ஒத்துப்போவதன் காரணமாக, நமது மாநிலத்திற்கு 57 திட்டங்களுக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாக நமது மரியாதைக்குரிய திட்ட அமலாக்க அமைச்சர் மாண்புமிகு தளபதி ஜி.கே. வாசன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; சென்னை மாநகருக்கு மட்டும் வருகின்ற 5 ஆண்டுகளில் 45,000 கோடி ரூபாய் திட்டங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

இந்த நிலையிலே, தமிழகச் சட்டமன்றமானது ஒரு பாடப்பினைச் சட்டமன்றமாக, என் போன்ற புதிய உறுப்பினர்களுக்கு ஒரு நல்ல வருட்பறையாக இருக்கின்றது. இந்தக் காலக்கட்டத்திலே, சட்டமன்றத்திற்கு வரும்போது எப்போது பார்த்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கூச்சலிடுகிறார்கள், குழப்பம் செய்கிறார்கள். அவர்களுடைய நீண்ட நாள் கோஷம் என்னவென்றால், எப்போதும் மைனாரிட்டி அரசு, மைனாரிட்டி அரசு என்று நம்முடைய அரசைக் குறை கூறுவதே அவர்களுக்கு வேலையாகப் போய்விட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மத்தியிலே கூட்டாட்சித் தத்துவம் மிகத் தெள்ளத் தெளிவாக ஒரு சிறந்த ஆட்சி முறையைத் தந்திருக்கிறது. அதன் வாயிலாக, மத்தியிலே நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி மிக அருமையாக முன்னேறி இருக்கிறது. அண்டை மாநிலமான கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற இடங்களிலே கூட்டாட்சித் தத்துவம் நடைபெற்றிருக்கிறது. அதேபோல, தமிழகத்திலும் அந்த வாய்ப்பைக் கொடுப்பீர்களேயானால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எதிர்க்கட்சிக்காரர்களின் வாயை அடைத்ததுபோல இருக்கும். எங்களுக்கும் மனநிறைவாக இருக்கும் என்று கூறி, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



2007 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையின் வாயிலாக முன்வைக்கப்பட்டிருக்கின்ற தமிழக அரசின் அறிவிப்புகளிலே, பல்வேறு நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்கின்றபோதிலும், ஒரு மூன்று அம்சங்களை நான் சுட்டிக்காட்டிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முதலிலே, வீட்டுப் பணியாளர்களுக்குத் தனியாக ஒரு நல வாரியம் அமைப்பது என்கின்ற இந்த அரசாங்கத்தின் முடிவு, இந்தியாவிலே வேறு எங்கும் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சிறப்பான ஒரு முடிவு என்பதைச் சுட்டிக்காட்டி நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, பெண்களுக்கு என்று பல்வேறு நலத் திட்டங்களைத் தொடர்ந்து அறிவித்து வருகிறது.

இன்றைக்குப் பாராளுமன்றத்திலே பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகமே, மாநிலமெங்கும் பேரணிகளை நடத்தும் என்கின்ற அறிவிப்பும்கூட வந்திருக்கிறது. அறங்காவலர் குழுவிலே பெண்களை இடம்பெறச் செய்ய வேண்டும் என்கின்ற அறிவிப்பு; அதைத் தொடர்ந்து வீட்டுப் பணியாளர்களுக்கென்று தனி வாரியம். ஏனென்று சொன்னால், வீட்டுப் பணியாளர்களாக இருப்பவர்கள், 100-க்கு 99 விழுக்காடு பெண்கள்தான். மிகவும் அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த அந்தப் பெண்களுக்கு மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்ற அந்த—domestic violence—அந்தக் குடும்ப வன்முறை தடைச் சட்டத்திலேகூட, அத்தகைய பெண்கள்பற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, யாரும் கவனிப்பாரற்றுக் கிடந்த அந்த வீட்டுப் பணியாளர்களைக் கவனத்தில் எடுத்து, இந்த அரசு அவர்களுக்கென்று ஒரு நல வாரியத்தை உருவாக்கியிருப்பது இந்த ஆளுநர் உரையிலேயே ஒரு சிகரமான அறிவிப்பு என்று நான் கருதி அதைப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

அடுத்ததாக, சிறுபான்மை மக்களுக்காக இந்த அரசு காட்டிவருகின்ற பரிவு, அக்கறை என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இப்போது இஸ்லாமிய மக்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக

[திரு. து. ரவிக்குமார்] [2007 ஜனவரி 23

மத்திய அரசால் அமைக்கப்பட்ட இராஜேந்தர் சச்சார் குழு, தன்னுடைய பரிந்துரைகளைச் சமர்ப்பித்திருக்கின்றது. அது மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை என்றாலும்கூட, அந்த அறிக்கையையும் பரிசீலித்து, அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற பரிந்துரைகளை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம் என்று தமிழக அரசு அறிவித்திருப்பது என்பது இஸ்லாமிய மக்கள்பால் இந்த அரசுக்கு இருக்கின்ற அக்கறையை, அன்பை எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது. அதையும் நான் பாராட்டி வரவேற்கின்றேன்.

அடுத்ததாக, வீட்டுமனை இல்லாத ஏழை மக்கள். அவர்களுக்கெல்லாம் ஆறு மாத காலத்திற்குள்ளே வீட்டுமனைகள் வழங்கப்படும் என்கின்ற ஓர் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்கின்ற அறிவிப்பும், பாராட்டி வரவேற்கத்தக்க அறிவிப்பாகும்.

இங்கே இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து கல்வி வளர்ச்சியில் அது காட்டுகிற அக்கறையை நாம் எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கின்றோம். என்னுடைய முதல் உரையிலும்கூட நான் அதைக் குறிப்பிட்டுப் பாராட்டினேன். இரண்டு அமைச்சர்கள் முதல்முறையாகத் தமிழக வரலாற்றிலே, கல்விக்காக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு முதல்வர் அவர்கள் எதை எண்ணுகிறார்களோ அதை நிறைவேற்றும் விதமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சிறந்த தள கர்த்தர்களாக, உயர் கல்வித் துறை அமைச்சரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய அறிவிப்புகள் காட்டுகின்றன.

இப்போது பல்கலைக்கழகங்களுக்காக, பல்கலைக்கழகப் பொதுச் சட்டம் ஒன்றை, இந்த அரசு கொண்டுவர இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இங்கே ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களில் இணைக்கப்பட்டிருந்த Affiliated Colleges என்கின்ற அந்த நிலையை மாற்றி, அந்தக் கல்லூரிகளையெல்லாம் அரசே தன்னுடைய நேரடி மேற்பார்வையில் கொண்டுவருகின்ற அந்த அறிவிப்பானது, பல்கலைக்கழகங்களிலே இருந்த பல்வேறு பிரச்சினைகளை, குறிப்பாக அங்கே எழுந்துகொண்டிருந்த பல்வேறு முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை எல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் விதமாக அமைந்திருக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. எப்படி இந்தக் கல்லூரிகளை நேரடியாக அரசுக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தோமோ, அப்படி இந்தக் கல்வி என்பது ஏற்கெனவே மாநிலங்களுடைய பட்டியலிலே



2007 ஜனவரி 23] [திரு. து. ரவிக்குமார்]

இருந்தது; பின்னாலேதான் அது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது; அப்படிப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்ட அந்தக் கல்வியை, மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் பல்வேறு கூட்டங்களிலே பேசி வருகிறார். அது நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கையும்கூட என்பதனால், அந்தக் கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கு நாம் முன்முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது இந்தப் பல்கலைக்கழகப் பொதுச் சட்டம் கொண்டுவருகின்ற இந்த நேரத்திலே, பல்வேறு மாநிலங்களில் இருப்பதைப்போல. அண்மையிலே இருக்கின்ற ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருப்பதைப்போல, அந்தப் பல்கலைக்கழகங்களினுடைய Senate. Syndicate போன்ற அவைகளிலே பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் அந்தப் பொதுச் சட்டத்திலே இருக்க வேண்டும்; மாணவர்களுடைய பிரதிநிதிகள் அந்த அவைகளிலே இடம்பெற வேண்டும் என்கின்ற கோரிக்கை இன்று பல்வேறு அமைப்புகளால் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதுபோலவே, நாம் இப்போது சமூக நீதியை அனைத்துத் தளங்களிலும் நிலைநாட்டவேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். தனியார்த் துறைகளிலும்கூட இட ஒதுக்கீடு வேண்டும் என்று இந்த ஆளுநர் உரையிலே குறிக்கப்பட்டு இருக்கின்றது. இந்த நேரத்திலே நம்முடைய பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற Senate, Syndicate போன்ற அவைகளிலே இட ஒதுக்கீடு இல்லாமல் இருப்பது, மிகப் பெரிய வேதனையான ஒரு விஷயமாகும். இந்த அவல நிலை இனியும் தொடரக்கூடாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிச்சயமாக இதை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்தப் பல்கலைக்கழகப் பொதுச் சட்டத்திலே பல்கலைக்கழகங்களுடைய Senate, Syndicate போன்ற அவைகளிலே தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், மாணவப் பிரதிநிதிகளுக்கும் இட ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு நிச்சயமாக வழிவகை செய்வார் என்று நாங்கள் நம்புகிறோம்.

இப்போது கல்வி வளர்ச்சியிலே நாம் காட்டுகின்ற அந்த அக்கறையின் வெளிப்பாடாகக் கல்லூரிகளுக்கு ஏராளமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றார்கள் என்ற அறிவிப்பும் அரசால் வெளியிடப் பட்டிருக்கின்றது. அப்படிக் கல்லூரி ஆசிரியர்களை நியமிக்கும்போது, ஏற்கெனவே சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி தாழ்த்தப்பட்ட,

[திரு. து. ரவிக்குமார்] [2007 ஜனவரி 23

பழங்குடியின மக்களுக்கு அந்தக் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களிலே வழங்கப்பட வேண்டிய பின்னடைவுப் பணியிடங்களைப் பூர்த்தி செய்து, அதன் பிறகு மற்ற இடங்களையும் நிறைவு செய்ய வேண்டுமாய் உங்களிடத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–30*

கடந்த சில ஆண்டுகளாக வருமான வரி முதலான வரிகளைக் கட்டும்போது, அதிலே 2 சதவீதம் Educational Cess என்று வசூலிப்பதை நாம் பார்த்திருப்போம். அந்த Educational Cess, கல்வி வளர்ச்சிக்கென்று இன்றைக்கு மத்திய அரசால் Income Tax–ல் மட்டுமல்ல; Service Tax போன்ற அத்தனை வரிகளிலும், 2 சதவீத Educational Cess வசூலிக்கப்பட்டு வருகிறது. அப்படி வசூலிக்கப்படுகின்ற Educational Cess என்பது, உண்மையிலேயே கல்விக்குத்தான் பயன்படுத்தப்படுகிறதா என்ற கேள்வி இன்றைக்குப் பலருக்கும் எழுந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலேயிருந்து வசூலிக்கப்படுகின்ற அந்த வரிகளிலே எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் இப்படி Educational Cess–ஆக வசூலிக்கப்பட்டது; அது நம்முடைய மாநிலத்தினுடைய கல்வி வளர்ச்சிக்காகத் திரும்பத் தரப்பட்டிருக்கிறதா என்ற கேள்வியும் இப்போது எழுகிறது. நம்முடைய மாநிலத்திற்கு உரிய அந்தப் பங்கினை நாம் கேட்டுப் பெற வேண்டும். நிச்சயமாக, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த நிதியமைச்சர் அதை மறுக்கமாட்டார் என்று நான் நம்புகிறேன்.

இப்போது தமிழகத்தினுடைய மக்களுடைய நன்மைக்கு, நலன்களுக்கு, எதிர்காலத்திலே மிகப் பெரிய ஒரு சவாலாக அமைந்திருக்கின்ற நீர் பங்கீட்டுப் பிரச்சினை என்பது, ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கிறது. காவிரி நதிநீர் ஆணையம் தன்னுடைய இறுதித் தீர்ப்பினை பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி வழங்க இருக்கின்ற நல்ல செய்தி, இப்போது நமக்கெல்லாம் வந்திருக்கின்றது. ஆனால், அந்த நல்ல செய்தி வந்திருக்கின்ற இந்த நேரத்திலே காவிரி நதிநீர் ஆணையம் தன்னுடைய இடைக்காலத் தீர்ப்பைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கியபோது 1991 ஆம் ஆண்டிலே அது இடைக்காலத் தீர்ப்பை வழங்கி, அந்தத் தீர்ப்பானது அன்றைக்கு மத்திய அரசினால், அன்றைக்குப் பாரதப் பிரதமராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்கள் தலைமையிலே இருந்த அரசினால், அரசிதழிலே வெளியிடப்பட்டபோது, 1991 ஆம் ஆண்டு, டிசம்பர் 11 ஆம் தேதி அது வெளியிடப்பட்டபோது, அன்றைக்கு கர்நாடகத்தினுடைய முதல்வராக இருந்த திரு. பங்காரப்பா அவர்கள் உடனடியாக கர்நாடக மாநிலத்திலே ஒரு Bandh–ஐ அறிவித்தார்கள். அந்த Bandh அறிவிப்பின்போது, அங்கே



2007 ஜனவரி 23] [திரு. து. ரவிக்குமார்]

வாழ்கின்ற தமிழர்களுக்கு எதிராக மிகப் பெரிய கலவரம் வெடித்து, ஏறத்தாழ 3 நாட்கள், பெங்களூர், மைசூர், சாம்ராஜ் நகர், மாண்டியா போன்ற மாவட்டங்களில் எல்லாம் அந்தக் கலவரம் பரவி, அங்கே வாழ்ந்த தமிழர்களுடைய பொருட்கள், 300 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துகள் எல்லாம், அன்றைக்குச் சூறையாடப்பட்டன; பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்; ஏறத்தாழ 10,000 தமிழர்கள் அதிலே படுகாயப்பட்டார்கள். 2004 ஆம் ஆண்டிலே உச்ச நீதிமன்றம் அவர்களுக்கெல்லாம் இழப்பீடு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதை நாமெல்லாம் அறிந்திருப்போம். ஓர் இடைக்காலத் தீர்ப்பிற்கே அப்படியொரு கலவரம் வெடித்தது என்று சொன்னால், இப்போது இறுதித் தீர்ப்பு வருகிறது; அங்கே வாழ்கின்ற நம்முடைய தமிழ்ப் பெருங்குடி மக்கள் என்ன ஆவார்களோ என்கின்ற ஒரு அச்சமும் நமக்குக் கூடவே வருகிறது. இந்த நிலையிலே அவர்களுடைய பாதுகாப்பிற்காக, ஆக வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசிடம் நாம் இப்போதே குரல் எழுப்ப வேண்டுமென்று தமிழக அரசை நான் அன்போடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது முல்லைப் பெரியாறு சிக்கலுக்காக, நாம் மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றோம். உச்ச நீதிமன்றத்திலே நாம் எடுத்து வைக்கின்ற வாதங்கள் நிச்சயமாக நம்முடைய நியாயங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லும். சர்வதேச அளவிலே நதிநீர்ப் பங்கீடு பற்றிய பிரச்சினைகளிலே, ஒரு புதிய கருத்தாக்கம் இன்றைக்குப் பேசப்படுகிறது; ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் இருக்கின்றது. அது என்னவென்று சொன்னால், கண்ணுக்குப் புலப்படாத தண்ணீர், அதாவது Virtual water என்கின்ற ஒரு concept, இப்போது நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளிலே விவாதிக்கப்படுகிறது; ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இப்போது கேரளாவிலேயிருந்து நாம் பெறுகிற தண்ணீரைவிட, அந்த மாநிலத்து மக்களுக்கு அனுப்புகிற பொருட்களிலே, மறைமுகமாக நாம் அனுப்புகிற தண்ணீரினுடைய அளவு அதிகமானது. இதைத்தான் virtual water என்று இப்போது சர்வதேச அளவிலான நிபுணர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வாதத்தை, அநத நியாயத்தை, நாம் உச்ச நீதிமன்றத்திலே எடுத்து வைப்போமேயானால், நிச்சயமாக நம்முடைய தரப்புக்கு மேலும் வலுவாக அது அமையுமென்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–35*

அடுத்ததாக, இப்போது வீட்டுமனைகள் கொடுக்கப்பட்டாலும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட

[திரு. து. ரவிக்குமார்] [2007 ஜனவரி 23

மக்கள், அவர்களுக்கென்று வீடுகள் கட்டுவதற்காக, நாம் தொகுப்பு வீடுகள் திட்டம் என்ற ஒன்றைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசால் ஒரு வீட்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் அதற்கென வழங்கப்படுகிறது. மாநில அரசு தன்னுடைய பங்குக்கு இப்போது 12 ஆயிரம் ரூபாயைக் கொடுக்கிறது. ஏற்கெனவே 9 ஆயிரம் ரூபாய் இருந்தது. கடந்த முறை நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை வைத்து, 3 ஆயிரம் ரூபாயை உயர்த்தி அறிவித்தார்கள். ஆக மொத்தம், 37 ஆயிரம ரூபாய் ஒரு வீட்டிற்கு என வழங்கப்படுகிறது. இப்போது சுனாமி பாதிப்பால் கட்டப்பட்ட வீடுகளைச் சென்று பார்க்கும்போது, வெறும் 300 சதுர அடியிலே ஒரு வீட்டை, சாதாரணமாகக் குடியிருக்கின்ற ஒரு வீட்டைக் கட்டுவதற்குக்கூட, குறைந்தது ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவாகிறது என்று அங்கே அந்த வீடுகளைக் கட்டித் தந்த தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்கின்ற நேரத்திலே, வெறும் 37 ஆயிரம் ரூபாயை வைத்து நாம் ஒரு வீட்டைக் கட்டுவது என்பது, ஆகக்கூடிய காரியமல்ல. எனவே, இந்த வீடுகளுக்குத் தமிழக அரசின் சார்பிலே ஒதுக்கப்படுகிற அந்த நிதியை, அதிலும் குறிப்பாகத் தமிழக அரசு தன்னுடைய பட்ஜெட் ஒதுக்கீட்டிலே சிறப்புக் கூறு நிதியை ஒதுக்கும்போது, அந்த நிதியில் ஒரு பெருந்தொகையை இந்த வீடுகளுக்காக ஒதுக்கி, 75 ஆயிரம் ரூபாய் தமிழக அரசின் பங்காக ஒதுக்கி, அந்தத் தொகுப்பு வீடுகளுக்கான தொகையை, ஒரு இலட்சமாக அறிவிப்பதற்குத் தமிழக முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த ஆளுநர் உரையிலேயே மிக சர்ச்சைக்குரிய, விவாதத்திற்குரிய விஷயமாகப் பேசப்படுகிற ஒரு விஷயம், புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டும் என்கின்ற அந்தத் அறிவிப்புதான். ஒரு மாநில அரசு, ஆளுநர் உரையின் வாயிலாக புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டும் என்கின்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டிருப்பது, அநேகமாக சுதந்திர இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை என்று நான் நினைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஏன் இந்த நிலையை நாம் எடுத்திருக்கின்றோம்? நூறு ஆண்டுகளுக்கும் மேலாக, நம்முடைய அரசியல் முன்னோடிகள் எல்லாம் மிகவும் உழைத்துப் பாடுபட்டு ஈட்டித் தந்த அந்த இட ஒதுக்கீட்டு உரிமைகள், இப்போது சிக்கலுக்கு உள்ளாகியிருக்கின்றன. அவையெல்லாம் இன்றைக்குப் பறிபோய்விடுமோ என்ற அச்சம், நம்மைச் சூழ்ந்திருக்கிறது. இன்னொரு புறம் மாநிலங்களுக்கு வரவேண்டிய உரிமைகள். கடந்த முறை



2007 ஜனவரி 23] [திரு. து. ரவிக்குமார்]

முதல்வர் அவர்கள் அன்றைக்குச் முதல்வராக இருந்தபோதே நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்குச் முதல்வராக இருந்தபோதே நம்முடைய சொன்னார்கள்: இராஜமன்னார் குழு பரிந்துரைகள் அமல்படுத்தப்பட வேண்டும்; அரசமைப்புச் சட்டத்திலே 356-வது பிரிவு, 363-வது பிரிவு போன்றவை நீக்கப்பட வேண்டுமென்று அன்றைக்கு வலியுறுத்தினார்கள். ஒரு மாநில அரசு, சட்டம் ஒன்றை இயற்றி, அதைக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்கோ, கவர்னருடைய ஒப்புதலுக்கோ அனுப்பும்போது, அவர்கள் அதை அப்படியே வைத்துக் கொண்டிருக்கக் கூடாது; அவர்கள் கையெழுத்திட்டு அனுப்புவதற்கு ஒரு கால வரையறையை நிர்ணயிக்க வேண்டுமென்று அன்றைக்கு முதல்வர் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

நம்முடைய வரலாறு எல்லோருக்கும் நன்றாகவே நினைவு இருக்கும். முன்னாலே நாம் எல்லாம் திராவிட நாடு என்று தனி நாடு கோரினோம். (மணியடிக்கப்பெற்றது) பின்னாலே அதை விட்டு விட்டு, மாநில சுயாட்சி என்று நாம் இப்போது இந்திய இறையாண்மையை, ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கின்ற நேரத்திலே நம்முடைய மாநில உரிமைகள் தொடர்ந்து பாதிக்கப்படுமேயானால், பறிக்கப்படுமேயானால், நாம் இப்படிப்பட்ட ஒரு தீவிரமான நிலையை எடுப்பது தவிர, வேறு வழியே இல்லை என்கின்ற ஒரு நிலையில்தான் புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்கின்ற ஒரு நிலையை இன்றைக்கு அறிவிக்க வேண்டிய சூழலுக்கு ஆளாகியிருக்கின்றோம். ஆனால், இப்போது இருக்கிற அரசமைப்புச் சட்டம், நம்முடைய சமூக நீதிக் கொள்கைகளை நிறைவு செய்வதற்குத் தடையாக இருக்கிறதா என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. அரசமைப்புச் சட்டத்தை இயற்றிய நம்முடைய முன்னோடிகள் இந்த விஷயங்களை எல்லாம் ஆய்வு செய்து, இந்தியச் சூழலுக்கு ஏற்றபடியான, ஜனநாயக அமைப்புக்கு ஏற்றபடியான, ஓர் அரசமைப்புச் சட்டத்தைத்தான் வரையறுத்திருக்கின்றார்கள். இந்த அரசமைப்புச் சட்டத்தினுடைய சிறப்பே, இதனுடைய நெகிழ்ச்சித் தன்மைதான் என்று அன்றைக்கு அரசமைப்புச் சட்டம் பற்றி, அவையிலே அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசமைப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிறபோது அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மேலும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள்: "இப்போது இந்த அரசமைப்புச் சட்டத்தை இங்கே நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம்; இது ஒரு நபருக்கு ஒரு வாக்கு, எல்லா வாக்குக்கும் ஒரே மதிப்பு என்கின்ற ஒரு சமத்துவத்தை ஏற்படுத்தியிருக்கிறது; அரசியல் தளத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்தச் சமத்துவம், பொருளாதாரத் தளத்திலே இல்லை; சமூக தளத்திலே இல்லை; சமூகத் தளத்திலே, பொருளாதாரத் தளத்திலே

[திரு. து. ரவிக்குமார்] [2007 ஜனவரி 23

ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன; அந்த ஏற்றத்தாழ்வுகள் சமமாக்கப்பட்டு, இங்கே முழுமையான சமத்துவம் (மணியடிக்கப்பெற்றது) நிறைவேற்றப்படாவிட்டால், ஒரு நாளைக்கு அந்த ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படுகிற மக்கள், இந்த அரசியல் ஜனநாயகத்தினுடைய அடிப்படைகளையே தகர்ப்பார்கள்" என்று அன்றைக்கே அம்பேத்கர் அவர்கள் எச்சரித்தார்கள். அந்த எச்சரிக்கையை நாம் கடந்த 60 ஆண்டுகளாக, பல விதங்களிலே நம்முடைய அரசியலமைப்புகளைச் சரியாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாத காரணத்தினாலேதான், (மணியடிக்கப்பெற்றது) இப்போது அரசினுடைய அங்கங்களாக இருக்கின்ற Legislature, Executive, Judiciary என்கின்ற அந்த அங்கங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு, Judiciary என்கின்ற அந்த நீதித் துறையானது, எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னை இறுத்திக்கொள்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. இதன்காரணமாக, நாம் புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்வோமேயானால், இன்றைக்கு 60 ஆண்டுகளாக இந்த நாட்டிலே ஒரு மதச் சார்பின்மையை, ஒரு ஜனநாயகத்தை, ஒரு கூட்டாட்சித் தத்துவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்த அந்த அரசமைப்பினுடைய அடிப்படையையே நாம் தூக்கியெறிந்துவிடுகிறோம் என்றுதான் பொருளாகும்.

பிற்பகல் 12–40

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள்: 'இந்த அரசமைப்புச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுமேயானால், அதை எரிக்கிற முதல் நபராக நான் இருப்பேன்' என்று அன்றைக்கு அவர்கள் அறிவித்தார்கள். அப்படியாக துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற நேரத்திலே, இத்தகைய ஒரு தீவிரமான நிலையை நாம் எடுப்பது தவறில்லை. அரசமைப்புச் சட்டம் என்பது, ஒரு புனித நூல் அல்ல; அது மாற்றக்கூடாத விஷயம் அல்ல; ஏற்கெனவே, நூறு முறை அளவிற்கு அது திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இப்போது உலகத்திலேயே இருக்கின்ற அரசமைப்புச் சட்டங்களிலே, மிக நீளமான, மிக விரிவான அரசமைப்புச் சட்டம் நம்முடைய அரசமைப்புச் சட்டம்தான். இன்றைக்கு வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, ஒரு கூட்டாட்சித் தத்துவத்தை, ஒரு மதச் சார்பின்மை தத்துவத்தை, ஜனநாயகத்தைத் தன்னுடைய ஆதாரமாகக் கொண்டிருப்பது, நம்முடைய அரசமைப்புச் சட்டம். நாம் வலியுறுத்துகிற இந்தச் சமூக நீதியானது, அரசமைப்புச் சட்டத்தினுடைய 'Preamble' என்கின்ற 'முகவுரை'-யிலேயே உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த 'Preamble' என்பதும், அரசமைப்புச் சட்டத்தின் மற்றப் பிரிவுகளைப் போலவே அதற்கு இணையாக வைத்துப்



2007 ஜனவரி 23] [திரு. து. ரவிக்குமார்]

பார்க்கப்படவேண்டியதுதான் என்று பல்வேறு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் கூறியுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், 19 நிமிடங்களுக்குமேல் பேசிவிட்டீர்கள்; இன்னோர் உறுப்பினர் பேசவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. து. ரவிக்குமார்:** எனவே, இந்தப் புதிய அரசமைப்புச் சட்டம் என்கின்ற அந்தக் கோரிக்கையை நாம் விரிவாகப் பரிசீலித்து, ஏற்கெனவே இருக்கின்ற அரசமைப்புச் சட்டத்திலேயே நம்முடைய கோரிக்கைகளையெல்லாம் உள்ளடக்க முடியும்; நம்முடைய சமூக நீதியை அதன்மூலமாகவே காப்பாற்றிவிட முடியும் என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டாம்; ஏற்கெனவே இருக்கின்ற அரசமைப்புச் சட்டத்திலே இவற்றையெல்லாம் உள்ளடக்கக்கூடிய திருத்தங்கள் மட்டும் போதும் என்கின்ற அளவிலே நாம் ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் இருக்கின்ற இலங்கையிலே, மீண்டும் நம்முடைய தமிழ் மக்கள் அல்லல்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு. (குறுக்கீடு) எவ்வளவு நேரமாக நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்; நீங்கள் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே? (குறுக்கீடு) முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. து. ரவிக்குமார்:** அவர்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காண்பதுபற்றி இதிலே, நம்முடைய ஆளுநர் உரையிலே வாக்குறுதிகள் தரப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற முன்முயற்சிகள் காரணமாக இப்போது அவர்களுக்கு ஓரளவிற்குப் பாதுகாப்பு ஏற்பட்டிருந்தாலும்கூட, முழுமையானத் தீர்வு அங்கே எட்டப்படுவதற்கு, மேலும் நாம் கவனம் செலுத்திப் பாடுபடவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

***திரு. கே. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்றோர்களும் சான்றோர்களும் அமர்ந்திருந்த இந்தச் சட்டமன்றத்தில், என்னையும் அமர வைத்து அழகு பார்த்த, தாயுள்ளம்

கொண்ட தலைவர், எட்டுக் கோடி தமிழர்களின் ஒட்டுமொத்த முகவரியாக இருக்கும் தமிழினத் தலைவர், ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் வேதனையைப் போக்கும் வெற்றித் திருமகன் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், சேரன் செங்குட்டுவனுக்குக் கிடைத்த வில்லவன்கோதைபோல், சோழன் குலோத்துங்கனுக்குக் கிடைத்த கருணாகரத் தொண்டைமான்போல், தலைவர் கலைஞருக்குக் கிடைத்திருக்கின்ற, ஆணாக அவதரித்த, எங்கள் தமிழ் அன்னை பேராசிரியர் அவர்களுக்கும், சங்கத் தமிழ்தந்த தங்கத் தளபதி, உதயசூரியன் தந்த எங்கள் இதய சூரியன், வளரும் தலைமுறையை மலரும் தலைமுறையாக மாற்றுவதற்கு ஓயாது உழைத்து, உள்ளாட்சியில் நல்லாட்சி வழங்கி, எல்லோர் இதயங்களையும் அரசாட்சிச் செய்கின்ற அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிக்க இந்தியை விரட்டி அன்னைத் தமிழைப் பாதுகாக்க மாணவப் படையைத் திரட்டி வரலாற்றுக் கடமை செய்து மாணவப் பருவத்தில் எங்களை வளர்த்த அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்தின் விடிவெள்ளி, மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், கடலூர் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மத்திய அமைச்சர்கள் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களுக்கும், அண்ணன் இராசா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

காலம் தமிழர்களுக்குக் கொடுத்திருக்கின்ற கருணையின் கொடை; சோதனைகளையும், வேதனைகளையும் சாதனைகளாக்கிச் சரித்திரம் படைக்கின்ற தலைவர் அவர்களின் பொற்கால ஆட்சிக்கு நற்சான்று தருகின்றவிதத்தில், பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில், மேதகு கவர்னர் அவர்களின் உரையைப் பாராட்டி, வாழ்த்தி உரையாற்றுகின்ற இந்த நேரத்தில், நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில், உள்ள மகிழ்ச்சியோடும், உணர்வு பெருக்கோடும், இந்த அவையில் என் கன்னிப் பேச்சினைத் தொடங்குகிறேன்.

*"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை"*



என்ற அய்யன் வள்ளுவனின் குறளின்படி, தலைவர் கலைஞர் அவர்கள்,

*"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"*

என்று சொல்லப்படுகின்ற உழவர்கள் வாழ்க்கையில், ஒளியேற்றுகின்றவிதத்தில், விவசாயம் செய்வதற்காக 50 ஆயிரம் உழவர்கள், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தொகையான ரூ. 7 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்து, உழவர்களின் அகமும், முகமும் மலரச் செய்த ஆட்சி, தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியாகும்.

இந்தியாவில் எந்த மாநில அரசும் இலவச மின்சாரம் வழங்க முன்வரவில்லை. 1989 ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக முதலமைச்சராக இருந்தபோது, இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இதற்குமுன் இருந்தவர்கள், யூனிட்டுக்கு ஒரு பைசா குறைக்க மறுத்தார்கள். ஆனால், 'உழவன் சேற்றில் கை வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்கமுடியும்' என்ற நிலையை உணர்ந்து, தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கி வருகின்ற அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு.

*"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு*
*வாழும் மனிதருக் கெல்லாம்"*

என்ற பாரதியின் எண்ணத்திற்கு வண்ணம் சேர்க்கின்றவிதத்தில், ஏழையெளிய மக்களின் வயிற்றுக்குச் சோறிடும்விதத்தில், பசிப் பிணியைப் போக்கும் அருமருந்தாக, ரேஷன் கடைகளிலெல்லாம் இரண்டே ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குகின்ற ஆட்சி, தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"காணி நிலம் வேண்டும்–பராசக்தி*
*காணி நிலம் வேண்டும்"*

என்று பாரதியார் பாடியது, பெரியாரின் சிந்தனைகளை. எனவேதான், தலைவர் அவர்கள், தமிழன் பிறக்கின்றபோது நிலம் இல்லாமல் பிறக்கலாம்; ஆனால், இந்த மண்ணிலே மறைகின்றபோது, சொந்த நிலத்தோடு எம் தமிழன் மறைந்தான் என்ற நிலையை உருவாக்கி, எல்லோருக்கும் எல்லாம் என்கிற பொதுவுடைமைக் கொள்கைக்கு உயிரூட்டிய அரசு, கலைஞர் அவர்களின் அரசாகும்.

[திரு. கே. திருநாவுக்கரசு] [2007 ஜனவரி 23

*"சாலையோரத்திலே வேலையற்றதுகள்;*
*வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்;*
*வேந்தே! அதுதான் காலக்குறி"*

என்ற அண்ணாவின் பொன்மொழிகளை இதயத்தில் சுமந்த தலைவர் கலைஞர் அவர்கள், படித்துப் பட்டம் பெற்றும் வேலையில்லாத இளைஞர்கள், விரக்தியின் விளிம்பில் இருந்த இளைஞர்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்திருந்தால், அந்த இளைஞர்களின் ஏக்கத்தைப் போக்கும்விதத்தில், ஊக்கத் தொகை வழங்கி, இளைஞர்களை ஊக்குவித்த அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசாகும். எனவே, தந்தை பெரியாரின் சிந்தனைகளை, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் அரசமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி நல்லாட்சி வழங்கிக் கொண்டிருக்கிற அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய பொற்கால அரசாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாட்சி வழங்கிக் கொண்டிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், உளுந்தூர்பேட்டைத் தொகுதியின் கோரிக்கைகளாகச் சிலவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்காக இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

உளுந்தூர்பேட்டையில் தற்போதுள்ள அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை, சுமார் 2,640 மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். ஆனால், 50 சென்ட் பரப்பளவுள்ள பள்ளியில், மிகவும் நெருக்கடியில், வகுப்பறை வசதிகள் இல்லாமல், அசோகர் கால மரங்களின்கீழேயும், verandah-க்களிலும் வகுப்பறைகள்; விளையாட்டு மைதானமே கிடையாது. போதிய கழிப்பறை வசதிகளும் இல்லை. எனவே, இப்பள்ளியை விரிவுபடுத்த, உளுந்தூர்பேட்டையில் ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குப் பாத்தியமான, 2 ஏக்கர் 24 சென்ட் பரப்பளவுள்ள இடத்தை ஒதுக்கிக் கொடுத்து, புதியதாகப் பள்ளிக் கட்டடம் கட்டித்தர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைப் பார்வையோடு பரிசீலித்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்குப் புகைப்பட ஆதாரங்களுடன் இதனைக் கொண்டு சென்றுள்ளேன் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பகுதி மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற, விழுப்புரம் அல்லது கடலூரில் உள்ள அரசுக் கலைக் கல்லூரியை நாட வேண்டிய நிலை. ஆனால், மாணவர்களின் தேர்ச்சிக்கேற்ப, கல்லூரிகளில் சேர்க்கை அனுமதி கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுவதோடு, பல மாணவர்கள் உயர் கல்வி தொடர முடியாத சூழ்நிலை. எனவே, உளுந்தூர்பேட்டையில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தந்து, இப்பகுதி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தித் தருமாறும் வேண்டுகிறேன்.



2007 ஜனவரி 23] [திரு. கே. திருநாவுக்கரசு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதியில், வேப்பூரிலிருந்து அரசூர் வரை செல்லும் பகுதியில் சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில், அடிக்கடி விபத்துகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அவசர சிகிச்சைக்குக்கூட, 40 கிலோ மீட்டர் அல்லது 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, விழுப்புரம், கடலூர் அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டியிருப்பதால், உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. எனவே, உளுந்தூர்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி, நவீன வசதிகளுடன் மருத்துவச் சிகிச்சை அளிக்க உதவ வேண்டுமாய்க் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகளைக் குறைக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உளுந்தூர்பேட்டையில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு, உளுந்தூர்பேட்டை பகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில், தற்போது மூன்று சார்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. விபத்து வழக்குகளையும், உரிமையியல் மற்றும் குற்ற மேல்முறையீட்டு வழக்குகளையும் நடத்துவதற்குப் பொது மக்கள், உளுந்தூர்பேட்டை பகுதியிலிருந்து வெகுதூரம் செல்ல வேண்டியிருப்பதால், இந்த மூன்று சார்பு நீதிமன்றங்களில், ஒரு சார்பு நீதிமன்றத்தை உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்திற்கு மாற்றி, பொது மக்களுக்கு உதவிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத்தைப் பாதுகாக்கின்ற தாயாக விளங்குகின்ற தலைவர் அவர்களே, என் தொகுதி, பாமர மக்கள் நிறைந்த தொகுதி. தங்கள் நலத் திட்டங்கள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாய் என்பது, பெருந்தடையாக உள்ளது. எனவே, ஏழையெளிய மக்கள் பலன்பெற, வருமான வரம்பை ரூபாய் 20 ஆயிரம் என அறிவிக்க வேண்டுமெனத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

*'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
*மான முடைய தரசு'*

என்ற வள்ளுவரின் வாய்மொழிபடி நடக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் அரசைப் பாராட்டி வாழ்த்திய மேதகு ஆளுநர் உரைக்கு, இம்மாமன்றத்தின்மூலம் எனது கனிவான நன்றியைக் கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மகாகனம் பொருந்திய பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எனக்கு கனம் கிடையாது; நான் ஒல்லியாகத்தான் இருக்கிறேன்! (சிரிப்பு)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற நடைக்கேற்ப, இந்த ஆட்சியில் பயன் அடையாதவர்கள் வேறு எந்த ஆட்சியிலும் பயன் அடையமாட்டார்கள் என்பதுபோல, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உலகமே பறைசாற்றும் விதத்திலே அடித்தட்டு மக்கள்மீது அளவறியா அக்கறை கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக அரசு செய்த சாதனைகளையும், அத்தனை துறைகளையும் முழுமையாகக் கவனித்து, நன்கு cover செய்த Governor உரைமீது பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பொதுவாக, சட்டமன்றம் கூடுகிறது என்று சொன்னால், குளிர்கால சட்டமன்றக் கூட்டத் தொடர், பட்ஜெட் கூட்டத் தொடர், இப்பொழுது கவர்னர் உரைமீது கூட்டத் தொடர் என்று பெயர் வைப்பார்கள். ஆனால், இந்த அரசுசைப் பாராட்டவே ஒரு கூட்டத் தொடர் கூட்ட வேண்டுமென்று சொன்னால், அது இந்தத் தமிழக அரசாங்கம் செய்கின்ற சாதனைகளாலதான் என்பதை இந்த நேரத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். சொன்னால் சொல்லில் அடங்கா; எழுதினால் ஏட்டில் அடங்கா.

*"எத்தனை கோடி யின்பம் வைத்தாய் இறைவா!"*

என்ற மகாகவி பாரதி பாடிய பாடலுக்கேற்ப, இப்பொழுது பெண்களைத் தெய்வமாக மதிக்கின்ற ஓர் அரசாங்கம், தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர்





கலைஞர் காரணம் என்பதனைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், சமையல் எரிவாயு அடுப்பு, கலர் டி.வி., திருமண உதவி, தாய் வீட்டுச் சீதனமாக மகப்பேறுத் திட்டங்கள், விதவை பென்ஷன், முதியோர் பென்ஷன் என்று சமுதாய உத்தரவாதங்களைத் தட்டாமல், தவறாமல் கொடுக்கின்ற இலக்கண அரசாங்கத்தைச் சத்தம் இல்லாமல் நடத்திக்கொண்டு வருகிறார் நம் உலகத் தமிழர்களில் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர். சங்க காலத்தில் நக்கீரனார் பாடிய

*'செல்வத்துப் பயனே ஈதல்'*

என்பதற்கேற்ப, எடுத்துக்காட்டாக விளங்குகிறது அரசு. நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், இந்த அரசாங்கம் திவாலாக ஆகட்டும் என்று சொன்னார்கள். ஆனால், இந்த அரசாங்கம், திவாலை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு செய்யக்கூடிய ஒரு திறமை வாய்ந்த ஓர் அரசாங்கம். காரணம் பட்ஜெட்டிலே சொன்னதுபோல, ஓர் அரசுக்குத் தேவை,

*'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு'*

என்பதற்கேற்ப, இந்த அரசாங்கத்திற்குத் தெரியும், எப்படிப் பொருளை ஈட்டுவது; அதை எப்படிச் சாமர்த்தியமாகச் செலவழிப்பது என்பது. இந்த அரசாங்கம் உலக அரங்கத்திலே இன்று எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

முதலிலே, என்னுடைய செய்யாறு தொகுதியிலே சிப்காட் தொழிற்சாலை 3,500 கோடி ரூபாய் முதலீட்டிலே இப்பொழுது வந்தமைக்கு, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களையும், என்னுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. வேலு அவர்களையும் மனதார நான் பாராட்டுகின்றேன். என்னுடைய நன்றிதனைச் செய்யாறு தொகுதி மக்கள் சார்பாக உரித்தாக்குகின்றேன். என்னுடைய பகுதிக்கு, சிப்காட் தொழிற்பேட்டையிலே ஒரு கணினி மென்பொருள் தொழிற்சாலை வந்திருந்தால்கூட, நான் இவ்வளவு சந்தோஷப்பட்டிருக்க மாட்டேன். ஏனென்றால், என்னுடைய பகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. அங்கே மென்பொருள் படித்தவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஏதோ வெளி தொழிற்சாலை வந்தால், யாருக்கு என்ன பயன்? ஏதோ வெளி மாநிலத்திலிருந்து வருபவர்களுக்குத்தான் வேலை கிடைக்கும். ஆனால், இப்பொழுது தோல் தொழிற்சாலை, ஒரு shoe நிறுவனம் வந்திருப்பதன் காரணமாக, நிச்சயமாக 15 ஆயிரம் குடும்பங்கள் இன்று பிழைக்கின்ற

ஒரு நல்ல நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நான் ஓட்டுக் கேட்கும்பொழுது, 200 ரூபாய் ஒரு செண்ட் விற்ற அதே இடத்திலே, 30 ஆயிரம் ரூபாய் ஒரு செண்ட் விற்கும் அளவிற்கு இன்று இலட்சாதிபதிகள் உருவாகிவிட்டார்கள் என்று சொன்னால் அத்தனை பெருமையும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதிலே இந்த நேரத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, புறவழிச் சாலை. என்னுடைய தொகுதியிலே புறவழிச் சாலை வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக அதற்கு அத்தனை நடவடிக்கையும் மேற்கொண்டு, அதற்கும் இப்பொழுது ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, அவருக்கும் என்னுடைய நன்றி.

*பிற்பகல் 12-55*

நடுநிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா' என்பதுபோல, என்னுடைய பகுதிக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், நல்ல பல பேருந்துகளை, புதிய route-களைக் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கும் என்னுடைய நன்றி.

கால்நடை மருத்துவமனை sub-centre-ஐ, பிரம்மதேசம் என்ற பகுதியிலே கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உடனடியாகத் தந்தமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இது ஒரு கூட்டுக் குடும்பமாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பயந்துவிடாதீர்கள், என்னடா இவர்கள் கூட்டணி பற்றிப் பேசுகிறார்களே என்று. கூட்டுக் குடும்பத்திலே அக்கா இருக்கிறார், தங்கை இருக்கிறார், தம்பி இருக்கிறார், அண்ணன் இருக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுவை பிடித்திருக்கும். ஒருவருக்குக் காரம் பிடித்திருக்கும், ஒருவருக்கு இனிப்புப் பிடித்திருக்கும். ஆனால், நீங்கள் படைக்கின்ற விருந்தை நாங்கள் சுவைக்காமல் இல்லை. எங்களுக்கு என்று தனி உணர்வுகள் இருக்கின்றன; எதிர்பார்ப்புகளும் இருக்கின்றன. அது என்னவென்றால், இன்றையதினம் உலக அரங்கிலே, புவி ஈர்ப்பு சக்திதான் மிகவும் சக்தி வாய்ந்தது. அதற்கு ஈடாக அன்னை சோனியா காந்தி





இருக்கிறார் என்பதனை நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் திரும்பிப் பார்த்து, இந்தியாவுக்குக் கைகொடுக்கின்ற ஓர் உயர்ந்த நிலையில், அன்னை சோனியா காந்தி அவர்களும், எளிமையின் கருவூலமாகத் திகழுந்து கொண்டிருக்கும் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தந்த திட்டம்தான், 'கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்'. இந்தத் திட்டத்திலே என்னுடைய மாவட்டமும் பயனடைகின்றது. இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால், ஒருவன் வேலை செய்தால், 80 ரூபாய் கண்டிப்பாகக் கிடைக்கும். அவர்களுக்கு ஓர் அடையாள அட்டை தருகிறார்கள். அந்த அடையாள அட்டையிலே யாருடைய படமும் இல்லை. இங்கே நாங்களும் ஒவ்வொரு அரசாங்க நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போதும், நம்முடைய கலைஞர் அவர்களுடைய இதயக் கருவூலத்திலே பிறந்த அத்தனை சிந்தனைகளையும் செயலாக்கிக்கொண்டிருக்கின்ற வேளையிலே, டாக்டர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்தைப் பார்க்கின்றோம். ஆம்! அந்தச் சான்றிதழ்களை எல்லாம் வீட்டிலே வைக்கும்பொழுது, பூஜை அறையிலே வைக்கும்பொழுது, தெய்வமாகத்தான் நாம் மதிக்கின்றோம். அதேபோல் எங்களுக்கும் ஆசை இருக்காதா? கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தைத் தந்த அன்னை சோனியா காந்தி அவர்களுடைய படமும், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடைய படமும், டாக்டர் கலைஞர் அவர்களுடைய படமும் அந்த அடையாள அட்டையிலே இருக்க வேண்டுமென்ற எங்களுடைய பணிவான வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், விவசாயக் கடன் இரத்தைபோல, கைத்தறி நெசவாளர்கள் வீட்டு அடைமானக் கடன் வாங்கியிருக்கிறார்கள்; கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் குடும்பங்கள், ஒரு இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில் கடன் வாங்கிவிட்டு, இப்போது ஏழு இலட்சம் ரூபாய், எட்டு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து ஜப்தி நடவடிக்கை எடுக்கும் அளவிற்கு வந்துவிட்டது; அவர்களுடைய கடன் அத்தனையும் கிட்டத்தட்ட ஒரு 800 கோடி ரூபாய் இருக்கும்; அதையும் இரத்து செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றோம்.

மேலும், எங்கள் தொகுதியிலே சுகாதார வசதி தேவை. என்னுடைய சொந்த அண்ணன் மகள், நான்கு மணி வரை விளையாடிக் கொண்டிருந்தாள்; பத்து வயதுதான். நான்கு மணிக்கு வயிற்று வலி என்று செய்யாறு பொது மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டாள். மூன்று மணி நேரத்திலே அவளுடைய உயிர் பிரிந்தது. இது என்னுடைய

சொந்த அண்ணன் மகள் என்பதற்காக அல்ல; எத்தனையோ அண்ணன் மகள், என்னுடைய பங்காளிகள், உறவினர்கள், என்னுடைய மக்கள் செய்யாறு தொகுதியிலே இருக்கின்றார்கள்; அத்தனைபேருடைய சுகாதாரம், மருத்துவ வசதி மேம்பட வேண்டும். இதுசம்பந்தமாக நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிறைய ஆய்வை நடத்தினோம். எப்படி இதிலிருந்து நாம் மீள்வது, எப்படி இந்தச் செய்யாறு தொகுதிக்கு மருத்துவ வசதியை மேம்படுத்துவது என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து, பேசினோம். முடிந்தவரை அவரும் செய்துகொண்டிருக்கிறார். ஆனால், போதிய மருத்துவர்கள் இல்லை என்பதனை இந்த நேரத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். தயவுசெய்து எங்களுடைய தொகுதிக்கு மருத்துவ வசதிகள் சற்று அதிகப்படுத்திக் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரம்மதேசம் புதூர் பாலம் என்ற ஒரு பாலம் நிச்சயமாகத் தேவை. இந்த ஒரு வேண்டுகோளையும் இந்த அரசாங்கம் செவிசாய்க்கும் என்று நம்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) மாவட்டத்திற்கு ஓர் அணை நிச்சயமாகத் தேவை. நீர்த்தேக்கத்திலே நாம் பின்தங்கியிருக்கிறோம். காமராஜர் அவர்கள் மேட்டூர் அணையைக் கட்டியபிறகு, பெரிய அணை ஏதும் தமிழகத்திலே இல்லை. எனவே, மாவட்டத்திற்கு ஓர் அணை கட்டிக்கொடுத்தோம் என்று சொன்னால்—இன்று எத்தனையோ இலவசமாகத் தருகின்றோம்—அணையைக்கட்டி நீரைத் தேக்கம் செய்தால், நிச்சயமாக வருங்காலத்திலே நூறு வருடங்கள் கழித்துகூட, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரை இந்த உலகமே பறைசாற்றும்; போற்றும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மேலும் எங்களுடைய தொகுதியிலே, சட்டமன்ற உறுப்பினர் என்ற பெயரிலே, ration card-க்கு நாங்கள் கையெழுத்துப் போட்டுத் தருகிறோம்; O.A.P.-க்கு நாங்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கின்றோம்; விதவை பென்ஷனுக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம்; ஆனால், எந்த ஒரு விண்ணப்பமும் இதுவரை நடந்தாகவில்லை. இது என்னுடைய உணர்வு மட்டுமல்ல; சக உறுப்பினர்களுடைய உணர்வாக நான் இதைக் கருதி, இந்த நேரத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டிலே ஆண் பிள்ளை இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி—இருந்து கவனித்தால் சந்தோஷம்—இல்லையென்றாலும், அந்த ஏழை விதவைப் பெண்களுக்கு





நாம்தான் உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே, அவர்களுக்கு உடனடியாக இந்த அரசாங்கம் நிவாரண உதவியைத் தர வேண்டும். ஏனென்றால்,

*"திட்டம்போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கொண்டேயிருக்குது—அதைச்*
*சட்டம்போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்குது"*

என்பதுபோல, நாம் இந்தச் சட்டத்தை ஒருபுறம் வைத்துவிட்டு, மனிதாபிமான அடிப்படையிலே அவர்களுக்கு நிச்சயமாக ஏதாவது உதவிகளைச் செய்தாக வேண்டும்.

*பிற்பகல் 1-00*

முக்கியமான ஒரு விஷயம். (மணியடிக்கப்பெற்றது) நேற்றையதினம், Highways Research Station பற்றிப் பேசினேன். இது முக்கியமான ஒரு விஷயம். ஏனென்றால், கிண்டியிலே ராஜ் பவனிற்கு எதிரே, கிட்டத்தட்ட 1954 ஆம் ஆண்டு நம்முடைய கர்ம வீரர் காமராஜர் அவர்களுடைய திருக்கரங்களால், Highways Research Station என்பதைத் தொடங்கினார். இந்த Research Laboratory-யினுடைய முக்கிய அம்சம் என்னவென்றால், உலகிலேயே சென்னையில் மட்டும்தான் இருக்கிறது. அடுத்தபடியாக U.K.-விலே இருக்கிறது. இதிலே உள்ள Circular Test Tracks, Heavy duty Test Floor என்ற இரண்டு சாதனங்களை வேறு இடத்திற்கு மாற்றியமைத்தால், நிச்சயமாக அதே தரத்தைக் கொண்டுவர முடியாது. எனவேதான் நான் சொல்கின்றேன்; காமராஜர் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கப்பட்டது இந்த Research Laboratory; மேலும், இதிலே இருக்கின்ற சாதனங்களை நீங்கள் மாற்றியமைக்க முடியாத ஒரு காரணத்தினால், அப்படிப்பட்ட ஒரு பெருமை இருப்பதனால்—Anna University இப்போது விரிவடைந்து கொண்டிருக்கிறது; கோயமுத்தூரிலும் வருகிறது; மாணவர்களுக்கு மாணவர்கள் விடுதி ஆங்காங்கே, அந்தந்த மாவட்டங்களில் வருகிறபோது, இந்த இடம் தேவைப்படாது; மேலும், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தை இப்போது உயர் கல்வித் துறைக்குக் கொடுத்துவிட்டார்கள்; அதை வைத்துக்கொண்டு அவர்கள் மாணவர்கள் விடுதி கட்டட்டும்—காமராஜர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தைத் தயவுசெய்து இடிக்காமல் இருங்கள் என்று உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு

இவ்வளவுதான் நேரம் என்று சொல்லித்தான், உங்களைப் பேச அனுமதித்தேன்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே முக்கியம்தான்; சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இது மிகவும் முக்கியம். 1947–ல் நாம் சுதந்திரம் பெற்றோம். இன்று 2007. 60 வருடங்கள் ஆகின்றன. ஆனால், 1957–லே முதன்முதலாக, சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்திற்கு வந்தவர் யார் தெரியுமா? நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர். இந்த ஆண்டு அவருக்குப் பொன்விழா ஆண்டு. 50 வருடங்கள் ஆகிவிட்டன. 50 வருடங்களாக, சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்தை அலங்கரித்து, மக்கள் பணியே மகேசன் பணி என்று ஒரு உயரிய இலட்சியத்திலே இருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த 60 வருடங்களில், 50 வருடங்கள்; உலகத்திலேயே யாருக்கும் கிடைக்காத மிகப் பெரிய பேறு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அவரே அவர் மறந்திருக்கலாம். ஆனால், நாம் அனைவரும் அவருக்குப் பொன்விழா எடுக்க வேண்டும், எடுக்க வேண்டும் என்று கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், உங்களுக்கு நன்றி. உட்காருங்கள்.

## 5. அரசினர் தீர்மானம்

### ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13(2)–ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்து, 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி





(திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007) இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல். 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007). மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@22-1-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 24-1-2007 (புதன்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை. (2006-2007)

4. பொதுக் கணக்குக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2006-2007)

5. பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2006-2007)

6. பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2006-2007)

7. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2006-2007)

8. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2006-2007)

9. பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2006-2007)

10. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2006–2007)

11. பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2006–2007)

12. பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2006–2007)

13. பொது நிறுவனங்கள் குழுவின் நான்காவது அறிக்கை. (2006–2007)

14. பொது நிறுவனங்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2006–2007)

15. பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது அறிக்கை. (2006–2007)

16. பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை. (2006–2007)

17. பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2006–2007)

18. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2006–2007)

19. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை. (2006–2007)

20. பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2006–2007)

21. பொது நிறுவனங்கள் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை. (2006–2007)

22. பொது நிறுவனங்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2006–2007)

23. பொது நிறுவனங்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2006–2007)

24. பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2006–2007)

---

227482

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.